காரநேஷன் தர்பார் பிரசுரம் நெ 1.

# 5-வது ஜார்ஜ்

I

# அரச சக்ரவர்த்தியின் சரித்திரம்.

413
I-12

இது
மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர்
ஸி. எஸ். ராமசுவாமி ஐயரால்
எழுதப்பட்டது.

ஸ்ரீ பாரிஜாத பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பட்டது,
சென்னை.

விலை அணா 8. 1911

Copy right.

DEDICATED

TO

Rao Bahadur A. C. Pranatharthihara Iyer B.A.,

**INSPECTOR OF SCHOOLS.**

FOURTH CIRCLE

**MADRAS.**

BY

THE AUTHOR

*As a mark of esteem and love.*

# PREFACE.

THE uniqueness of the occasion of the Delhi Durbar prompted me to write this humble work not only to commemorate the great event but to inculcate especially in children under education feelings of personal devotion and loyalty to Their Imperial Majesties the King Emperor and the Queen Empress. The thought that no more fitting tribute of loyalty could be paid by a journalist to the august Royal House of the British Sovereigns of India than by a biography of the first Emperor who, in his royal condescension, has thought fit to visit India, and thus to inaugurate, by his personal presence amongst us, and by the holding of his Royal Durbar in the historic city of Delhi, a new era in the history of this ancient land and of the British connexion with it—this thought grew into a passion and the result of it has been this book. Such a work as this needs no further words of recommendation either from me or any other. I have toiled hard to make the book simple in style so that even people with an elementary knowledge of the language may follow the story with interest and delight.

It is illustrated as well as it could be within the brief space of time in which the book was written and got through the press.

I take this opportunity of rendering my sincere thanks to the *Christian Literature Society*, *The Madras Mail*, *Waverly Press*, and *Poona Chitra Shala* for having allowed me the use of their blocks and pictures for purposes of illustration.

**GOD SAVE THE KING-EMPEROR!**

*The A*

# CONTENTS.

## அட்டவணை.

—(:c:)—


| CHAPTER. | | பக்கம். |
|---|---|---|
| 1 | Birth & Boy hood ஜனனமும், பால்யப்பருவமும் | 2 |
| 2 | Girl hood of Queen Mary மேரிராணியாரின் பால்யப்பருவம் ... ... ... | 15 |
| 3 | Heir to the Throne ஸிம்மாசனத்திற்குரியவர் ... | 21 |
| 4 | Marriage விவாகம் ... ... ... | 31 |
| 5 | Public Functions & his activities பொதுவிஷயங்களில் ஊக்கம் ... ... ... | 42 |
| 6 | Prince & Princess of Wales இளவரசர், இளவரசி | 57 |
| 7 | Tour in Great Britain etc., இங்கிலாந்தில் சுற்றுப்பிரயாணம் ... ... ... | 66 |
| 8 | Tour in India இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் ... | 70 |
| 9 | His Famous Speech in the Guildhall கில்ட் ஹாலில் இவரது பேச்சு ... ... | 97 |
| 10 | Accession to the throne ஸிம்மாசனம் ஏறியது | 102 |
| 11 | Coronation பட்டாபிஷேகச்சடங்கும் ஊர்கோலமும் ... ... ... ... | 109 |
| 12 | Royal Children இவரது குழந்தைகளும், படிப்பு முதலியவைகளும் ... ... | 127 |
| 13 | His daily work சக்ரவர்த்தி செய்யும் தினசரி வேலை ... ... ... ... | 133 |
| 14 | Character குணாதிசயங்கள் ... ... | 140 |
| 15 | Conclusion முடிவு ... ... ... | 142 |



महाराज बादशाह पांचवे जार्ज व महाराणी मेरी
King George V Queen Mary.

ஐந்தாவது

# ஜார்ஜ் சக்ரவர்த்தியின் சரித்திரம்.

விக்டோரியா மகாராணியாருக்கு நமது 5-வது ஜார்ஜ் சக்ரவர்த்தி பேரன். 7-வது எட்வாட் சக்ரவர்த்தியின் குமாரர். இப்பொழுது இவர் பட்டத்திற்கு வந்திருக்கிறது யாவருக்கும் தெரியும். இவருடைய திவ்ய சரித்திரம் யாவருக்கும் தெரிய வேண்டுமல்லவா? மேலும் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் மேல்பார்வையிலேயே நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியிருந்தார். ராணியாருக்கு இவர்மீது மிகவும் அன்புமிருந்தது. மேலும் அலக்சாண்டிரா ராணியாரும், ௭-வது எட்வர்டு சக்ரவர்த்தியும் தங்களது புத்திரனது படிப்பு, நற்சகவாசம், கப்பல் தொழில் முதலியவைகளைக் கவனித்து வந்தார்கள். ஆகையால் அவர்களது குணங்களெல்லாம் இவரிடத்தில் அமைந்திருக்குமல்லவா? அவைகளை ஆண், பெண், அடங்கலும் தெரிந்து கொள்வதற்கும் விரும்பாமலிருக்கமாட்டார்கள். மேரி ராணியாரும் ஏழைகளிடத்தில் பச்சாத்தாபம், கஷ்டப்படுபவர்களிடத்தில் இரக்கம் முதலிய குணங்களை யுடையவர்கள். பிரிடிஷ் ஆளுகையால் நமக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாயிருக்கின்றன. அவ்வித பிரிடிஷ் சிம்மாசனத்திற்கு ஒரு ரத்தனம்போல் இவர்கள் விளங்கி வருகிறார்கள்.

முதல் அதிகாரம்

## ஜனனமும், பால்யப்பருவமும்.

எ-வது எட்வர்ட் சக்ரவர்த்திக்கும் அலக்சாண்டிரா ராணியாருக்கும் 1865-ம் வருஷம் ஜுன்மீ 3உ மல்பரோ அரண்மனையில் ஒரு ஆண்குழந்தை ஜனித்தது. இக்குழந்தை காலஞ்சென்ற விக்டோரியாராணியாருக்குப்பேரன். இக்குழந்தையை மிக்க செல்வமாக வளர்த்துவந்தார்கள். ஜுன்மீ 7உ இக்குழந்தைக்கு ஞானஸ்னானம் விக்டோரியாவுக்கு முன்னும்தங்களது பந்து ஜனங்களுக்கு முன்னும் வின்ட்சர் அரண்மனையில் செய்வித்தார்கள். அச்சமயத்தில் விக்டோரியா ராணியார் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. இது உலகவழக்கமன்றோ. சாதாரண ஜனங்களுக்கே, ஒரு பேரன் பிறந்தால் எவ்வளவோ ஆநந்தங்கொள்ளுகிறார்கள்; சகல சம்பத்தும் பாக்கியமும் கூடிய விக்டோரியாவுக் குண்டான சந்தோஷத்திற்கு கேட்கவேண்டுமா?

இக்குழந்தைக்கு ஐந்தாவது ஜார்ஜ் என்று அச்சமயத்தில் நாமமிட்டார்கள். இக்குழந்தை வோயிட்தீவிலுள்ள ஆஸ்போர்ன் என்கிற திவ்ய அரமனையில் தனது சகோதரிகளுடனும், சகோதரனுடனும், கொஞ்சிக் குலாவி விளையாடிக் கொண்டிருந்தது. மாரி காலத்தில் சன்டிரிங்காம் அரமனையிலும் இக்குழந்தை வளர்க்கப்பட்டு வந்தது. ஆஸ்பார்ன் அரமனையைச் சுற்றி அழகான தோட்ட மிருந்தது. இங்கு இக்குழந்தைகள் சிறு விசித்திரப் பீரங்கியை வைத்




ஐந்தாவது ஜார்ஜ்.

(நமது அரச-சக்ரவர்த்தி)

துக்கொண்டு விளையாடி வந்தார்கள். இப்பொழுதும் அது அங்கு வைக்கப்பட்டிருக்கிறதாம். ஜார்ஜ் குழந்தைக்கு வய[illegible]ழு ஆனதும் கப்பற்படையில் சேர்க்கப்பட்டு அத்தொழில்கள் கற்பிக்கப்பட்டு வந்தார்.

விடுமுறை தினங்களில் எட்வர்டு சக்ரவர்த்தியும், அலக்சாண்டிரா ராணியும் டென்மார்க் தேசத்து அரசருடன் பர்ன்ஸ்டார்ப் என்கிற யிடத்தில்காலங்கழிக்கும் வேளைகளில் ஜார்ஜ் குழந்தை தைரியமாக அங்குள்ள நதியில் நீந்துவான். பயமின்றி ஜலத்தில் குதித்து முழுகி விளையாடுவான். பின்பு ஜார்ஜும் இவன் சகோதரனும் டார்ட்மௌத்தில் நீந்த கற்பிக்கப் பட்டபொழுது ஜார்ஜ் தான் முதலில் ஜலத்தில் சிறிது மச்சமின்றி குதிப்பானும். டென்மார்க் தேசத்தி லிருக்கும்பொழுது இவர்கள் வெகு குதூகலமாயிருப்பார்களாம். ஏனெனில் அங்கு இவர்கள் உறவினர்களாகிய ருஷியா, ஜெர்மனி, கிரீஸ்தேசத்து மன்னர்கள் விருந்தினர்களாக வந்திருந்தார்கள். அவர்களுக்கு இக்குழந்தைகளின்மீது மிக்கவாஞ்சை. முக்யமாக ருஷிய தேசத்து மன்னர் நிக்கலஸுக்கு ஜார்ஜுமீது மிக்க அன்பும், பிரியமும் உண்டானதுடன் இக்குழந்தையுடன் அடிக்கடி விளையாடி வந்தாராம்.

இக்குழந்தைகளுக்கு உபாத்தியாயர்களாக கேனன்பர்ச், கேனன் தார்வர், ரெவரெண்டு W. L. ஆன்ஸ்லோ என்கிற வித்வசிரோன்மணிகள் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் சிறந்த அறிவுடையவர்

கள். ஆனால் வேலையோ வெகு முக்கியமானது, கஷ்டமுள்ளது; ஏனெனில் ராஜாக்களுடைய பிள்ளைகளை வெகு புத்தி நுட்பத்தால் அவர்களுடைய எண்ணங்களையெல்லாம் அறிந்து பக்குவமாக நல்ல வழியில் அவர்களை நடத்தவேண்டும். இது சுலபமான வேலையா? சாமானிய மனிதர்களால் செய்யக்கூடுமா? இவர்களில் முக்கியமான உபாத்தியாயர் கேனன்டால்டன். இவர் ஜார்ஜுக்கு உபாத்தியாயராக 1871-ம் வருஷம், நியமிக்கப்பட்டார். இவர் ஆலோசனைப்படிதான் ஜார்ஜ் நடக்கவேண்டும். இவர் மேலும் கற்பித்தும் வந்தார்; ஆறுவருஷமானபின் குழந்தைகளுக்கு இவர்தலைமை உபாத்தியாயராகவும் நியமிக்கப்பட்டார்.

1871-ம்வருஷத்தில் ஜார்ஜ் அரசருடைய தகப்பனார்அசௌக்யமாகயிருந்தார். எங்குஇறந்துபோய் விடுவரோ என்ற திகிலை எல்லாதேசத்தார்களும் அடைந்திருந்தார்கள். நமது ஜார்ஜ்அரசர் 6-வயது குழந்தையாயிருந்தும் மிக்க விசனப்பட்டுக்கொண்டேயிருந்தார். இவருடைய மூத்த சகோதரனும், மூத்த சகோதரியும் அலக்சாண்டிரா ராணியாருடனும் மேரி ராணியாருடனும் கோயிலுக்குப்போய் கடவுளை வணங்குவார்கள். அப்பொழுது இவர் சிறு குழந்தையா யிருந்தமையால் அவர்களுடன் போக முடியவில்லை; ஆனால் அப்பொழுது இவருக்குண்டான துக்கம் இன்னும் ஞாபகத்திலிருக்கிறதாம்.

நமது அரசர் எக்காரியத்தையும் துணிந்து செய்வதில் விருப்பமுடையவர். எதைச் செய்த போதிலும், அதைப் பூராவாக செய்துமுடிப்பார். குதிரையின்மீது முதலில் தாமே ஏறி சவாரிசெய்தார். குதிரை நடத்தும் சமர்த்து இவரிடத்திலுண்டு என்பதைக்காண்பித்தார். ஒருசமயம் வேட்டையாடு மிடத்திற்குப்போனார். இது இவருக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. மேலும் கூடியவரையில் வேகமாய் வேட்டை நாய்களிருக்கு மிடத்திற்குச் சவாரிசெய்து சென்றாராம். இவருக்குப் பனிக்கட்டிமேல் நடப்பதிலும் மிக்க பிரியம். அதாவது சிற்சில மாதகாலங்களில் இங்கிலாந்தில் பனிக்கட்டி யிருக்குமிடங்களில் இவர் பனிக்கட்டியின்மேல் ஒருவித வண்டியை விட்டுச்செல்வார். அல்லது காலுக்கு அணியும் பூட்சுக்கு ஒருவித சறுக்கு கம்பிகளை அடித்து, அதைக்காலில்போட்டுக்கொண்டு பனிக்கட்டியின்மீது நடப்பதில மிகப்பிரியமாம்.

சில வேளைகளில் இவரும் இவருடைய சகோதரரும் சபைகளுக்கும் போவார்கள். அங்கு இவர் சகோதரர் கூச்சத்துடனும் ஒருவருடனும் பேசாமலிருப்பார்; ஆனால் ஜார்ஜின் விசேஷ ஊக்கம் அச்சமயங்களில் எப்பொழுதும் கீழ்ப்படிந்திராது. சிரித்த முகக்குறி தனது சகோதரிகள் கவனிப்பதைக் கெடுத்துவிடும். ஆகையால் அரண்மனையில் பந்துக்கள் இந்த சுறு சுறுப்புள்ள அரசரை "அடிக்கடி தொந்திரவு செய்கிற சிறு குழந்தை" என்று சொல்வார்கள்.

சார்லஸ் கிங்ஸ்லே இராஜ குடும்பத்து குழந்தைகளிடத்தில் மிகவும் பிரிய முடையவரா யிருந்தார். இவர் சன்டிரிங்காம் அரமனைக்கு வந்தபொழுது குழந்தைகளுக்கு வேடிக்கைக் கதைகளைச் சொல்லிவந்தனர். மேலும் தமக்கு தாபரசங்கம சாஸ்திரத்திலுள்ள அபார அறிவைக்கொண்டு அவர்களுக்கு அச்சாஸ்திரத்தையும் போதித்துவந்தார். இவர் மரணதருவாயி லிருக்கும்பொழுது ஜார்ஜும் அவர் சகோதரரும் அநுதாபக் கடிதங்கள் எழுதியனுப்பியதுடன், சில செடி புஷ்பங்களைப் பார்த்து சித்திரம் வரைந்தும் அனுப்பினார்களாம். அவைகளைக் கண்டு கிங்ஸ்லே மிகச் சந்தோஷப்பட்டது அச்சமயத்தில் உருக்கத்தக்கதா யிருந்ததாம்.

சன்டிரிங்காம் இராஜ குமாரர்களுக்கு மிகப் பிரியமான இடம். ஏனெனில் இங்கு இவர்கள் சுயர்ச்சியாக விளையாடிக் கொண்டும் தங்கள் படிப்பை படித்துக்கொண்டு மிருந்தார்கள். ஸ்காட்லண்டில் எட்வர்ட்டும், ஜார்ஜும் நிஜாரில்லாமல் ஒருவித சட்டையை கால்வரையிலும் அணிந்திருந்தார்கள். அத்தேசத்தில் ஹைலேண்டார்கள் இவ்வித உடுப்பைத்தான் தரிப்பது வழக்கம். அப்பொழுது எடுத்த புகைப் படங்களில் இவ் விருவர்களும் ஸ்காட்லாண்டு தேசத்துக் குழந்தைகளைப்போல் தென்பட்டார்கள். விக்டோரியா ராணியார் பால்மோரல் அரமனையைச் சுற்றி சவாரி செய்யும்பொழுது தமது பாட்டியாருடன் ஜார்ஜ் சிறிதும் பயமின்றி சவாரி போவார். ஏனெனில் விக்டோரியா ராணியாருக்கு ஜார்ஜயிடத்தில் மிகப்பிரியம்.

இவ்விரு அரசகுமாரர்களுக்கு ஒரு தோழன் இருந்தான். அவன் இவர்களுடன் விளையாடுவான். ஒரு சமயம் இவர்கள் ஒளிந்திருப்பவனைக் கண்டு பிடிக்கும் ஆட்டத்தை ஆடினார்கள். அப்பொழுது ஜார்ஜ் அந்நண்பனால் கண்டுபிடிக்கப்படவே, வருத்தப்பட்டு, "நீ என்னுடன் கைக்குத்துச் சண்டை விளையாடவருகிறாயா?" வென்று கேட்டார். உடனே அவன் சம்மதிக்கவே இவ்விருவரும் குத்துச் சண்டைப் போட்டார்கள். ஜார்ஜ் தன் நண்பனை ஒரு குத்து குத்தினார்.

அதனால் அவன் வருத்தமடையாமல் இருவரும் அதிக சிநேக பான்மையோடிருந்தார்கள். அந்நண்பர் இப்பொழுது ஒரு பிரபுவாக லார்ட் சபையிலிருக்கிறார். ஜார்ஜு அரசருக்கு குத்துச் சண்டையில் மிகப்பிரியம். இதற்காக தமது கைகளுக்குப் போட்டுக்கொள்ள கையுறைகள் வைத்திருக்கிறார். சிறிய கப்பலோட்டிகளுக்கு இவ்வாட்டம் தான் அதிக உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியதாம். ஜார்ஜ் அரசர் இவ்வாட்டத்தில் தம்மேல் குத்துவிழாமல் தடுத்துக்கொள்வதில் கை தேர்ந்தவர்.

இவ்விரு குமாரர்கள் பொழுதுபோக்காக வெளியில் அதிகம் விளையாடினபோதிலும், இவர்கள் பெற்றோர்கள் இவர்கள் பாடங்களைக் கவனமாய்க் கவனித்துவரும்படி வற்புறுத்தி வந்தார்கள். ஜார்ஜ சுவிட்சர்லண்டில் ஆறு மாதகாலமிருந்தார். அப்பொழுது பிரன்ச் பாஷையை மான்ஷியர் மேரியட்,

மான்ஷியர் ஹவா என்பவர்கள் மூலமாய் பேச கற்றுக்கொண்டு அப்பாஷையில் தாராளமாகப் பேசுபவரானர். சித்திரம் வரைதலையும் கணிதமும் கற்றுக்கொண்டார். இவர் துரிதமாக கற்றுக்கொள்பவரல்ல, ஆயினும் ஆடம்பரம் செய்தார். பிடிவாதமுள்ளவர் ஜார்ஜ. கடைசியில் பிடிவாதம் லாபத்தையளித்தது. இந்த குணம் இவர் கப்பல் ஓட்டும் பரிக்ஷையிற்றேறுவதில் நன்மையாக முடிந்தது.

ஜார்ஜுக்கு 12-வது வயது முடிவானதும் கப்பல் வேலைக்குப் போனர். அதாவது 1877-ளு ஜூன்மீ 5வ தனது சகோதரனுடன் டார்ட் மௌத்தில் பிரிடானியா கப்பலில் சேர்ந்தார். இங்கு அநேக வாலிபர்கள் வேலைகள் செய்து வந்தார்கள். இவ்விரு இராஜகுமாரர்களும் வித்தியாசமின்றி அவர்களுடன் சேர்ந்து வேலைசெய்தும், முக்யமானவைகளை யெல்லாம் அறிந்துகொண்டும் வந்தார்கள். விக்டோரியா ராணியாரின் பேரப்பிள்ளைகளுடன் 150 வாலிபர்கள் கப்பல் ஓட்டும் வேலையில் பழகி வந்தார்கள். இவ்விரு அரச குமாரர்கள் செய்யும் வேலைகளில் குறையென்பதே யில்லாம லிருப்பதை இதர வேலைக்காரர்கள் கண்டார்கள். அவர்களுக்கு இது அதிசயமாகத் தோன்றுவது சகஜமே. ஏனெனில் ஏழையாகிய அவர்கள் கடின வேலைகளைச் செய்வதுபோல் அரச குமாரர்களும் செய்து வருவது ஆச்சரியத்தை யுண்டாக்குமல்லவா? இப்பொழுதும் நமது சக்ரவர்த்தி தாம் முன் வேலைசெய்த இந்த இடத்தைச் சந்தோஷத்துடன் நினைத்து வருகிறார். தம் கப்ப ல் ஓட்டும் பழக்கத்தை அடைந்ததுபோல்

தம்பது குமாரர்களும் அவ்வித பயிற்சியைப் பெற வேண்டுமென்று அவர்களை யனுப்பினார்களாம். இரண்டாவது வருஷத்தில் இவ்விரு ராஜகுமாரர்களுடைய பெற்றோர்கள் இங்கு வந்து தங்கள் குழந்தைகளைக் கண்டு களித்து வெகுமதியளித்தார்கள். பின்பு தங்கள் புத்திரர்களுடைய நண்பர்களைச் சண்டு அறிமுகம் செய்துகொண்டார்களாம்.

இவ்விரு ராஜ குமாரர்களும் வக்காண்டி என்ற கப்பலில் வேலைசெய்தார்கள். இதற்கு லார்ட் சார்லஸ்|ஸ்காட் கப்பற்றலைவர். இங்குவேலை செய்பவர்களுடன் சேர்ந்து சிநேக பான்மையோடு ஒத்துழைத்துவந்ததுமன்றி சாதாரண கட்டிலில் படுத்து நித்திரைசெய்து வந்தார்கள். இக்கப்பல் மேடிடரேனியன் கடல்மார்க்கமாகச் சென்றது. இப்பிரயாணத்தில் ஜார்ஜ் அரசருக்கு மிக்க சந்தோஷம் உண்டானது. இவ்வித பிரயாணத்தைச் சுருக்கமாக விவரித்து அப்போதைக்கப்போது தமது பெற்றோர்களுக்கு கடிதம் எழுதி வந்தார்.

1880ம் வருஷம் உலகத்தைச் சுற்றி இக்கப்பல் மற்ற நான்கு கப்பல்களுடன் பிரயாணம் சென்றது. அக்காலத்தில் ஜார்ஜ் தினசரிக்குறிப்பு புஸ்தகமொன்று வைத்துக்கொண்டு, அதில் தாம் கண்ட தேசங்களையும், அத்தேசத்து ஜனங்களின் நடவடிக்கை முதலியவைகளையும் குறித்துவந்தார். இவ்விதம் செய்த பிரயாணத்தால் இக்குமாரர்களுக்கு உலகஞானமுண்டானது. பின்னிட்டு வெளசானில் கானடா கப்பலில் 1883ம் வருஷம் சேர்ந்து பழகிவந்

தார். வடஅமெரிக்கா, டாரன்டோ கானடாவிலுள்ள சில பாகங்கள் முதலியவைகளைப் பார்வையிட்டார். அங்குள்ள விசேஷமாக பேர்பெற்ற நயகார என்ற நீர் வீழ்ச்சியைக்கண்டு ஆநந்தங்கொண்டார். இதன் மேல்கொண்ட பிரியம் கனடா ராஜ்யத்திலும் விழுந்தது. அவ்விராஜ்யத்தாருடன் சிநேகம் செய்துகொள்ளத்தலைப்பட்டார். அவ்வித சிநேகம் விருத்தியடைந்து வந்திருக்கிறதாம்.

1884-ம் வருஷம் ஜூன்மாதம் கப்பலோட்டும் பரிக்ஷையில் முதலில் தேறினார். இதற்குத் தகுந்தபடி கப்பலில் தலைவராக யிருக்கவும் 90 வயதுள்ளவுமான அட்மிரல் சர் ஜான் டால்ரிம்ப்ல் ஹேமா என்பவர் " ஜார்ஜ் கப்பலோட்டும் வேலையில் சிறந்தவர். சாதாரண வேலைக்காரரல்ல; நம்மைப்போலவே கஷ்டப்பட்டு எல்லா வேலைகளையும் செய்து தெரிந்துகொண்டவர் " என்று எழுதி யிருக்கிறார்.

இப்படி பரிக்ஷையிற்றேறி நற்பேரடைந்தபின் க்ரீன்விச்சிலுள்ள ராயல் நேவல்காலேஜியில் சேர்ந்து படித்துவந்தார். இவர் இங்குபடிக்கும்பொழுது இவருக்கு இரண்டு அரைகள் மாத்திரம் கொடுக்கப்பட்டன. இவ்வரைகளில் தமது பந்துக்களுடைய உருவப்படங்களை மாட்டி அழகாக வைத்திருந்தார். 1885 ம் வருஷம் மூன்று கப்பல்களில் பெரிய கப்பல் உத்தியோகஸ்தருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார். மூன்றுவதாகிய அலெக்சாண்ட்ரா என்ற கப்பல் இவருடைய சிற்றப்பனுடைய கொடிக்கப்பல். ஜார்ஜ் கப்பலோட்டும் தொழிலில் விசேஷ தேர்ச்சியைப் பெற வேண்டுமென்று இவர் மிக்க விரும்பியிருந்தார்.

1889-ம் வருஷத்தில் ஒரு டார்பிடோ படகை நடத்தியபொழுது இவர் எடுத்த காரியத்தை முடிக்கவேண்டுமென்பதைக் குறித்து ஒரு கதை சொல்லப்படுகிறது. ஜார்ஜ் அரசருடைய தலைவர் (Sir Edmunt Commerel) சர் எட்மண்ட் கம்மரா அச்சு, 7-வது எட்வர்ட் இளவரசாயிருந்தபொழுது தமது குமாரனைப் பார்க்க தமக்கு விருப்பமாயிருக்கிறபடியால் தயவு செய்து ஜார்ஜை யனுப்பும்படி, ஒரு கடிதம் எழுதினர்.

ஜார்ஜுக்கு இச்சங்கதி தெரிந்தவுடன், "ஐயா, எனது டார்பிடோ படகின் கதி என்னவாகும்?" என பதிலளித்தாராம். சர் எட்மண்ட். "ஒருநாள் தானே, போய் வரலாமென்னவே" அது முடியாது ஐயா, கடலில் இதை நடத்த தங்கள் உத்திரவு பிறந்திருக்கிறதே. நான் போகவேண்டியதுதான்" என்று சொல்லி ஸ்பிட் ஹெட்டுக்கு இப்படகை வெகு ஜாக்கிறதையுடன் நடத்தினாராம்.

இவர் இவ்விதம் இத்தொழிலை யாவரும் மெச்சும்படி செய்துவரும் காலத்தில் நானுதேசத்து தபால் தலைகளைச் சேகரிப்பதில் மிக்கப் பிரியமுடையவராயிருந்து அநேகவிதம் விதமான தலைகளைச் சேர்த்து வைத்தாராம். அவரது பாலியப் பருவமுதல் இவ்விதம் செய்வதில் இவருக்கு இஷ்டமாம். லண்டன்மாநகரில் விடுமுறை காலத்தில் ஜார்ஜ் அரசரிருந்தபொழுது இன்னும் புதிய ஸ்டாம்புகளைச் சேர்ப்பதில் இவரது ஊக்கத்தைக் காண்பிக்கும் ஒரு கதையுண்டு. ஒரு ஆபீஸில் ஒருவர்

தாம் சேர்த்துவைத்திருந்த ஸ்டாம்புகளை விற்க தமக்கு விருப்பமிருப்பதாகவும் அவைகளைத் தமது கிரகத்தில் எந்த சனிக்கிழமையிலாவது தேவையானவர் 2 மணிக்குமேல் நேரே வந்து பார்க்கலாமென்றும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார். ஜார்ஜ் அரசர் அந்த விளம்பரத்தைக் கண்டவுடனே சனிக்கிழமைவந்ததும் புறப்பட்டு அக்குமாஸ்தா வீட்டிற்குப்போனார். இவர்போனதும், அந்த வீட்டு எஜமானி குமஸ்தாவினிடத்திற்குச்சென்று "ஐயர், யாரோ ஒரு வாலிபன் தங்களைக்காண காத்திருக்கிறான்" என்றாள். அக்குமாஸ்தா வந்திருந்த வாலிபனைக்கண்டு சங்கதியை யறிந்துகொண்டு தம்மிடத்திலிருந்த விதம் விதமான தபால் தலைகளைக் காண்பித்தார். ஜார்ஜ் அரசர் சாதாரண வாலிபனைப்போலிருந்து தமக்கு வேண்டிய சில அபூர்வமான ஸ்டாம்புகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு அவைகளுக்குள்ள விலையையும் கொடுத்தார். ஜார்ஜ் ஸ்டாம்புகளை எடுத்துக்கொண்டு அவ்வீட்டைவிட்டுத் திரும்பிப் போகையில் அக்குமாஸ்தா ஜார்ஜ் அரசர் தான் வந்தாரென்பதை அறிந்துகொண்டாராம்.

1885-ம் வருஷம் அக்டோபர்மீ த்ரவ்ஷ் என்ற பீரங்கிப்படகை நடத்துவதில் பழகினார். இவர் அச்சமயங்களில் கடலில் சென்று செய்த மாலுமி வேலையைப்பற்றிப் புகழ்ந்து பேசினார். இவருடைய தகப்பனாரும் ஜர்மனி சக்ரவர்த்தியும் இவர் படகுக்கு வந்து இவர் வேலையைப்பார்த்தார்கள்.

ஜார்ஜும்தாம்முதற்தடவையாகஇப்படையை நடத்து வதைத் தமது அருமைத் தாயாருக்கும், சகோதரி களுக்கும் காண்பிக்க மிகவும் விரும்பினர்.

1887-ம் வருஷத்தில் விக்டோரியா மகாராணி யாரின் ஆளுகையின் ஞாபகார்த்தமாக ஜுபிலி வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது. வேஸ்ட்மின் ஸ்டர் கோயிலில் நடந்த தெய்வ ஆராதனைக்கும் ஸ்தோத்திரம் செய்வதற்கும் நமது ஜார்ஜ் அரசர் சென்றிருந்தார். இக்கொண்டாட்டம் நடந்த கால த்தில் கப்பல்படையை அணிவகுத்தார்கள். இவரும் அதில் சேர்ந்திருந்தார். விக்டோரியா ராணியார் தமதுபேரப்பிள்ளை கப்பலில் பயின்று வருவதை ஆமோதித்தார்கள். 1889ம் வருஷத்தில் தமது சொந்த கப்பல்படைத் தலைவனுக்குத் துணைவனாக ஜார்ஜை நியமித்தார்கள். இவர் வெஸ்ட் இந்தீஸி லிருந்தபொழுது ஜெமைக்கா கைத்தொழில் பொரு ட்காட்சியைத் திறந்தார்.

1889-ம் வருஷம் ஜுலைமாதத்தில் இவருடைய மூத்த சகோதரி பைப் பிரபுக்கு விவாகம் செய்யப் பட்டாள். உடனே தமது சகோதரி தமது குடும் பத்திலிருந்து பிரிந்து தமது கணவருடன் போய் விட்டாள். இவரும், இவருடைய சகோதரிகளும் அதிக நேசமுள்ளவர்களாயிருந்தார்கள். இவ்வித பிரிவு சிறிது விசனத்தை யுண்டாக்கியதாம்.

1891ம் வருஷத்தில் ஜார்ஜ் அரசர் தளகர்த்த ராக நியமிக்கப்பட்டார். இவர் இவ்வருஷத்தில்

ஐரலாண்ட் தேசத்தை தமது சகோதரருடன் போய்ப்பார்த்தார். இப்பொழுதுதான் ஜார்ஜ் பிரபுக்கு டப்ளினில் கடும் சுரம் கண்டது. விக்டோரியா மகாராணியார் முதலியவர்கள் மிக விசனமுற்றிருந்தார்கள். தெய்வானுகூலத்தால் இவருக்கு வந்த சுரம் நீங்கிற்று. இவரும் தமது கப்பற்படை அலுவலைச்செய்ய ஆரம்பித்தார். இவ்வருஷக்கடைசியில் இவருடைய சகோதரருக்கு வியாதிகண்டது. எவ்வளவோ கைத்தேர்ந்த வைத்தியர்கள் சிகிச்சை செய்தும் பிரயோசனமில்லாமற் போயிற்று. இவர் 1892ம் வருஷம் ஜனவரி௴ 14௳யன்று மரணமடைந்தார். அப்பொழுது இவருக்கு வயது 29. ப்ரின்ஸெஸ் மே என்னும் ராஜ குமாரத்திக்கும் இவருக்கும் விவாகம் நிச்சயமாய் முகூர்த்தமும் வைக்கப்பட்டிருந்தது. இவர் திடீரென்று இறந்துபோகவே இராணியாரவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் துக்க சாகரத்தில் மூழ்கியிருந்ததுடன் பிரிடிஷ் ராஜ்யத்திலுள்ளோரெல்லாரும் பெரும் துயரமடைந்திருந்தார்கள்.

ஜார்ஜ் அரசருடைய மூத்த சகோதரர் ஆல்பர்ட் விக்டர் இறந்தமையால், ஜார்ஜ் அரசர் தமது தகப்பனருக்குப்பின் சிம்மாசனத்திற்குரியவரானர். இவ்வித சம்பவம் உண்டானமையால் ஜார்ஜ் அரசர் தமக்குப் பிரியமான கப்பற்படையைவிட்டு நீங்கி இராஜாங்க விஷயங்களைக் கற்றுக்கொள்ளும்படி செய்தது.




மேரி ராணியார்.

## மேரி ராணியாரின் பால்யப்பருவம்.

### இரண்டாவது அதிகாரம்.

மேரி ராணியார் தமக்கு கணவராகப் போகும் ஜார்ஜ் அரசருடைய மாளிகைக்குச் சிறிது மைல் தூரத்தில் தான் தமது பால்யப் பருவத்தில் வசித்து வந்தார்கள். ஜார்ஜ் அரசர் தமது சகோதரர்களுடனும் சகோதரிகளுடனும் மார்ல்பரோ அரமனையில் வசித்துக்கொண்டு வருகையில், டெக்கின் பிரின்ஸஸ் மே அவர்கள் தமது பெற்றோர்களுடனும் மூன்று சகோதரர்களுடனும் கென்சிங்டன் அரமனையில் சில காலம் வாசஞ்செய்து வந்தார்கள். பின்பு ரிச்மாண்டிலுள்ள வோயிட் அவுஸில் தமது உறவினர்களாகிய ஜார்ஜ் அரசர் முதலானவர்கள் வசிக்கும் அரமனைக்கு வெகு சமீபத்தில் பரின்ஸஸ் மே முதலானவர்கள் வசித்து வந்தார்கள். இவ்விதம் வசித்து வந்தமையால் இவ்விரு அரச குடும்பத்தார்கள் அடிக்கடி சந்தித்து வந்தார்கள். ஜார்ஜ் அரசருக்கு இவர்கள் மீது அதிகப்பிரியமிருந்ததென்றே சொல்லலாம்.

1867-ம் வருஷம் மேமீ 26உ யன்று ப்ரின்ஸஸ் விக்டோரியா மேரி கென்சிங்டன் அரமனையில் ஜனித்தார்கள். ஒரு மாதமான பின் இக்குழந்தைக்கு ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டது. இப்பெண்மணியை பால்யப் பருவமுதல் ப்ரின்ஸஸ் மேரி என்று செல்லப் பேராக அழைத்துவந்தார்கள். இப்பெண்மணி தம் தாய் தந்தையர்களுடைய குணங்களையடைந்து நற்பேரடைந்து வந்தாள். மே ராணியார் பிரகாசமான முகத்துடனும் புன்சிரிப்புடன் ஒருவயது குழந்தைப் பருவமுதல் தென்பட்டார்கள். இக்குழந்தையின்

தகப்பனர் தமது குழந்தையின் மீது மிக்க அன்புடனுமிருந்ததுடன் மிக்க மகிழ்ந்து ஆனந்தசாகரத்தில் மூழ்கி யிருந்தார். ஏனெனில் இக்குழந்தை தான் முதலில் இவருக்குப் பிறந்தது. இக்குழந்தைக்கு 15 மாதங்களானவுடன் ஒரு சகோதரன் ஜனித்தான். 1870 ம் வருஷத்தில் பிரின்ஸ் ப்ரான்ஸிஸ் ஜனித்தார். 1874-ம் வருஷத்தில் பிரின்ஸ் அலக்சாண்டர் ஜனித்தார்.

நாம் ப்ரின்ஸஸ் மே என்பதற்குப் பதிலாக மேரி ராணி என்றே இனி வழங்குவோம். மேரிராணியார் பாலியப் பருவத்தில் ஒருவருக்கும் அடங்கியிருக்க மாட்டார்களாம்; ஆனால் சந்தோஷமாயிருப்பார்களாம். மேலும் மிகவும் எதிலும் பிரியமற்றிருப்பார்களாம். மேரிக்குத் தலைவியாயிருந்து படிப்பு சொல்லிக்கொடுத்தவள் ஒருபிரன் சுமாது. இவள்பெயர் மேடம் ப்ரிக்கா. மேரி ராணியிடத்திலிருந்த அதிக பழமையானவும் அழுக்குள்ளவுமான பொம்மைகளை விசுவாசத்துடன் வைத்திருப்பார்கள். சிநேகிதர்களோ, பந்துக்களோ, அழகுள்ளவும் நேர்த்தியுமான பொம்மைகளை இனமாகக் கொடுத்த போதிலும் பழைய பொம்மைகளை விலக்கி விடமாட்டார்கள். மேரி ராணியாரிடத்தில் ஆட்டுக்கடாக்களைப் பூட்டிய ஒரு வேடிக்கை வண்டியிருந்தது. இதைத் தமது அரமனைத் தோட்டத்தில் சுற்றிவரும்படி விடுவார்கள். அச்சமயத்தில் மேரி ராணியாருடைய தகப்பனராவது அல்லது தலைவியாவது சமீபத்திலிருப்பார்கள்.

சிற்சில சமயங்களில் மார்ல்பரோ ஹவுஸில் அல்லது கென்சிங்டன் அரமனையில் குழந்தைகள் கூட்டம்கூடும். பக்கிங்ஹாம் அரமனைக்கு தங்கள் பெற்றோர்களுடன் போய் வருவார்கள்.

தலைவி அடிக்கடி வினயத்துடன் மேரி ராணியாரைத் தமது பாடங்களைப்படித்து விருத்தியடையும்படி வேண்டிக்கொள்வாள். இவ்விஷயத்தில் தலைவி மிகப் பொறுமையுடனிருந்ததும், மேரியின் தாயார் அடிக்கடி படிக்கும்படி தூண்டி வந்ததும் நன்மையாகமுடிந்தது.

சரித்திரம்படிப்பதில் மேரிராணியாருக்கு விருப்பமதிகம். மற்றப்பாடங்களையும் நன்றாகப்படித்து வந்தார்களாம். மேரிராணியார் நல்ல காற்றுள்ளவிடங்களில் நடமாடவும், விளையாடிவரவும் இவரது தாயார் ஏற்பாடு செய்துவந்தார்கள்: மேலும் தமது சகோதரர்களுடன் க்ரிகட் என்னும் பந்து ஆட்டம் ஆடி ஜெயம் பெறுவாள்.

மேரி ராணியாருடைய நல்ல தேக சௌக்கியத்திற்குக் காரணபூதர்கள் இவர்களது தாயாரும், தலைவி உபாத்தியாயரும்தான். எப்படியெனில் படிப்பும், விளையாட்டும் கலந்திருக்கும்படி இவர்கள் ஏற்பாடுசெய்து வந்தார்கள். தேகப்பயிற்சியையும் கவனித்து வந்தார்கள்.

1882-ம் வருஷம் தமது ஜென்மஸ்தானத்தை விட்டு வேறுதேசத்தில் வசிக்கும்படி நேரிட்டது. அதாவது ஈஜிப்ட் நாட்டு யுத்தப் படையில் சேர்ந்து

உதவிபுரிய ராணியாரின் தகப்பனார் தாமே முன்வந்தார். இவருடைய மனைவியும், மேரிராணியும் கூடச் சென்றார்கள். அப்பொழுது மேரி தமது தகப்பனார் யுத்தத்திலிருந்து பிழைத்து சீக்கிரம் திரும்பிவர வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு மிக்க மனக்கவலையுடனிருந்தார்கள். அவர் யுத்தத்திலிருந்து திரும்பி வந்தவுடன் இவர்களடைந்த சந்தோஷத்திற்கு அளவேகிடையாது.

1883-ம் வருஷத்தில் இக்குடும்பத்தார் கேன்சிங்டன் அரமனையைவிட்டு சிறிதுகாலம் மேரி ராணியாருக்கு இத்தாலி, பிரன்சு பாஷைகளில் தாட்டியாய்ப் பேச பழக்கிவைப்பதற்காக ப்ளாரன்ஸில் தங்கியிருக்கத் தீர்மானம்செய்து அங்குபோய் வசித்தார்கள். இவ்விராஜ குடும்பத்தைக் காண ப்ரிடிஷ் சிநேகிதர்களும், அந்நியதேசத்து நண்பர்களும் அடிக்கடி வந்துகொண்டிருந்தார்கள்.

மேரிராணியார் தமது பந்துக்களுடன் அவ்வூரிலுள்ள விசித்திரக் காட்சிகளைக் கண்டு களித்தார்கள். அவ்வூரிலுள்ள பேர்பெற்ற கட்டடம், ஸ்தலம் முதலியவைகளைப்பார்த்து மகிழ்ந்தார்கள். இங்கு சங்கீதம் பிரபலம். இக்குடும்பத்தார் சங்கீத சாலைக்கும் நாடகசாலைக்கும் போய்வருவார்கள். இங்கு வசித்து வந்த காலத்தில் மேரி ராணியார் சாதாரண வெண்மைநிறமுள்ள உடுப்பைத் தரித்துக்கொண்டு தமது பந்துமித்திரர்களுடன் உல்லாசமாக காலங்கழித்து வந்தார்கள்.

இங்கிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பிவந்த

பொழுது விக்டோரியாராணியாரவர்கள் ரிச் மாண்டி லுள்ள வொயிட் ஹவுஸில் தங்கியிருக்கும்படி வேண்டிக்கொள்ளவே, மேரி ராணியின் பெற்றோர்கள் சந்தோஷத்துடன் ஒத்துக்கொண்டு அவ்விதமே அவ்விடத்தில் வசித்தார்கள். மேரி ராணியார் எல்லாரைவிட அதிகமாக இங்கு வசிக்கவிரும்பினார்கள். மேரியினுடைய சகோதரர்கள் பாடசாலையில் படித்துவந்தமையால் தங்களது சகோதரியுடன்கூட எப்பொழுதும் வீட்டிலிருக்க முடியவில்லை. மேரிக்கும் அவள் தாயாருக்கும் இங்குள்ள அழகான பூந்தோட்டமும் இதற்குச் சமீபத்திலுள்ள இதர தோட்டங்களும் அதிக மனமகிழ்ச்சியையுண்டாக்கின.

இவ்விடம் மேரி ராணியாரின் தாயாருக்குப் பழகினயிடம். ஆனால் மேரி ராணிக்கு இவ்விடத்திலுள்ள தோட்டம் தூரவு, கட்டடம் முதலியவைகள் தெரியாது. அவ்வித யிடங்களையெல்லாம் மேரி போய்பார்ப்பாள். இவ்விடத்திலுள்ள ஏழைகளையும், அத்யாவசியமாய் உடுக்க வஸ்திரமும் அன்னமும் தேவையாயுள்ளவர்களையும் போய்ப் பார்த்து தம்மாலியன்ற உதவிபுரிவாள். இவ்வித பரோபகாரம்செய்து வந்தமையால் அங்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்க ளெல்லாம் மேரியைப் புகழ்ந்து வந்தார்கள். மேரியை அன்புடன் நேசித்தும் வந்தார்கள்.

இங்கிருந்தமையால் விக்டோரியா ராணியார் வசிக்கும் அரமனைக்கு அடிக்கடி மேரியும் அவள் தாயாரும் போய் வருவார்கள். அரசகுடும்பத்தார்

இக்குழந்தையின் சௌந்தரியத்தைக் கண்டு மகிழ்ந் தார்கள். மேலும் இப்பெண்மணி இதர தேசங்க ளில் வசித்து அத்தேசத்தாருடைய நடை, உடை பாவனைகளையறிந்துகொண்டு, விருத்தியடைந்து வந் திருப்பதைக்கண்டு ஆநந்தங்கொண்டார்கள். மேரி ராணியாரிடத்தில் மிகவும் பக்ஷமாயிருந்தார்கள்.

மேரி ராணியாருக்கு விவாக வயது ஆரம்ப மானது. தங்கள் கிரகத்திலுள்ள கோலம்புலை மண் டபத்தில் (Drawing-Room) முதற்தடவையாக நல்ல உடுப்புகளைத் தரித்துக்கொண்டு வந்தார்க ளாம். ராணியாரின் தாயார் தமது புத்திரி தரித் துக்கொண்ட உடுப்பைக் கண்டு மனமகிழ்ச்சியுட னிருந்தார்களாம். இது மாத்திரமா? மேரியின் தகப்பனாரும், சகோதரர்களும் அதிகப் பெரு மை பாராட்டாமலிருக்கவில்லை. பாடசாலையிலிருந்த சகோதரர்களில் ஒருவர், நீ என்ன திடீரென்று பெரியவளாய் விட்டாயே? என்று கேட்டாராம்.

அடிக்கடி நடக்கும் பொதுக்காரியங்களுக்கு மேரிராணியாருக்கு ஜனங்கள் அழைப்புப்பத்திரம் அனுப்பிவந்தமையால், மேரி ராணியாருடன் அவர் கள் தாயாரும் இடைவிடாது போகவேண்டியிருந் தது. ஒரு சமயத்தில் ஒரு மண்டபத்தில் ஏதோ ஒரு விசேஷம் நடந்தது. அதற்கு மேரி ராணியாரை வரும்படி கேட்டுக்கொள்ளவே, தாம் வருவதாய் வாக்களித்தார்கள். பின்பு காலதாமதமாக அம்மண் டபத்திற்குப் போகவே, தற்செயலாய் பாண்டு வாத் தியம் வாசிப்பவர்கள் "மேரி! எழுந்திரு" என்ப

தைப் பாடினார்களாம. நமது மேரி ராணியார் இவ் விதம் அகஸ்மாத்தாய் பாடின கீதத்தைக்கேட்டு மலர்ந்த முகத்துடன புன்சிரிப்பு கொண்டார்களாம்.

பொதுக்காரியங்களுக்கு மேரி ராணியார் தமது தாயாருடன் சாதாரண உடுப்புகளை நன்ருக அணிந்துகொண்டு போவார்களே தவிர டாம்பீகமான ஆடைகளைத் தரித்துக்கொண்டு போகமாட்டார்கள். இவ்வித உடுப்புடன் சந்தோஷமுள்ள ஒரு இங்கிலீஷ் பெண்மணியைப்போல் தென்படுவாள். தம்மிடத்தில் அறிமுகம் செய்யப்பட்டவர்களுடன் சிரித்துக்கொண்டு பேசுவாள். காரிய பொறுப்பு, மனக்கவலை யொன்றுமில்லாமல் உற்சாகத்தோடு தமது பந்துமித்திரர்களுடன் கூடிக் குலாவிக்கொண்டிருக்கும் மேரிராணியார் ரோஜா புஷ்பத்தைப்போல் காணப்படுகிருள் என்று யாவரும் சொல்லிவந்தார்களாம்.

---

## நமது அரச சக்ரவர்த்தியும் ராணியும் சிம்மாசனத்திற் குரியவர்.

### மூன்ருவது அதிகாரம்.

க்ளாரன்ஸ் பிரபு அசௌக்யமாயிருந்து மரணமடையவே, அலக்சாண்டிரா ராணியாரும், 7-வது எட்வர்டும் மிகவிசனப பட்டார்கள். ஏனெனில் இவர்தான் மூத்த பிள்ளை. இளவரசு. சிம்மாசனத்திற்குரியவர்.

இச்சமயத்தில் இங்கிலாந்தில் இன்புளுயன்ஸா என்ற சுரம் அதிகமாக எங்கும் பரவியிருந்தது. இச் சுரம் நமது ஜார்ஜ் அரசருக்கு வரவே, தாய் தந்தையர்கள் பட்டதுயரத்திற் களவேயில்லை. தெய்வாதீனமாய் இவருக்குண்டான பிணிநீங்கவே, இவருடைய தாயும் தந்தையும் இவர் மிக்க பலஹீனமாயிருப்பதைக் கண்டார்கள். ஆகையால் அவருடைய தேக சௌக்யத்திற்காக ஈஸ்ட்போர்ன் என்ற இடத்துக்குப் போனார்கள். டிவான்ஷைர் பிரபு (Duke of Devonshire) காம்ப்டன் என்று வழங்கிவரும் நல்ல கிரகத்தில் வசித்துவரும்படி ராஜ குடும்பத்தாரைக் கேட்டுக்கொண்டார். இங்குள்ள தேக சௌக்கியத்திற்குற்ற காற்றுக்கும், விநோதமான காட்சிக்கும் ஆவல்கொண்டு சந்தோஷத்துடன் ஒத்துக்கொண்டார்கள்.

இவ்விடத்திற்கு இவர்கள் வரும்பொழுது ஜார்ஜ் அரசர் தேகம் மெலிந்தவராகக் காணப்பட்டார். இவருடைய தாயாரும், தந்தையும் படிப்படியாய் அநுபவித்த வருத்தங்களால் தேகத்தில் இரத்தமில்லாதவர்களாய் தென்பட்டார்கள். இங்கு வசித்துவந்த ஒரு மாதத்திற்குள் எல்லாரும் தேக சௌக்கிய மடைந்தார்கள். ஜார்ஜ் அரசர் இங்கு வந்தபோது காணப்பட்டதைவிட அதிக பலவானாகத் தென்பட்டதைக்குறித்து அங்குள்ள ஜனங்களெல்லாம் சந்தோஷ மடைந்தார்கள்.

1892-ம் வருஷம் வசந்தகாலத்தில் ப்ரோபஸர் ஹீன் என்பவருடன் ஹீடல்பர்க்கில் தங்கியிருந்தார். படிக்காத வேளையில் அந்த அழகான நகரத்தைச்

சுற்றி உலாவிவருவார். இச்சமயத்தில் தாம் சந்திக்கும் ஜனங்களுடன் கர்வமின்றி பேசுவார். படகு விடுவோன் பொழுது போக்குக்காக இவரைச்சந்தோஷப்படுத்திவந்தான். அங்குள்ளவர்கள்பந்தாடுமிடத்திற்குச்சென்றுதாமும்ஆடுவார். இவ்விதம் காலம்கழித்தபின் கப்பற்படைக்குத் தலைமையை வகித்திருந்தார். இப்படி வெகுநாள் நீடித்து செய்துவர முடியவில்லை. யார்க் பிரபுவாக நியமிக்கப்பட்டார். இனி கப்பற்படையில் வேலை இவர் செய்துவர முடியுமாவென ஜனங்கள் எண்ணலானார்கள். ஏனெனில் இனி சிம்மாசனத்திற் குரியவர் ஜார்ஜன்றோ? அதற்குத் தக்கவேலையும் பொறுப்பு மதிகம். ஆயினும் தற்சமயத்தில் முன்போல் அதிககாலம் கப்பற்படையில் செலவழிக்காம லிருக்கும்படி ஏற்படுத்திக் கொண்டார். ராஜாங்க சம்பந்தமான சிற்சில அலுவல்களைச் செய்வதைவிட கப்பற் படையிலிருந்து, அங்கு தமக்குரிய வேலைகளைச்செய்ய அதிக அவா ஜார்ஜ் அரசருக்கிருந்தது. ஆனால் சிம்மாசனத்திற் குரியவராகி விட்டமையால் அந்த அந்தஸ்துக்குத் தக்கபடி செய்யவேண்டிய முக்ய விஷயங்களை இவர்தானே கவனித்து வரவேண்டும்?

1892-ம் வருஷம் ஜூன்மாதம் 17உ பார்லிமெண்ட் மகா சபைக்கு பிரபுவாக நியமிக்கப்பட்டார். இதற்கு சிலசடங்கு உண்டாம். இப்பிரபு பட்டத்திற்குரிய உடுப்புகளைத் தரித்துக்கொண்டு லார்ட் சேன்ஸலர் முன்பாக வந்தவுடன் இவருக்குப்பின் மற்ற பரிவாரங்கள் வந்ததாம். இது ஒரு பவனி போல் அழகாயிருந்ததாம். அங்குள்ள குமாஸ்தா

ஜார்ஜ் அரசர் பார்லிமெண்ட் மகா சபையில் பிரபு வாய் விட்டார்" என, படித்து இவரை சத்தியம் செய்யச் சொன்னாராம். இது முடிந்ததும் இவர் பார்லிமெண்ட் பதிவு புஸ்தகத்தில் தமது கையெழுத்தைப் பதிந்துவிட்டு, அங்குள்ளவர்களை யெல்லாம் வணங்கிய பின் வந்து விட்டார். யாவரும் நமது "ஜார்ஜ் அரசர்" பிரபு ஆய்விட்டாரென சந்தோஷத்துடன் கரகோஷம் செய்தார்கள்.

ஆல்பர்ட்விக்டர் திடீரென்று இறந்தது எல்லாத் தேசத்தாருக்கும் மிக்க துக்கத்தையுண்டு பண்ணிக் கொண்டிருந்தது. இராஜ குடும்பத்தார்கள் 1892-ம் வருஷமுழுவதும் துக்கம் கொண்டாடினார்கள். 1893-ம் வருஷத்தில் யார்க்பிரபு (நமது ஜார்ஜ் அரசர்) பொதுக் கூட்டங்களுக்கு வந்து ஒவ்வொரு கூட்டத்திற்குத் தக்கவாறு தாம் சபைத்தலைமையை வகித்துப் பேசவேண்டியிருந்த காலத்தில் கூச்சமின்றி நன்றாகப் பேசிவந்தார். இவ்விதம் மானுமித்தொழில் செய்பவர்கள் செய்யவும் முடியாது. அல்லது நன்றாக உபந்நியாசம் செய்பவர்களின் சாமர்த்தியத்தைக்கண்டு மெச்சிப்பேசவும் சக்தி அவர்களுக்கில்லவே யில்லை. ஆனால் நமது அரசரோ அப்படிக்கின்றி எந்த சபைக்குப் போனாலும் எவ்விஷயத்தைப் பற்றி பேச வேண்டியிருந்தாலும் தம்மாலியன்றளவு நிறுத்தி யாவருக்கும் தெரியும்படி பேசிவந்தது புகழத்தக்க தல்லவா?

முதல் முதலில் ஒரு விருந்து சாப்பாட்டுக்கு இவர் அழைக்கப்பட்ட பொழுது "இவர் தமது பந்

...களில் ஒருவரை அணுகி சாப்பாட்டிற்கு அழை
க்கப் பட்டிருக்கிறேன். இன்னது பேசுகிறதென்று
எனக்குப் புலப்படவில்லை. ஏதாவது குறிகுறித்து
எனக்குக்கொடுக்கவேண்டு"மென்றார். "எனது அரு
மையான பிள்ளாய்! சிறிய கடிதத்தில் நீ பேசப்பு
கும் விஷயத்தை டைப் மெஷினில் கொடுத்து அச்
சடித்து வைத்துக்கொள். கஷ்டமேயிராது. அச்சம
யத்தில் நீ எழுதியிருப்பதை படித்துவிடு" என்று
சொன்னார்.

நமது அரசர் அவருக்கு வந்தன மளித்தார்.
ஆனால் அவர் சொன்னபுத்திமை அநுசரிக்க வில்லை.
அவ்விருந்து சமயத்தில் இவர் பேச எழுந்து நிதா
னித்து நன்றாகப் பேசினார். அப்பொழுது இவர் சமீ
பத்தில் இவருடைய அந்த உறவினரிருந்தார். 'கர்வ
முள்ள பையனே, நான் சொன்னபடி ஏன் செய்ய
வில்லை? நிச்சயமாக மத்தியில் பேச முடியாமல்
நின்றுவிடுவாய்', என்று இவர் அன்புமேலிட்டுச்சொ
ன்னார்.

ஆனால் நமது அரசர் பேசும்பொழுது அப்
படி நடுவில் தயங்காமலும், உளரிக்கொட்டாமலும்,
தெளிவாகவும், யாவரும் கேட்டு மெச்சும்படியாக
வும், தாட்டியாக உபந்நியாசம்செய்து முடித்தாராம்.
இவ்விதம் இரண்டு மூன்று தடவை பிரசங்கம் செய்
தாராம். அவைகள் வெகு சிறந்தவைகளென்று
அநேகர் சொன்னார்கள்.

ஜார்ஜ் அரசர் தமது தகப்பனாரிடத்திற்குச் செ
ன்று, அப்பா! இவ்வளவு பேர் கையொப்பம் செய்

திருக்கிறதே அவ்விருந்து வெகு சிறப்பாக நடந்த தென்பதைக் காண்பிக்கிறது என்று சொன்னார். அப்பொழுது உறவினராகிய கேம்பிரிட்ஜ் பிரபு இவ் வேடிக்கையைப் பார்த்து மனப்பூர்வமாக சிரித்தா ராம்.

குழந்தைகளைக் குரூரமாக நடத்துவதைத் தடுக் கும் சபையின் கூட்டம் பிப்ருவரியீ நடந்தேறியது. அப்பொழுது இவர் சபைத்தலைமையை வகித்து இந்த சபையார் 8 வருஷங்களுக்குள் குரூரமாய் நடத் தப்பட்டுவந்த 25,000 திக்கற்ற பிள்ளைகளை சம்ர க்ஷித்து வருவதைப்பற்றி சிலாக்கித்து மிக்க அநு தாபத்துடன் பேசினார். அக்காலத்தில் ஹோம்செக்ரி டெரியாயிருந்த மிஸ்டர் ஆஸ்குய்த் செய்த பிரசங்க த்திலிருந்து அநேக நல்விஷயங்களையெல்லாம் எடுத் துக்காட்டினாராம். ராஜவம்சத்தைச்சேர்ந்த சபா நாயகர் இச்சபையின் விருந்துசாப்பாடுக்காக 2,800 பவுன் கையொப்பம்செய்யப்பட்டிருப்பதும் திருப்தி கரமா யிருக்கிறதென்றார். அதேசமயத்தில் ஒரு வியாபாரச்சபையார் ஜார்ஜைக்கண்டு மகிழ்ந்து அவ ருக்கு ஒரு அழகான பெட்டியை இனமாகக் கொ டுத்தார்கள். பின்னிட்டு ஒரு கப்பலுக்கு வைஸ் - அட்மிரலாக நியமிக்கப்பட்டார்.

மே அரசிக்கும், யார்க்குபிரபுவுக்கும் 1893-ம் வரு ஷம் மே மாசம் 3௳ யன்று தான் விவாகநிச்சயமான நல்ல சமாச்சாரம் பைரங்கமாக எல்லாருக்கும் தெ ரியவந்தது. அடுத்தநாள் எல்லா பத்திராதிபர்களும் இவ்விவாகம் எல்லா தேசத்தாருக்கும் திருப்தியை

யும் சந்தோஷத்தையும் உண்டாக்குகிற தென்று எழுதினார்கள். ஜார்ஜின் தகப்பனார் மிட்ல் டெம்ப்ல் என்ற பாரிஸ்டர்கள் பழகி வருமிடத்தில் புசிக்கும் பொழுது தமது குமாரர் மே என்ற இளம் பிராய முள்ளவும் மனத்தைக் கவரத்தக்கவுமான மாதை மணம் புரிந்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கின்றமை யால் அவர் வராததற்காக மன்னிக்க வேண்டுமென் றூர். இந்த விவாகம் நிச்சயமானதில் விக்டோரியாராணி யார் மிகுந்த களிப்படைந்து இருவரையும் முகமலர் ச்சியுடன் ஆசிர்வதித்து வந்தார்கள். இம்பீரியல் இன் ஸ்டிட்யூட் விக்டோரியா ராணியாரால் திறக்கப்பட்ட பொழுது யார்க் பிரபுவும், மே அரசியும் வந்திருந் ததை ஜனங்கள் கண்டு குதூகலத்துடன் சந்தோ ஷம் செய்தார்கள். இச்சமயத்தில் அலக்சாண்டிரா ராணியார் தமது இரண்டு புத்திரிகளுடன் கிரீஸ் தேசத்திற்குப் போயிருந்தார்கள். தங்களது குமார னது கலியாணம் நிச்சயமானதைக் கேட்டு பரமான ந்தங்கொண்டு தங்களது அத்யந்த சந்தோஷத் தை தந்தி மூலமாகத் தெரியப்படுத்தி ஒருவாரத்தி ற்குள் லண்டன் மாநகருக்கு வந்து சேர்ந்தார்கள். வி வாகத்திற்கு வேண்டிய பலவிதமான ஏற்பாடுகளைச் செய்து வைத்தார்கள். உலகத்திலுள்ள பலதேசங் களிருந்து விலையுயர்ந்த வெகுமதிகள் வந்து குவிந்து கொண்டிருந்தன.

ஜூன்மாசம் 14உ யார்க் பிரபு இராஜ குடும்பத் துக்கு வெகு காலமாக சிநேகமுள்ளவரும் வயது முதிர்ந்தவருமான அட்மிரல் கனம் சர்ஹாரி கேப்ப லைக்கண்டு தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார்.

அவருக்கு அப்பொழுது 84-வது வயது முடிந்த தினம். அங்கு புசித்து தமது கையெழுத்தை ஒரு கடிதத்தில் எழுதிவைத்தாராம். இப்பொழுது லார்ட் வெர்ஸ்லியாயிருக்கும் கனவான் ஜார்ஜ் அரசரையும் அரசியையும் கௌரவப்படுத்தும் பொருட்டு ஒரு தோட்டக் கச்சேரிவைத்தார். அதற்கு இத்தம்பதிகள் சென்றிருந்து அங்கு வந்திருந்த பல பிரபுக்களுடனும், சீமாட்டிகளுடனும் சரசமாய் பேசிக்கொண்டிருந்தார்களாம்.

விவாக வைபவத்திற்காக முன்னே அலக்சாண்டிரா ராணியாரும் 7-வது எட்வர்டும் வேண்டியஏற்பாடுகளைச் செய்துவர திட்டம் செய்தார்களென்று சொன்னோமல்லவா? இன்னும் ஊர்கோலம் செல்லும் மார்க்கங்களில் மகரதோரணங்கள், பூப்பந்தல், கொடிகள் முதலியவைகளால் அலங்காரம் செய்யப்பட்டு வந்தன.

மணமகன் சித்திரம் வரைவதில் கைதேர்ந்த சர் லியூக் பைல்ட்ஸ் என்பவருக்குத் தமது அருமையான தாயாரைப்போல் அழகான சித்திரப்படம் வர்ணமிட்டு வரையும்படி உத்திரவு செய்தார். அவர் அவ்விதமே செய்து கொடுக்க, அதை நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் தங்கள் ஆஸ்திகளிலொன்றாகப் பாவித்து வெகு சிரத்தையுடன் அதைப் பாதுகாத்து வருகிறார்கள். தாயிடத்தில் அன்பு மிகுதியால் இவ்விதம் செய்தார் என்றே நாம் சொல்லவேண்டிய தவசியமில்லை.

ஏனெனில் அலக்சாண்டிரா ராணியார் தமது

குழந்தைகளைச் சரியான வழிகளில் மிக்க அன்புடன் நடத்தி வந்திருக்கிறார்கள். ராணியார் குணங்களெல்லாம் ஜார்ஜ் அரசரிடத்திலிருக்கின்றன.

பக்கிங்ஹாம் அரமனையில் ஜூன்மாதத்தில் ஒரு பாட்டு கச்சேரி நடந்தது. அப்பொழுது நமது சக்ரவர்த்தினி மே ராணியார் வரவழைக்கப்பட்டிருந்தார். ராணியார் சந்திரனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்ததை அங்கு வந்தவர்கள் கண்டுகளித்தார்கள். யாவரும் நமது குலத்தைப் பிரகாசிக்கச் செய்யும் மாது சிரோமணி நீடூழிவாழவேண்டும் என்று பிரார்த்தித்து பலவித இராகத்துடன் பாடினார்கள்.

விக்டோரியாராணியார் தமதுபேரன் ஆல்டர்ட் விக்டர் மரணத்தால் மிக்க பலஹீனமாய் துக்க சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். இவ்விராணியார் துக்கம் கொண்டாடிக்கொண்டு பால்மோரல் அரமனையில் வசித்துக்கொண்டிருந்தார்கள். தமது இன்னொரு பேரனாகிய ஜார்ஜூக்கு விவாக நிச்சயமான நாள் முதற்கொண்டு விக்டோரியாராணியாருக்கு தேக வலிமையும், மனதிடமும், சந்தோஷமும் உண்டாகத் தலைப்பட்டன. இது சகஜ மன்றோ?

விவாக விஷயமாய் செய்யவேண்டிய ஒவ்வொரு காரியமும் மகாராணியார் சம்மதித்து அங்கீகரித்த பின் தான் செய்யப்பட்டு வந்தது. இது மகாராணியாரிடத்தில் வைத்திருந்த இராஜ குடும்பத்தார்களுடைய அன்பையும், மரியாதையையும், கௌரவத்தையும் காண்பிக்கின்றதல்லவா?

யார்க் பிரபு ரிச்மாண்டிலுள்ள முனிசிபல் கட்ட டத்தைத் திறந்தார். அப்பொழுது ஒருவாரம் வோ யிட்லாட்ஜில் தங்கியிருந்தார். இச்சமயத்தில் ஜார் ஜுக்கும் மேரி ராணியாருக்கும் விவாகம் ஆகப்போ கிறதென்ற சமாச்சாரத்தைக் கேள்வியுற்ற வயது முதிர்ந்த ஒரு சீமாட்டி ஒட்டுவேலையால் தானே செய்த மெத்தையையும், ஒரு சதை கால் ஜோடாக அணியும் சட்டையையும் விவாக வெகுமதிகளாக அத்தம்பதிகளுக்குக் கொடுக்க எடுத்துக்கொண்டு வந்தாளாம். போலீஸ் சேவகர்கள் இம்மாதை உள் ளே விடாமல் தடுத்தமையால், மிக்க கோபங்கொண்டு வருத்தப்படுகையில், ஜார்ஜ் அரசர் கேள்வியுற்று, அம்மாதை உடனே உள்ளேவிடும்படி உத்திரவளி த்தது அவருக்கிருக்கும் ஸ்திரீகளிடத்திலுள்ள மரி யாதை குணத்தைக் காண்பிக்கிறதல்லவா ?

ராயல் இன்ஸ்டிடியூடில் ப்ரோபஸர் டீவர் (Liquid air) வாயு நீரான வஸ்துவாகும் அதிசயங்களைப்பற்றி சிறந்த உபந்நியாசம் செய்தபொழுது 7-வது எட் வர்ட் அவர்கள் சபைத்தலைமையை வகித்தார். அச் சமயத்தில் ஜார்ஜ் அரசரும் சென்றிருந்தார். லார்ட் சாலிஸ்பரி முதலிய பிரபல பிரபுக்கள் இப்பிரசங்கத் தைக் கேட்க வந்திருந்தார்கள். அவரது குமாரரும் வாயு நீரான வஸ்துவாகு மென்பதை சாஸ்திரோக்த மாய் நிரூபிப்பதையறிய மிக்க பிரியமுடையவரா யிருந்தார்கள்.

நமது ஜார்ஜ் அரசர் மேற்சொல்லிய சபைகளுக் கெல்லாம் சென்ற போதிலும் அங்கு கூச்சமுள்ள

வராகத் தென்பட்டாராம். இதற்குத் திருஷ்டாந்தமாக லண்டனில் ஒரு விருந்து நடந்தபொழுது தமது சிநேகிதரொருவரிடத்தில் "இங்கு வந்திருக்கும் ஒருவரும் எனக்குத் தெரியவில்லையே! நானோ அநேகமாக கடற்படையில் இது வரையிலிருந்தது உமக்குத் தெரியுமே" என்றாராம். ஆயினும் விவாகப் பொருத்தம் நிச்சயம் செய்தபின் இவரும் மேரி ராணியாரும் அடிக்கடி ஒவ்வொரு சபைக்கும் தோட்டக்கச்சேரி, விருந்து முதலியவைகளுக்கும் அழைக்கப்பட்டமையால் இவரது கூச்சம் போய்விட்டது. இவர் யாவருடனும் தாராளமாகப் பழக ஆரம்பித்துவிட்டார். இது வரையிலும் கப்பற் படையிலிருந்தவர் இப்பொழுது தமது பந்து மித்திரர்களுடன் கூடிக்குலாவிக் கொண்டும், ஒவ்வொரு பொதுக்காரியங்களுக்கும் போய்க்கொண்டு மிருப்பது புதுமையாயிருந்த போதிலும், இது இவருக்கு இவ்வித மகோற்சவத்தில் அதிக ஆநந்தத்தை விளைவித்ததாம். இவர்களைவிட வயதில் தாழ்ந்தவர்கள் கூட அவ்வளவு மனமகிழ்ச்சியுடன் தென்படவில்லையாம்.

---

## நான்காவது அதிகாரம்.

## விவாகம்.

விவாகத்திற்கு இரண்டு மூன்று நாள்களுக்கு முன் வெகுமதியாக அளிக்கப்பட்ட விநோதப்பொருள்களை யாவருக்கும் காட்ட வொயிட்லாட்ஜில் ஒரு விருந்து நடந்தது. டெக் பிரபுவின் மனைவி

யார் (Duches of Teck) தமது புத்திரியின் ராஜ வம்சத்தைச் சேர்ந்த சிநேகிதர்களையும், பிரபுக்களையும் வரவழைத்ததுமன்றி அநேக காலமாக தமது புத்திரியை விசுவாசித்துவந்த ரிச்மாண்டிலுள்ளவர்களையும் வரவழைத்திருந்தார்கள்.

விவாகமானபின் 3500க்கு மேற்பட்டுள்ள சிறந்த வெகுமதிகளைப் பொது ஜனங்கள் கண்டு களிக்க வேண்டுமென்று இம்பீரியல் இன்ஸ்டிட்யூடில் வைக்கப்பட்டன. அவாவுள்ள ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து இவைகளைப் பார்த்தார்களாம்.

இவைகளில் நல்ல வேலைப்பாடுள்ள நகைகளும், வீட்டுக்குரிய அலங்காரப் பொருள்களும் அடங்கியிருந்தன. காமன் சபையில் ஜார்ஜ் என்று பேருள்ளவர்களெல்லாம் சேர்ந்து அடையாளமாக ஒரு வெகுமதி அனுப்பினார்கள்.

வைரக்கல்லால் ஒரு நேர்த்தியான ஹாரம் மணமகளுக்கு விக்டோரியா ராணியாரால் வெகுமதியாக அளிக்கப்பட்டது. மணமகன் மணமகளுக்கு அளித்த வெகுமதிகளில் அருமையான நங்கூரம் போன்ற நகை. இதில் வைடூரியம் இரத்தினம் முதலியகற்கள் இழைக்கப்பட்டிருந்தமையால் வெகு பிரகாசமாயிருந்ததாம். யூகினி ராணியார் வைரத்தால் இழைக்கப்பட்ட மார்ச்சட்டையைச் சேர்க்கும் பொத்தானைப் போன்ற நகையை மணமகளுக்குக் கொடுத்தார்கள்.

ஜெர்மன் சக்ரவர்த்தி விலையுயர்ந்த மேன்மூடியுள்ள கெண்டியை அனுப்பினாராம். இது பொன்னினும், வெள்ளியினும் செய்யப்பட்டும் மேன்மூடி ராஜாங்கத்திற்குரிய கிரீடம் போலுமிருந்தது. அழகான தலைக் குல்லா யொன்றை ஸரே தேசத்து ஜனங்கள் அனுப்பினார்கள். இது வைடூரியத்தால் இழைக்கப்பட்டிருக்கிறதாம்; மேரி ராணியாருக்கு இதை அணிந்து கொள்வதில மிகப் பிரியமாம்.

ஜூலைமாதம் 6வ ஜனங்களெல்லாம் வெகு குதூகலமாயிருந்த நாளென்றே சொல்லலாம். அன்று மழையுமில்லை, இளம் வெயிலிருந்ததாம். வெடியிற் காலையிலிருந்து மத்தியானம் 12-மணிவரையிலும் லண்டன் மாநகருக்கு ஜனங்கள் கும்பல் கும்பலாக ஊர்கோலத்தை ஆவலுடன் பார்க்க வந்து கொண்டிருந்தார்கள். வழிகளில் ஆயிரக்கணக்கான கும்பல்களிருந்தன. 10-மணியானதும் செண்ட் ஜேம்ஸ் அரமனையிலுள்ள அம்பாசடர்ஸ் கோர்ட்டில் நுழைய ஜனங்கள் ஆரம்பித்தார்கள்.

முதலில் 7-வது எட்வர்டுக்குச் சிநேகிதரும் இராஜ தர்மநிபுணருமான மிஸ்டர் க்ளாஸ்டன் வந்தார். இவர் நமது காலஞ்சென்ற 7-வது எட்வர்டுக்கு நெருங்கிய சினேகிதர்களில் ஒருவர். மாதர்கள் தரித்திருந்த உடுப்பும், அணிந்திருந்த நகைகளும், அம் மண்டபத்தின் அழகை எடுத்துக்காட்டிற்று. முதல் ஊர்கோலம் புறப்பாடு ஆனதுஎன்பதைத் தெரிவிக்க வெளியிலுள்ள பாண்டு வாத்தியம் முழங்கிற்று.

பிரபுக்களும் சீமாட்டிகளும் கோயிலில் தூமிர வர்ணமுள்ள ஆடையாலலங்கரித்த ஸ்தானங்களில் வீற்றிருந்தார்கள். உடனே மணமகனாகிய ஜார்ஜ் அரசர் இச்சிறு கோயிலுள் தமது தகப்பனார், சிற்றப்பன், முதலியவர்களுடன் பிரவேசித்தார். தளகர்த்தன் அணியும் உடுப்பை ஜார்ஜ் அணிந்திருந்தார். கூச்சமுள்ள வராகத் தென்பட்டார்.

இவர் இங்கு தமக்கு மனைவியாகப் போகும் மேரிக்காக அதிக நேரம் காத்திருக்க வில்லை. உடனே மேரி ரோஜா நெருஞ்சி முதலியவைகளைப்போல் பூப்போட்ட உடுப்புகளை யணிந்துகொண்டு தமது உறவினர்களுடன் யாவரும் சந்தோஷப் படும்படி வந்து சேர்ந்தாள்.

கலியாணப் பெண்ணுக்குத் தோழிகளிருப்பது வழக்க மல்லவா? அவ்விதமே அவர்களிலும் உண்டு. நமது மேரி ராணியார் மணக்கோலம் கொண்டபொழுது அவர்களுக்குத் தோழிகளாகப் பிரின்ஸஸ் விக்டோரியாவும், மாட் ஆப்வேல்ஸுமிருந்தார்கள். இவர்களும் இன்னும் சிலமாதரசிகளும் ராணியாருடன் ஆலயத்திற்குள் சிறிதுதூரம் வரையில் வந்தார்கள். டெக் பிரபு தமது புத்திரியின் விவாக மகோற்சவத்தைக் கண்டுகளிக்க வெகு ஆவலாயிருந்தார். இவரும் இவரது குமாரனும் மேரியுடன் பலிபீடத்திற்குப் போனார்கள். டெக்பிரபுவின் மனைவியார் தம் பதிகளுக்கு அருகில் பேரின்பக் கண்ணீர் பொங்க உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

இவ் விவாகத்திற்காக அநேக மன்னர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்களில் ருஷியா சக்ரவர்த்தினி, டென்மார்க் அரசரும், அரசியுமே. இவர்கள் நமது ஜார்ஜ் பாலியப்பருவ முதற்கொண்டு ஜார்ஜின் மீது மிகவாஞ்சையுள்ள வர்களாயிருந்தார்கள். மணமகன் பலிபீடத்திற்கு எதிரில் வருவதற்கு முன் நமது விக்டோரியா மகா ராணியார் வந்தார்கள்.

அங்குள்ள மன்னர்கள், பிரபுக்கள், குருமார்கள் எல்லாம் முகமலர்ச்சியுடன் எழுந்து நின்றார்கள். வாத்தியகோஷம் மகாராணியார் வரவைத் தெரிவிக்க முழங்கிற்று. வெள்ளி சரிகையால் பூவுள்ள கறுப்பு பட்டாடையைத் தரித்துக்கொண்டும், வைர மிழைத்துள்ளசிறிய கிரீடத்தை சிரசில் வகித்துக்கொண்டும், ராஜதண்டம் முதலிய அடையாளங்களுடன் இவ்வுலகத்திலுள்ள சக்ரவர்த்திகளைவிட மிக்க ஐசுவரியம், பெருமை, கீர்த்தி, பெற்றுவிளங்கிய சக்ரவர்த்தினி தமது அருமையான பேரனுடைய விவாக மகோற்சவத்தைக்கண்டு களிக்கவும், பேரனையும் பேரனது மனைவியையும் ஆசீர்வதிக்கவும் அத்திவ்ய ஸ்தலத்திற்கு வந்தார்கள்.

கலியாணமண்டபம் இப்பொழுதுதான் நிறைந்திருந்ததென்று சொல்லலாம். இக்காட்சி வெகு அழகாகயிருந்ததாம். அங்குள்ளவர்கள் கண்குளிர இக்காட்சியைப்பார்த்து ஆநந்த சாகரத்தில் மூழ்கினார்களாம்.

குருமார்கள் விவாகச்சடங்கை நடத்த வந்திருந்தார்கள். அவர்களில் கேன்டர்பரி ஆர்ச்பிஷப்,

(அத்தியக்ஷகர்) லண்டன் பிஷப், ரோசஸ்டர் பிஷப், கனம் ரெவரெண்டு ஈகார்கிளேன் என்பவர்களே.

காண்டர்பரி அத்திய க்ஷகர் கிரமப்படி விவாகச் சடங்குகளை நடத்தினர். கூடிய சீக்கிரத்திலேயே சடங்குகள் முடிந்தன.

மணமகளை மணமகன் கையில் ஒப்புவித்து மணமகளின் தகப்பனர் மெதுவான தொனியில் தம் மகளை அங்கீகரிக்கும்படி சொன்னர்.

ஆர்ச் பிஷப் சுருக்கமாக சூழ்ச்சி, அடக்கம், இவைகளின் அவசியத்தைப்பற்றியும், நடத்தை, எண்ணம், பேச்சு இவைகளில் அறிவும் தேவையென்பதைப்பற்றியும் ஊன்றிப்பேசி, உலகத்தாருக்கு இவ்விவாகம் நன்மையை விளைவிக்குமென்றும் தமது எண்ணத்தைத் தெரிவித்தார்.

ஒரு கீதம் பாடியபின், யார்க்பிரபு, தமது மனைவி, விக்டோரியாராணியார், இளவரசியாயிருந்த தமது தாயார், தமது மாமியார், டென்மார்க் அரசி, அரசர் முதலியவர்களுடைய கரத்தைப் பிடித்து முத்தமிட்டார். இவர்கள் மிகுந்த ஆநந்தத்துடன் அதை அங்கீகரித்தார்கள்.

மணமகளையும் மகனையும் விக்டோரியா மகாராணியாரும் இன்னும் மற்ற மன்னர் முதலியவர்களும் வாழ்த்தினர்கள். சீதனங்களும், வெகுமதிகளும் அளிக்கப்பட்டவுடன் பக்கிங்ஹாம் அரமனைக்கு சிற்றுண்டி புசிக்க பவனி சென்றார்கள்.

இச்சமயத்தில் பீரங்கி வெடிகள் தீர்ந்தன. லண்டனி லுள்ள கோயில் மணிகளின் சப்தம் முழங்கிற்று.

பக்கிங்ஹாம் அரமனைக் கெதிரில் வதூவரர்களி ருவரும் திரும்பிவருவதைக் காணஜனங்கள் கூட்டம் கூட்டமாய் ஆவலுடன் நின்றுகொண்டிருந்தார்கள். ஜார்ஜ் அரச சக்ரவர்த்தியும் மேரி ராணியும் விக் டோரியா மகா ராணியார் முதலியவர்களுடன் சாளர சார்ப்பில் உட்கார்ந்து சுமார் 10-நிமிஷகாலம் பேசிக் கொண்டிருந்தார்கள். எவரும் எதிர்பாராத இவ்வற் புத காட்சியைக்கண்டு களித்தார்களாம்.

இராஜ கிரகத்தில் விருந்துச் சாலையில் சம்பிரம மாக விருந்து நடந்தது. அச்சமயத்தில் கடவுளை வணங்கி தம்பதிகளை ஆசீர்வதிப்பதுண்டு. அப்படி யே நமது காலஞ்சென்ற விக்டோரியா மகா ராணி யாரவர்கள் செய்தார்கள்.

இந்த யிடத்தில் ஸ்தலம் போதாமையால் இன் னும் 300 விருந்தாளிகள் நடனசாலையில் விருந்துண் டார்கள். இச்சமயம் பாண்ட் வாத்தியம் முழங் கிற்று. இரண்டரை மணிக்கு ராஜ வம்சத்து ரிஜிஸ் டரில் தம்பதிகளும் இவர்களுடைய நெறுங்கிய பந் துக்களும் தங்கள் தங்கள் கையெழுத்தை எழுதி னார்கள். இது ஆங்கிலேயரின் வழக்கம்.

அரமனையிலிருந்து லிவர்பூல் தெருவு ஸ்டேஷன் மார்க்கமாக ஜார்ஜ் சக்ரவர்த்தியும் மேரி ராணியும் சவாரிபோக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விவாக தினத்தில் எவ்வளவு ஜனங்கள் இவர்களைப் பார்க்கக்

கூடுமோ, அவ்வளவு பேரும் இவர்களைக் கண்டுகளிக்குமாறு இவ்வித ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றையதினம் சூரியன் உக்கிரமின்றி பிரகாசித்துக் கொண்டிருந்தது யாவருக்கும் சந்தோஷத்தை யுண்டாக்கியது. மூடு வண்டியின்றி நாலு குதிரைகள்பூட்டிய வண்டியில் தம்பதிகள் ஏறிக்கொண்டு சவாரி சென்றார்கள். மேரி ராணியார் வெண்ணிறமுள்ள உடுப்பைத் தரித்துக்கொண்டுபோனார்கள். பொன்வர்ணமுள்ள குல்லாயின்மேல் விலையுயர்ந்த வெள்ளை இறகுகளை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

சாயங்காலம் சுமார் 5-மணிக்கு இவர்கள் புறப்பட்டார்கள். இவருடைய தகப்பனார் அப்பொழுது இளவரசராக யிருந்தார். இவர் தமது புத்திரர் மீது உயிரும் பிராணனு மாயிருந்தார். அவ்விதமிருந்தமையால் தம்பதிகளை மங்கள கரமாக ஆசீர்வதிக்கும் பொருட்டு இவர் எடின்பரோ பிரபுவுடனும், கேம் ப்ரிட்ஜ் பிரபுவுடனும் இவர்கள் புறப்படும் சமயத்தில் வந்து வண்டிக்குப் பின் ஒருபிடி அரிசியை எடுத்துவாரி இறைத்தாராம்.

ஒரு குதிரைப்படை இவர்கள்கூட செல்லுகையில் ஜனங்கள் வழியில் இடைவிடாது தங்கள் குதூகலிப்பைக் காட்டிக்கொண்டு வந்தார்களாம். தெருக்களில் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களோ மனதைக் கவர்ந்தனவாம். லண்டன்மா நகரத்து தெருக்கள் ஒருபொழுதும் இப்பொழுது இருந்த மாதிரி தென்படவில்லையாம். சவாரி செல்லுகையில் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி தமது டொப்பியை

அடிககடி எடுத்து உயர்த்தி காட்டிக்கொண்டே வந்தாராம். இது ஜனங்களுக்குச் செய்யும் மரியாதை. இவருடைய சுந்தரமான மனைவி சவாரி முடியும் வரையில் புன்சிரிப்புடன் தலைவணங்கி வந்தார்களாம்.

இவர்கள் சேன்ட்பால் கேதீட்ரல் சமீபத்தில் வந்தபொழுது லண்டன்மா நகரத்து அதிகாரி (Lord Mayor) நாலு குதிரைகள் பூட்டிய வண்டியில் ஏறிக்கொண்டு சக்ரவர்த்தியுடன் வந்தாராம். இன்னும் ஷெரிப் முதலிய உத்தியோகஸ்தர்களும் வந்தார்கள். இவர்கள் மேன்ஷன் அவுஸுக்குப் போனார்கள். இங்கு சிறிதுநேரம் தங்கினார்கள். லேடிமேயரஸ் (அதிகாரியின் மனைவியார்) புஷ்பச் செண்டை தம்பதிகளுக்கு அளித்தார்கள். இவர்களுடைய இரண்டு சிறிய பேரப்பிள்ளைகள் ரோஜா இலைகளையும் புஷ்பங்களையும் எடுத்து மேரிராணியார் மீது புஷ்பமாரி பொழிந்தார்கள்.

கோடிக் கணக்கான ஜனங்களிருந்த லிவர்பூல் ஸ்ட்ரீட் ஸ்டேஷனில், ரயில்வே மானேஜருடைய பெண் குழந்தை, இவர்கள் சன்ட்ரிங்காமுக்கு ரயிலில் ஏறிப்போவதற்குமுன், பற்பல வர்ணமமைந்த புஷ்பச் செண்டை ராணியாருக்குக் கொடுத்ததைப்புன்சிரிப்புடன் ஏற்றுக்கொண்டார்கள். கேம்ப்ரிட்ஜில் சக்ரவர்த்தியும் ராணியாரும் தங்கி லண்டன்மா நகரத்து அதிகாரியும் கார்பொரேஷனுமளித்தவந்தனோபசாரப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு தக்கபதிலளித்தார்கள்.

இங்கிருந்து புறப்பட்டு வுல்பர்டனுக்குச் சென்றார்கள். அப்பொழுது இரவு 8-மணியாயிற்று. இங்கிருந்து சென்ட்ரிங்காமிலுள்ள யார்க்காட்டேஜுக்குப் புறப்பட்டார்கள். ராஜபாட்டையில் தம்பதிகளைப் பார்க்க கணக்கில்லாத பிரஜைகள் கும்பலாய் ஆவலுடன் நின்று கொண்டிருந்தார்கள். இவர்கள் வருவதைக் கண்டு ராஜ விசுவாசத்துடன் இவர்களை வாழ்த்தியும் கரகோஷமும் செய்து வந்தார்கள்.

அன்றையதினம் பிற்பகலில் சன்ட்ரிங்காமிலுள்ள குடித்தனக்காரர் கூட்டமாகச் சேர்ந்து இவ்விவாக மகோற்சவத்தைக் கொண்டாடினார்கள். யாவரும் ஒன்று சேர்ந்து விருந்துண்டார்கள். அநேக நூற்றுக்கணக்கான பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டியும் தேயிலைத் தண்ணீரும் கொடுத்தார்கள்.

இல்லறம் நடத்தப் புகுந்த இவ்விருவர்களும் இவ்விதம் ஊர்வலம் வந்தமையால் இளைப்புற்று தங்களது யார்க் காட்டேஜுக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் இங்கு வந்த தக்ஷணமே, அங்குள்ள பொது ஜனங்களும், ஜலத்தால் சூழப்பட்ட சிறிய தீவுகளிலும், குன்றுகளிலும் லக்ஷக் கணக்கான விளக்குகளை ஏற்றிவைத்தார்களாம். நமது ஜார்ஜ்சக்ரவர்த்தி குழந்தைப் பருவமுதல் இங்கு தங்கியிருந்தமையால் இவர்களுக்கு நமது அரசர் நன்றாகத்தெரியும். ஆகையால் இவர்கள்கொண்ட சந்தோஷத்திற்கு அளவேகிடையாது. இவர்கள் வாழ்த்திய வாழ்த்துடன் சக்ரவர்த்தி—ராணியாருடைய, சந்

தோஷமான விவாக மகோற்சவம் முடிவுபெற்ற தென்றே சொல்லலாம்.

காலஞ்சென்ற நமது விக்டோரியா மகா ராணி யார் பின்வரும் தமது இராஜ்யங்களிலுள்ள பிரஜைகளுக்கு அன்புவாய்ந்த கடிதம் ஒன்று எழுதி அனுப்பினர்கள்:—"எனது பிரியமுள்ள பேரனுகிய யார்க்பிரபுவுக்கும் அவரது அன்புக்கினிய மணமகளாகிய மேரி ராணிக்கும் விவாகம் நடந்த காலத்தில் எல்லா தேசத்து ஜனங்கள் அனுப்பிய வாழ்த்துக்கும், அவர்கள் கொண்ட சந்தோஷத்திற்கும், ஆச்சரியமாய் எடுத்துக்காட்டிய ராஜபக்திக்கும், விசுவாசத்துக்கும், நான் மன முருகி சந்தோஷப்பட்டு எனது அன்புள்ள பிரஜைகளுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நிச்சயமாகவே இப்படி எனது பிரஜைகள் செய்தது புதிதுமல்ல, முதற்தடவையுமல்ல; ஏனெனில் நான் சுகித்துவாழும் பொழுதும், துக்கித்து வாழும் காலத்திலும் இப்பொழுது நான் அதிகமாய் உணரும் மாதிரி சிரத்தையாயும் அன்பாயும் அனுதாபம் எப்பொழுதும் காட்டி வருகின்றீர்கள். எனது ஹிருதயம் எனது விசாலமான ராஜ்யத்திலுள்ள ஜனங்களின் சுகதுக்கங்களுக்காக உண்மையாகவே படபடவென்று அடித்துக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியுமென்பதையும் நான் அறிவேன். இவ்வித உணர்ச்சி எனக்கும் உங்களுக்குமிருப்பது இவ்வகண்ட ராஜ்யத்தின் உண்மையான பலத்தை எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் எனது பிரியமுள்ள பேரன் பேத்தி முதலியவர்களின் க்ஷே

மத்தைக்கோருவதிலும், பிரார்த்திப்பதிலும் நானும் உங்களுடன் சேருகிறேன்.”

---

## பொது விஷயங்களில் ஊக்கம்.

### ஐந்தாவது அதிகாரம்.

1894-ம் வருஷ ஆரம்பத்தில் ஆஸ்ட்ரேலியாவுக்கு வந்து போகும்படி அழைப்புப் பத்திரம் வரவே, இன்னொரு சமயம் தாம் தமது மனைவியுடன் வருவதாகவும் இச்சமயம் வரமுடியாதென்றும் ஜார்ஜ் சக்ரவர்த்தி சொல்லிவிட்டார். சன்ட்ரிங்காமில் வசந்த காலத்திலும், கோடை காலத்திலும் தமது மனைவியுடன் வசித்துவந்தார்.

மார்ச்சுமீ 13-ம் தேதியன்று செண்ட்ஜேம்ஸ் அரமனையில் ராணிக்குத் பதிலாக இவர்களை யாவரும் தெரிசிக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. ராஜா முதலிய பெரியோரைத் தரிசிக்கும் கூட்டத்திற்கு லேவி என்று பெயர். இது நமது சென்னை கவர்ன்மெண்டு ஹவுஸில் அடிக்கடி நடந்துவருகிறது யாவருக்கும் தெரிந்திருக்கும். இக்கூட்டத்திற்கு எல்லா பிரபுக்களும் வந்திருந்தார்களாம். இது வெகு விமரிசையாக நடந்தேறியது.

எப்பிரல் மாசத்தில் வோர்ஸஸ்டருக்குப்போய் விக்டோரியா இன்ஸ்டிட்யூடுக்கு கட்டடம் கட்டுவதற்காக அஸ்திவாரக் கல்லை நாட்டினர். பின்பு

இங்கு கீர்த்திபெற்ற ஆலயத்தையும், பீங்கான் வேலைசெய்யும் சாலையையும் போய்ப்பார்த்துவிட்டு, நியூகேஸலுக்குச் சென்று, அங்கு பொது ஜனங்களுக் குரிய பலகாரியங்களைச் செய்தார்.

தமது சிறு தகப்பனுருடைய ஒரு குமாரத்திக் கும் ருஷியா சக்ரவர்த்தியின் குமாரனுக்கும் விவா கம் ஏப்ரல் மாசத்தில் நடத்துவதாக நிச்சயமா யிற்று. இவ்விவாகம் நடந்தேறியவுடன் கோபர்க் கில் இவரது சிற்றப்பனுடைய இன்னொரு குமாரத் திக்கும் விவாகம் நடந்தது.

இளவரசாயிருந்த 7-வது எட்வர்ட் அப் பொழுது லென்ஸிங்டனிலுள்ள சங்கீதம் போதிக் கும்படியான ராயல் காலேஜியைத் திறந்தார். அச் சமயத்தில் நமது ஜார்ஜூம் மேரி ராணியும் அவரு டன் சென்றிருந்தார்கள். அங்கு ஒரு விருந்து சாப்பாடு நடந்தபொழுது வியாதியுள்ள குழந்தை களுக்கு ஒரு வைத்தியசாலை அவசிய மென்பதை எடுத்து வாக்சாதுரியத்துடன் பேசினுர் நமது ஜார்ஜ சக்ரவர்த்தி.

இவர் ட்ரினிடிஹவுஸ் கார்பொரேஷனுக்கு மாஸ் டராக தெரிந்தெடுக்கப்பட்டார். மாலுமித்தொ ழில் செய்த இவருக்கு இவ்வுத்தியோகம் ஒத்திருந் தது. பாப்லார் என்ற விடத்தில் கப்பலோட்டிக ளுக்காக ஒரு சாலை திறக்கப்பட்டபொழுது இவர் அங்குபோயிருந்தார். இவர் தகப்பனும் போயிரு ந்தாராம். ஒரு மாலுமித்தொழில் செய்யும் சிறிய

பையனை ஒரு பையை தமது தகப்பனருக்குக் கொடுக்க வழிகாட்டி யனுப்பினராம். இது இவருக்கு தமது தகப்பனரிடத்திலிருக்கும் பிரியத்தையும் தமது பழமையான வேலையிலுள்ள அபிமானத்தையும் காண்பிக்கின்றதல்லவா ?

1894-ம் வருஷம் ஜூன்மாதம் 23உ ஜார்ஜ் அரசருக்கு ஒரு ஆண்குழந்தை ஜனித்தது. இச் சந்தோஷமான சமாச்சாரம் யாவருக்கும் தெரியவே, மனமகிழ்ந்தார்கள். ஏனெனில் இவருக்குப்பின் யார்க்குக்குப் பிரபு இவர்தான் ஆகவேண்டியதல்லவா? ஆனதுபற்றி எல்லாரும் ஆநந்தங்கொண்டு இக்குழந்தை தீர்க்காயுளுடனிருக்கவேண்டுமென்று ஆசிகூறினர்கள். இவரது தாயாரும், மாமியாரும் வோயிட்ஹவுஸில் பிரசவம் நடக்கும் சமயமுதற் கொண்டிருந்தார்கள்.

விக்டோரியா ராணியாரவர்கள் மேரிராணியார் பிரசவித்த இரண்டு தினங்கள் சென்றபின் சிம்மாசனத்திற்கு மூன்றுவது சுதந்தரவாளியாகிய இக் குழந்தையைப் பார்க்க வந்தார்கள். இக்குழந்தை பிறந்தது சோதியுள்ள கோடைகாலம் போலிருந்ததாம். இந்த நற்சமாச்சாரம் இங்கிலாந்தெங்கும் பரவவே, சந்தோஷத்தைத் தெரிவிக்கும் கடிதங்கள்பல வந்து குவிந்தன. ஒரு மாசமானவுடன் இக்குழந்தைக்கு ஞானஸ்னனம் செய்வித்து எட்வர்ட் ஆல்ப்ர்ட க்ரிஸ்டியன் ஜார்ஜ் அண்ட்ரூ பேட்ரிக் டேவிட் என்னும் பேருமிட்டார்கள்.

எப்பொழுதும் கைக்குழந்தையைக் காப்பாற்றி வருவது எவருக்கும் கஷ்டமல்லவா? நமது ராணியார் இவ்வருஷம் தமது குழந்தையை மிக்க கவலையுடன், காப்பாற்றுவதிலேயேயிருந்தார்கள். குழந்தை யாதொரு பிணியின்றிவளர்க்க, வளர்ந்து வந்தது எல்லாருக்கும் அதிகச் சந்தோஷத்தையளித்தது. ப்ரின்ஸ்டேவிட் என்று இக்குழந்தையை பந்துக்கள் கூப்பிட்டு வந்தார்கள். இக்குழந்தைக்குப் பாட்டி, பாட்டன், அத்தை, மாமா முதலிய உறவினர்களுண்டு. இவர்களுக்கு இக்குழந்தையின் மீது அத்தியந்த பிரியம்.

1895-ம் வருஷத்தில் ஆசியாவின் கிழக்கு பாகத்தில் நடந்து கொண்டிருந்த யுத்தம் மனவெழுச்சியை யுண்டாக்கிக் கொண்டிருந்தது. நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி போர்ட் ஆர்தர் பிடிபட்ட சங்கதி முதலிய சமாச்சாரங்களை மிக்க ஆவலுடன் படித்து வந்தார்.

ஜார்ஜ் சக்ரவர்த்தி ஜெனரல் போஸ்ட் ஆபீஸை பிப்ரவரி மாசத்தில் போய்ப் பார்த்தாராம். இது தான் முதற்தடவையாம். அப்பொழுது ரைட் ஆனரபுல் ஆர்னல்ட் மோர்லி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகயிருந்தார். இவர் அப்பொழுது அநேக சீர்திருத்தங்கள் செய்திருந்தார். அவர் ஏற்படுத்திய நல்ல முறைகளை யெல்லாம் கண்டுகொண்டார்.

சிலகாலஞ் சென்றபின்பு இவருக்கு இன்புளுயன்ஸா என்ற சுரம் கண்டது. யார்க்ஹவுஸில் சில வாரங்களாக இச்சுரத்தால் வருந்தி வந்தபோதிலும்

சீக்கிரத்தில் சௌக்யமடைந்தார். நார்போக் பிரபு இவரையும் ராணியாரையும் ஷெப்பீல்டுக்கு வரவழைத்து விருந்து செய்துவைத்தார். ஜார்ஜும் ராணியாரும் மிகமகிழ்ந்து இன்னும் அங்கு நடந்த பொதுக் காரியங்களுக்குச் சென்று அங்கு நடந்த வைபவங்களில் மிக்க அக்கரை எடுத்துக்கொண்டார்கள்.

இவ்விதம் இங்கு இவர்கள் ஜனங்களிடத்தில் அன்புகொண்டு அதிக விருப்பத்துடன் பொது விருந்து முதலியவைகளுக்கு வந்து அங்குள்ளவர்களுடன் சரசமாய்ப் பேசி வந்தமையால், ஜனங்கள் இவர்கள் மீது நல்ல அபிப்பிராயங் கொண்டார்கள். இவருடைய தகப்பனாரும் இவரை ஒவ்வொரு பட்டணத்தையும் பார்த்து வரும்படியான பொறுப்பை இவருக்கு ஏற்படுத்தினர். இவரும் தமது பிதாசொன்னபடி நடந்து யாவராலும் புகழப்பட்டு வந்தார்.

ஜூலையீ மேரிராணியாரிடத்தில் (Lady-in-Waiting) தோழியாயிருந்த ஈவா க்ரிவிலி என்ற மாதுக்கு விவாகம் நடந்ததைப்போய் சக்ரவர்த்தியும்சக்ரவர்த்தினியும் பார்த்தார்கள். பின்னிட்டு இம்மாதமத்தியில் ஜெனரல் எலக்ஷன் நடந்தபோது ஜார்ஜ் சக்ரவர்த்தியும் மேரி ராணியரும் சாலிஸ்பரி பிரபு பட்டதாரியின் விருந்தாளியாக ஹார்ட் பீடிலிருந்தார்கள். டிசம்பர் மாதத்தில் ப்ரின்ஸ் ப்ரான்ஸிஸ் இந்தியாவிற்குப் போகும்பொழுது சுபமொழிகளைச் சொல்லி அனுப்பினார்கள்.

டிசம்பர்மீ 14௳ யன்று இத்தம்பதிகளுக்கு இரண்டாவது ஆண்குழந்தை ஜனித்தது. இவர்கள் வெகு சந்தோஷப்பட்டார்கள். அநேகர் சந்தோஷச் செய்தியைக்கேள்வியிற்று ஜார்ஜுக்கு கடிதம் எழுதி யனுப்பினார்கள். யார்க் காட்டேஜிலிருந்து லண்டன் மாநகரத்து அதிகாரிக்கு (Lord Mayor of London ப்பின் வருமாறு பதில் எழுதி அனுப்பினார். 'லண்டன்மாநகரத்து வாசிகளுடைய ஆசீர்வாதங்களையும் அவர்கள் கொண்ட சந்தோஷத்தையும் தாங்கள் அன்புடன் அனுப்பியதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு எனது மனப்பூரண வந்தன மளிக்கின்றேன்.' இக்குழந்தைக்கு சகல வைபவத்துடன் ஆல்பர்ட் ப்ரடரிக் ஆர்தர் ஜார்ஜ் என்ற நாமிடப்பட்டது. டிசம்பர்மீ 14௳ விக்டோரியா மகா ராணியாரின் கணவரும், மகா ராணியாருடைய பிரியம் வாய்ந்த பிரின்ஸெஸ் ஆலிஸ் என்றபுத்திரியும் இறந்ததினம். இத்துக்ககரமானதினத்தில் இக்குழந்தை ஜனித்தது விக்டோரியா மகாராணியார் முதலியவர்களுடைய துக்கத்தை நீக்கிற்று.

1896-ம் வருஷம் மார்ச்சுமாதம் ஜார்ஜ் அரசர் Cab Drivers' Benevolent Association என்ற சபையார் அளித்த வருஷக்கொண்டாட்ட விருந்துக்குப் போயிருந்து சபைத்தலைமையை வகித்திருந்தார். இச்சபைக்கு இவரது தகப்பனார் சபாநாயகராக முன் 17-வருஷகாலமாகயிருந்தார். அவ்வித உந்நத ஸ்தானத்தை வகித்து அச்சபையின் நோக்கங்களைக் குறித்து அனுதாபத்துடன் பேசினார். மேலும் இச்சமயத்தில் கப்பலுக்குரிய விஷயங்களைப்

பற்றியும் சொன்னார். 'சென்ற வாரத்தில் காமன் சபையில் மிஸ்டர் கோஷன் கப்பல் படைக்குத் தேவையானவைகளை அப்போதைக் கப்போது செய்து வருவதே கவரன்மெண்டாரின் எண்ணமென்று சொன்னதைக் குறித்து நான் மிகுந்த சந்தோஷமடைந்தேன்,' என்று சொன்னார்.

இவ்வருஷத்தில் ஜார்ஜும் மேரி ராணியாரும் இங்கிலாந்திலுள்ள பலபாகங்களைப் போய்ப்பார்த்து வந்தார்கள். லங்காஸ்டரில் ஒருபுதிய தர்மவைத்திய சாலையைத் திறந்தார்கள். விக்டோரியா அவர்கள் 50-வருஷங்களுக்கு முன் இப்புராதனக் கோட்டையின் சாவிகளைப் பெற்றதுமுதல் இப்பொழுதுதான் ராஜ குடும்பத்தாரில் இவர்கள் இதைப் பார்வையிட்டது முதற்தடவையாம். முன் நடந்த பல யுத்தங்களையெல்லாம் நமது அரச குமாரர் சிந்தனை செய்து, வந்தனம் செய்து தேயிலை பானம் பண்ணுகையில் 300-வருஷங்களுக்கு முன் யார்க்கு பிரபு லங்காஸ்டருக்கு தமது மனைவியுடன்வர நினைத்திருக்கமாட்டாரென்று வேடிக்கையாகச் சொன்னாராம்.

அடுத்த நாள் சால்போர்டுக்கும் பிரயாணமானார்கள். 70,000 பவுன் செலவுசெய்து கட்டியுள்ள கைத்தொழில் பாடசாலையைத் திறந்தார்கள். இங்கிருந்து லிவர்பூல் மார்க்கமாகச் சென்றார்கள். ஜனங்கள் அப்பொழுது வெகு களிப்புடன் தங்கள் சந்தோஷத்தைக் காண்பிக்கும்பொருட்டு தெருக்களில் ஆயிரக்கணக்காய் கும்பல் கூடியிருந்தார்களாம்.

ஜூலை மாதத்தில் மிடில்செக்ஸ் ஆஸ்பத்திரியில் ஜனங்கள் தங்கியிருந்து தங்கள் வியாதியை சொஸ்தப்படுத்திக் கொள்ள விடுதிகளை ஏற்படுத்தினார்கள். இதில் "ப்ரின்ஸஸ் மே வார்டு" என்றபேரமைந்த ஸ்தலமுண்டு. இதைக்கண்டு மகிழ்ந்து இங்குள்ள வியாதியஸ்தர்களுக்கு நன் மொழிகளை மேரி ராணியார் பகர்ந்தார்களாம். சில நாள் சென்றபின் ராணியார் ரிச்மாண்ட் ராயல் ஆஸ்பத்திரியில் ப்ரின்ஸஸ் மேவார்ட் என்ற ஸ்தலத்தைத்திறந்தார்கள். தமக்கு விவாகமாகு முன்னமேயே ராணியார் இதற்காக 500 பவுன் பலரிடத்தில் பெற்று சேர்த்து வைத்தார்களாம். ஆகையால் இம்மாதரசியினுடைய பேரை இங்கு வைத்தது சரியல்லவா? இவர்கள் யார்க்குக்கு இரண்டாம் தடவை சென்றிருந்தார்கள், அப்பொழுது வியவசாய காட்சியையும், ராணுவ (குதிரை) வீரர் விளையாட்டு நடந்ததையும் கண்டு பூரித்தார்கள்.

1897-ம் வருஷம் மார்ச்சுமீ செவிடர்களுக்கும், ஊமைகளுக்கும் வாய்ப்பாடமாகப் போதிக்கும் சபையாரளித்த விருந்திற்குச் சென்றிருந்து சபைத்தலைமையை வகித்து, தமக்கு இவர்களிடத்திலுள்ள முழு அநுதாபத்தையும் தெரிவிக்கும் படியாய்ப் பேசினர். இச்சாலைக்கு இவரே சென்று அங்கு சித்திரம் கற்றுக்கொள்ளும் ஒரு ஊமையைக்கண்டு அவனுடன் பேசினாராம். அப்பொழுது அவன் தன்னுடன் பேசுபவர்களின் கருத்தைச் சுலபமாக அறிந்து கொள்ளுகிறதாகச் சொன்னான். அதாவது தான் ஊமையாயிருந்த போதிலும் கூட பேசுபவர்களின் பாக்கியமே பாக்கிய மென்பது தனக்குத் தெரியு மென்றானும், நொண்

டிப் பிள்ளைகள் ஆசிரமத்தை ப்ளேக்ஹீத்தில் போய்ப்பார்த்து "நெறுங்கிய லண்டன்மா நகரத்து தெருக்களிலிருந்து இங்கு இவர்கள் கொண்டு வரப்பட்டமையால் இவர்களின் தேக சௌக்கியம் சுத்தமான காற்ருல் விருத்தியடையும்" என்ருர்.

1897-ம் வருஷம் ஏப்ரல்மாதம் 25-ந்தேதி இவர்களுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்கு ஒரு மாதமானதும் விக்டோரியா அலெக்சாண்டிரா ஆலீஸ் மேரி என்ற பெயரையிட்டார்கள். இக்குழந்தை தேக சௌக்கியமாயும் பலமுள்ளதாயுமிருந்து வந்ததானது இவ்விராஜ குடும்பத்தாருக்கு அத்தியந்த ஆனந்தத்தை விளைவித்தது. ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு இவ்வொரு குழந்தையே பெண் குழந்தையாகையால் இப்பெண் குழந்தையின் மீது தாய் தந்தைக்கும் இதன் சகோதரர்களுக்கும் மிக்க பிரியம் அதிகரித்து வந்தது.

ஜூன்மாதம் விக்டோரியா மகாராணியாரின் டைமண்ட் ஜூபிலி கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. இப்பூலோகத்திலுள்ள பல தேசங்களிலிருந்து மகாராணியாரிடத்தில் அன்பும், கௌரவமும் வகித்த மன்னர்களும், பிரஜைகளும் தங்களது சந்தோஷத்தை மகாராணியாருக்குத் தெரியப்படுத்திஞர்கள். சென்ட் பால்ஸ் கெதீடரல் என்ற கோயிலுக்கு வெளிப்புறத்தில் நடந்த தெய்வ ஆராதனைக்கு விக்டோரியா மகாராணியாருடன் கூட ஜார்ஜ் சக்கரவர்த்தியும், மேரிராணியாரும் சென்றிருந்தார்கள்.

இம்மாதத்திலேயே தென்ஆபிரிக்கா விஷயமாக விசாரணை நடந்து கொண்டிருந்தது. இவ்விசாரணையில் ஜார்ஜூம், இவரது தகப்பனுரும் முக்கியமாக மிஸ்டர் ரோட்ஸ் சொல்லும் சாட்சியைக் கேட்டு அறிந்துகொள்ள மிக்க அவாவுடையவர்களாயிருந்தார்கள். ஐர்லாண்டுக்கு ஜார்ஜ் சக்ரவர்த்தியும் மேரி ராணியாரும் போவதாக அறிக்கை செய்யப்பட்ட சங்கதியை அத்தேசத்தார்கேட்டு, இவர்கள் வரவை மிக்க சந்தோஷத்துடனெதிர்பார்த்து கொண்டிருந்தார்கள்.

ஆகஸ்டு மாதம் 17-ந்தேதி லண்டனை விட்டுப் புறப்பட்டு ஐர்லாண்டு வந்துசேர்ந்ததும் கணக்குவழக்கில்லாத ஜனங்கள் ஒரு மிக்கவந்து இவர்களுக்கு நல்வரவு அகமகிழ்ந்து கூறினர்களாம். இவர்கள் ஊர்வலம் தெருக்களின் வழியாக வந்தார்கள். இவர்களுடன் வைசிராயும், லார்ட் ராபர்ட்ஸனும் கூட வந்தார்கள். ஜனங்கள் இவர்கள் வரவைக்குறித்து காட்டிய சந்தோஷத்திற்கு அளவேயில்லை. பின்னப்பட்ட வஸ்துக்களின் காட்சியைப் போய் பார்த்தார்கள். ராணியார் தையல் வேலையையும், சித்திரத்தையல் வேலையையும் நன்ருக வெகு நேரம் பார்வையிட்டு அவைகளின் வேலைத் திறமையைப் பற்றிப் புகழ்ந்து பேசினர்கள்.

பின்பு ஸயன்ஸ்அண்டு ஆர்ட் மியூசியத்தைப் போய்ப்பார்த்தார்கள். இங்கு காபூலில் யுத்தம் செய்யும்பொழுது மடிந்த தைரியமுள்ள லப்டினனண்ட் ஹமில்டனுடைய சிலை வைத்திருந்தது. இங்குள்ள சிங்காரத்தோட்டத்தையும் பார்த்தார்கள். பின்பு குதிரைப் பந்த

யம் முதலியவைகளை அடுத்த வாரத்தில் பார்த்துவிட்டு ராணுவச் சேனையையும் பார்வை யிட்டார்கள். டப்ளினில் வைஸிராய் ஒரு தோட்டக் கச்சேரிவைத்து பிரபுக்களையும் உத்தியோகஸ்தர்களையும் பொது ஜனங்களையும் வரவழைத்திருந்தார். அவர்களெல்லாரும் ஜார்ஜுடன் சரசமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஆகஸ்டுமாசம் 28உ கில்லர்னீ என்ற பெரிய ஏரியைப்பார்க்கச் சென்றார்கள். ஆனால் அதில் சிறு படகுவைத்துக் கொண்டு போக முடியவில்லை. அதின் அலைகள் மொரமரமாய்க் கிளம்பிக் கொண்டிருந்தன. மறுநாள் லார்ட் கேன்மேர் அவர்களுடைய அழகான மான்களுள்ள காட்டைப் பார்வையிட்டு வேட்டை ஆடினார்கள். அப்பொழுது ஒரு சிவப்பு நிறமுள்ள காட்டு மானைப்பிடித்துக் கொண்டு வந்தார். ராணியார் அந்த ஏரியில் நீர் விளையாட்டு ஆடினார்கள். இதன்பின் வெலன்ஷிய ஹார்பரைப் பார்த்துவிட்டு லார்ட் டன்ரேவனுடன் தங்கியிருந்தார்கள். இரண்டு மூன்று நாள் ஓயாமல் மழை பெய்தது. ஆயினும் ராணியாரைப் பார்க்க கும்பலாய் ஜனங்கள் வந்துகொண்டிருந்தார்கள். எனக்கு "ஐர்லாண்டு தேகசௌக்கியத்திற் கேற்றதாயிருக்கிறதென்று" சொன்னார்கள்.

லண்டன்டரி என்ற பட்டணம் விசித்திரமான கதைக்குப் பேர்போனது. இப்பட்டணத்தையும் பார்த்தார்கள். இத்துடன் ஐர்லாண்டு முழுவதையும் பார்த்து முடிந்ததென்றே சொல்லலாம். இவ்விதம் இவர்கள் செய்த பிரயாணம் ஜனங்களுடைய மனதில்

சாஸ்வதமா யிருக்கும்படியான அன்பையும், இராஜ விசுவாசத்தையும் நிலை நாட்டியது. இவர்களும் அவ்வூர் ஜனங்களைப்பற்றி செவ்வனே அறிந்துகொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் தமது ஜென்ம தேசத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

ஜார்ஜ் அரசர் "நாங்கள் ஐர்லாண்டைப் பார்வையிட்டபடியால் மனதிற் பலவிஷயங்கள் பதிந்திருக்கின்றன. இவைகள் எங்களது ஞாபகத்திலிருந்து அகலாது" என்று கடிதம் எழுதி வைசிராயிக்கு அனுப்பினார்கள். ஜார்ஜும் மேரிராணியாரும் க்ஷேமமாய் பிரயாணம் செய்துவிட்டு திரும்பி வந்ததைக்கண்டு களித்து "ஐர்லாண்டுக்கு எனது அன்பிற்குரிய பேரப்பிள்ளைகள் சென்ற காலையில் ஒவ்வொரு யிடத்திலும் ஜனங்கள் மிகவும் ராஜ விசுவாசத்துடனும் இவர்களை அன்புடனும் வரவழைத்து விருந்து முதலியவைகள் செய்ததையும் கேட்டு மிகுந்த சந்தோஷப்படுகிறேன்" என்று விக்டோரியாமகாராணியார் வைசிராய்க்கு தந்தி அனுப்பினார்கள்.

யாவரும் ஞாபகத்தில் என்றும் வைக்கத்தக்க இப்பிரயாணத்தால் இவர்கள் மனதில் சந்தோஷமே குடிகொண்டிருப்பதற்குப் பதிலாக கவலை என்ற இருள் இவர்கள் மனதை மூடிக்கொண்டது. மேரிராணியாரின் தாயார் எப்ரல் மாதம் முதற்கொண்டு அசௌக்கியமாகவே யிருந்தார்கள். இவர்கள் பிரயாணம் செய்து வருகையில் மேரிராணியாருக்கும் அவர்களது தாயாருக்கும் கடிதப்போக்கு நடந்துகொண்டு வந்தது. மேரி ராணியார் தமது தாயார் பலவீனமா

ய்க்கொண்டு வருவதைக் கேட்டார்கள். ஏப்ரல் மாத கடைசியில் இவர்களது தாயார் வியாதியால் மிகவும் வருந்தினார்கள். வேண்டிய வைத்திய சிகிச்சை செய்யப்பட்டு வந்தது. குணமும் கண்டது. ராணியாரும் மகிழ்ந்து தமது தாயார் வெகுகாலம் ஜீவித்து வரவேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் அக்டோபர் மாதம் 25-ந்தேதி மிக்க அசௌக்கியமாயிருந்து 27-ந் தேதி இறந்தார்கள். சவத்தை யடக்கம் செய்து உத்திரகிரியை நவம்பர் மாதம் செய்யப்பட்டது. வெகு ஜனங்கள் விசனங்கொண்டாட வந்திருந்தார்கள். மேரி ராணியாருடைய தகப்பனார் தமது மனைவியின் பிரிவைப்பற்றி வருந்தி விசனமேலிட்டு பலவீனமாய்க் கொண்டு வந்தார்.

டெக்கின் பிரபுவின் மனைவியாருக்கு வருஷம் 5,000 பவுன் கொடுக்கப்பட்டு வந்தது. இது சொற்பத் தொகையாயிருந்தும் பொதுக்காரியங்களுக்குவேண்டிய நன்மைகளைச் செய்து வருவதில் இதிலிருந்து சிறிது தொகை எடுத்து செலவழித்து வந்தார்களாம். இம்மாதரசியாரின் உதாரகுணங்கள் அடியில் வரும் விஷயங்களால் நன்றாகத் தெரியும். "தருமம் செய்ய என்னிடத்தில் அதிகப்பணமில்லை; ஆனால் நான் சாவகாசம், பணம், செல்வாக்கு முதலியவைகளைச் சந்தோஷமாகக் கொடுக்கிறேன்" என்றாளாம். மேலும் ஒருவர் பத்திரிகைக்கு இம்மாதின் விஷயமாக பின்வரும் சமாச்சாரத்தை எழுதியனுப்பினாராம். இம்மாதரசி ஒரு ஆஸ்பத்திரியைப் பார்க்கச் சென்றார்கள். அங்கு ஒரு ஸ்திரீ ஓயாமல் அழுதுகொண்டிருப்பதைக் கண்டு ஏன் இவ்விதம் இம்மாது அழுகிறாளென்று விசாரிக்க

வே, டாக்டர் இரணத்தை அறுக்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். உடனே நான் அம்மாதினிடத்திற்குச் சென்று 'அம்மாதை தைரியப்படுத்துகிறேன் என்று சொல்லி செய்தார்களாம்.

மேரி ராணியாருக்கு தமது தாயாரின் மரணம் இடிபோலிருந்தது. ஆயினும் தமது வயது சென்ற தகப்பனாரின் துக்கத்தை மெதுவாக ஆற்றிக்கொண்டு வந்தார்கள்.

1908-ம் வருஷம் மார்ச்சுமாதம் ஜார்ஜ் அரசரும் மேரி ராணியாரும் பால்மோரலுக்குப் போய் அங்கு இரண்டுவாரம் தங்கியிருந்தார்கள். இச்சமயத்தில் லார்ட் சாலிஸ்பரியும், மிஸ்டர் க்ளாஸ்டனும் வெகு அசௌக்கியமாயிருந்தார்கள். இவர்கள் அடிக்கடி சென்று இவர்களைப் பார்த்து வந்தார்கள். மனதுக்கிசைந்த வார்த்தைகளையும் வியாதியஸ்தர்களுக்குச் சொல்லி வந்தார்கள். ஏப்ரல்மாதம் யார்க் அவுலிலிருக்கும்பொழுது, இவரும் இவருடைய சகோதரரும் உலகமுழுவதும் சுற்றிப்பிரயாணம் செய்த "பெச்சாண்டி" என்ற கப்பலைப்போன்ற, மாதிரி கப்பல் ஒன்று செய்து வெகுமதியாக யளிக்கப்பட்டது. அந்தக்கப்பல் ஒடைந்து போனமையால் அக்கப்பலின் துண்டுகளைக்கொண்டு இது அழகாகச் செய்யப்பட்டதாம். இவ்வித் வெகுமதியைப் பெற்று மிகச்சந்தோஷப் பட்டார். டிசம்பர் வரையிலும் சிற்சில இடங்களுக்குச் சென்று வந்தார்கள்.

1899-ம் வருஷம் விக்டோரியா மகாராணியாரின் 80-வது வருஷோற்சவம் வெகு சிறப்பாக நடந்தேறி

யதுதான் மிக்க முக்கியமானது. இனி அடிக்கடி விக்டோரியா மகாராணியார் பொது விஷயங்களுக்காக வெளிக்கிளம்பி வரமாட்டார்களென்ற வதந்தி பரவிற்று. சவுத் கென்சிங்டனுக்கு மகாராணியாரவர்கள் போனபோது ஜனங்கள் இவர்களது வரவைக் கொண்டாடியதற்கு அளவேயில்லை.

1900-ம் வருஷமுதலில் தாமே ஐர்லண்டுக்குப் போய் வந்தார்கள். அக்குமுன் இவர்களது பேரனும் பேத்தியும் (மேரி ராணியாரும்) போய் வந்தார்களல்லவா? தாமும் போய் அவர்களது மனதில் ஆழ்ந்தராஜ விசுவாசத்தையும் நல்ல எண்ணத்தையும் உண்டாக்கினார்கள்.

தென் ஆபிரிக்காவில் நடந்த யுத்தத்தில் ராஜ குடும்பத்தாருக்குத் தெரிந்த அநேக சிநேகிதர்கள் இறந்தது மிகுந்த வருத்தத்தை யாவருக்கு முண்டாக்கியது. ஆயினும் மகாராணி யாரவர்கள் ஜனங்களுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டு வந்ததும் தவிர அவர்களுடனும் கூட இருந்து வந்தார்கள்.

1900-ம் வருஷம் ஜனவரி மாசத்தில் டெக்பிரபு இறந்துவிட்டார். அப்பொழுது அவருக்கு வயது 62. செத்துப்போகும் முன் ஒரு வருஷகாலமாக மிக்க பலம் குறைந்தவராகவே யிருந்தார். தமது தகப்பனார் குணப்படுவார் என்ற நம்பிக்கை யில்லாமலிருந்தும் இவரது மரணம் மேரி ராணியாருக்கு அதிக துக்கத்தை உண்டாக்கியது.

1900 ம் வருஷம் மார்ச்சு மீ ஜார்ஜுக்கும் மேரி ராணிக்கும் இன்னொரு ஆண் குழந்தை பிறந்தது. இது மற்ற குழந்தைகளைப் போல் பலமுள்ளதாகக் காணப்படவில்லை. ஒருமாசமானவுடன் இக்குழந்தைக்கு ஹென்ரி வில்லியம் ப்ரெடெரிக் ஆல்பர்ட் என்ற பேரை வைத்து வெகு கவலையுடன் இக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்த்து வந்தார்கள்.

தென் ஆபிரிக்கா சண்டைக்கு ஆஸ்த்ரேலியாவிலிருந்து போய் சண்டை செய்து ஜெயம் பெற்று திரும்பி வந்த சேனைகளுக்கு ஒரு விருந்து நடந்தது. அப்பொழுது எட்வர்ட் அரசரும் ஜார்ஜும் அவ்விருந்திற்குப் போயிருந்தார்கள்.

ஜுன் மாசத்தில் மிஸ்டர் க்ளாட்ஸ்டனுடைய பெண்சாதி இறந்துவிட்டாள். நமது ஜார்ஜும் ராணியாரும் மிகவும் விசனப்பட்டார்கள். 1898-ம் வருஷம் மே மாசம் மிஸ்டர் க்ளாட்ஸ்டன் இறந்த பொழுது எட்வர்டும் ஜார்ஜும் சவத்துடன் கோயிலுக்குப் போய் சவப் போர்வையைப் பிடித்துக் கொண்டிருந்தார்களாம். இப்படி அப்பெரியோருக்கு மரியாதை ராஜ குடும்பத்தார் செய்தது சிறந்த காரியமல்லவா?

---

## இளவரசர். இளவரசி.

### ஆறுவது அதிகாரம்.

1901-ம் வருஷ ஆரம்பமே விசனமாய் முடிந்தது. விக்டோரியா மகாராணியாரவர்கள் நாளுக்கு நாள்

அசௌக்கிய மடைந்து வந்தார்கள். வெகு நாளாக நடந்த தென் ஆபிரிக்கா சண்டையின் வருத்தம் மகா ராணியாரவர்களுக்கு மேலிட்டு பலத்தைக்குறைத்து வந்ததென்று சொல்லலாம். ஏனெனில் மகாராணியா ரவர்கள் அநேகதடவை "எனது பரிதாபப்படத்தக்க சோல்ஜர்களென்று" எல்லாருடைய மனதும் உருகும் படி சொல்லியிருக்கிறார்கள். சண்டையில் மடிந்தவர் களுடைய உறவினருக்கு நல்ல வார்த்தைகளைச் சொ ல்லி துக்கத்தை தள்ளாதகாலத்திலும் விக்டோரியா ராணியாரவர்கள் ஆற்றி வந்தார்கள். 1900-ம் வரு ஷத்தில் மகாராணியாரே அதிக விசனப்பட்டார்கள். ஷேச்ஸ்-கோபர்க்-கோதாவின் பிரபுவாகிய இவர்களது குமாரன் 56-வது வயதில் இறந்தது ராணியாருக்குப் பெருத்த விசனமல்லவா? ஜனவரி மாதத்தில் டேக் பிரபு இறந்தார். க்ரிஸ்டியன் விக்டர் என்ற தைரிய அரசன் ப்ரிடோரியாவில் யுத்தகளத்தில் மாண்டான். இவன்தான் மகாராணியாருக்குச் செல்வப் பேரன். தான் மடிந்தால் யுத்த களத்திலேயே தன்னைப்புதை த்து வைக்கும்படி சண்டைக்குப் போகும் பொழுது தனது பெற்றோர்களைக் கெஞ்சி கேட்டுக்கொண்டான். இது இச்சிறு அரசருக்கிருந்த வீரச்செய்கையைக் காண்பிக்கின்றதல்லவா?

விக்டோரியா மகாராணியார் படுத்த படுக்கை யாய் வெகுகால மிருக்கவில்லை. சிலநாள் வியாதியால் சங்கடப்பட்டார்கள். ஆயினும் ராணியார் சலியாமல் ராஜாங்க காரியத்தைச் செய்து வந்தார்கள். சிலநாள் வேலைதான் குவிந்திருந்ததாம்.



விக்டோரியா மகா ராணியார்.

ஜனவரி மாசம் 23உ மகாராணியாரவர்கள் பரமபதமடைந்தார்கள். உலக அரசர்களில் சிறந்தவரும், பெரிய வருமான விக்டோரியா மகாராணியார் மரண மடைந்தார் என்ற துக்கச் செய்தியை அறிந்த ஆண், பெண், குழந்தை, கிழம் அடங்கலும் மிகுந்த விசன முற்று மனங்குன்றி கண்ணீர் தாரை தாரையாகச் சுரந்து அழுதார்கள். இவர்களது குமாரராகிய 7-வது எட்வர்ட் அவர்கள் அரச சக்ரவர்த்தி யானார்கள். யார்க் பிரபு ஜார்ஜ் காரன்வால் பிரபு வானார். இவர் தமது தகப்பனுருக்கு பற்பல வழிகளில் உதவி புரிந்து வந்தார்.

7-வது எட்வர்ட் அரச சக்கரவர்த்தியாரின் உத்திரவின் பேரில் காரன் வால்பிரபுவும் அவரது மனைவியாரும் ஆஸ்ட்ரலேஷியாவுக்குப் பிரயாணம் போகவேண்டு மென்ற ஏற்பாடு ஆயிற்று. அவ்விதமே மார்ச்சு மீ 16உ பார்லிமெண்டை முதற்தடவையாசுத்திறக்க ஜார்ஜ் அரசரும் மேரி ராணியாரும் இங்கிலண்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றூர்கள். இவர்களுடைய குழந்தைகளை அலாக்சாண்டிரா ராணியாரும் 7-வது எட்வர்ட் அரசரும் வளர்த்து வருவதில் ஜாக்கிறதை யாயிருந்தார்கள். முதலில் பிறந்த குழந்தையாகிய ப்ரின்ஸ் எட்வர்ட் "நான் எனது தம்பி, சகோதரி முதலியவர்களைப் பார்த்து வருகிறேன்" என்றூர். இக்குழந்தைக்கு வயது 7 கூட ஆகவில்லையாம்! இச்சொல்லைக் கேட்டு அனைவரும் மிக மகிழ்ந்தார்கள்.

இவர்கள் இவ்விதம் எல்லா தேசங்களையும் சுற்றிப்பார்ப்பது ஆஸ்ட்ரேலியா, நியூஸிலெண்டு, தென்

ஆபிரிக்கா, கானடா முதலிய விடங்களிலுள்ள பிரிடிஷ் ஜனங்களுக்கு அதிக சந்தோஷத்தை யுண்டாக்கியது. அரசரும், ராணியாரும் அடிக்கடி தங்கள் தகப்பனருக்கும் தாயாருக்கும் தந்திமூலமாக க்ஷேமசமாச்சாரங்களைத் தெரிவித்து வந்தார்கள் இவர்கள் இவ்விதம் சௌக்கியமாகவே சுற்றுப் பிரயாணம் செய்துவந்தார்கள். எப்பொழுதும் ஒரே ஊரில் வெகுகாலமிராமல் வருஷத்திற்கு ஒருதடவையாவது வெளியூர்களுக்குச் சென்றுவருபவர்கள். தேகசௌக்கிய முடையவர்களாயிருப்பார்கள். ஏனெனில் பட்டணங்களில் ஜனநெருக்க மதிகமிருக்கும். நல்லகாற்றிராது. கிராமங்களில் ஜனக்குறைவாயிருக்கும். நல்லகாற்று வீசிக்கொண்டிருக்கும். மைதானங்களும், தோப்புதுறவு முதலியவைகளுமிருக்கும். நல்லகாற்றைசுவாசித்தும் நல்லதண்ணீரைக் குடித்தும் வருவதே தேகத்திற்குப் பலநன்மைகளை உண்டாக்கும்.

காமன்வெல்த் பார்லிமெண்டைத் திறந்தார்கள். நியூஸீலெண்டில் மௌரிஎன்ற சாதியார்களில் சிலரைக்கண்டு அவர்களுடைய பிரியமான வார்த்தைகளைக் கேட்டு சந்தோஷமடைந்தார்கள். கானடாவுக்கு நமது அரசர் முன்போயிருப்பதால் இது புதியதல்ல. ஆயினும் ராணியார் அலங்காரமான காட்சியையும், அவ்விராஜ்யத்தின் வளப்பத்தையும் கண்டு களித்தார்கள். பின்பு தங்களது பிறந்த ஊருக்குப் போகப்புறப்பட்ட பொழுது இன்னும் சிலநாள் நமது அரசரும் ராணியாரும் தங்கியிருக்கவில்லையென அங்குள்ள ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். நமது

அரசர்மீதுள்ள அவர்களது பிரீத்தை இப்படிச் சொன்னது காண்பிக்கின்றதல்லவா ?

நவம்பர் மாசம் 1உ போர்ட்ஸ்மௌத் ஹார்பரில் வந்து இறங்கினார்கள். 7-வதுஎட்வர்ட் சக்ரவர்த்தியும், அலக்சாண்டிரா ராணியாரும், ஜார்ஜ் அரசரின் குழந்தைகளும் துறைமுகத்தில் நின்ற கப்பலுக்கு வந்து சேர்ந்தார்கள். தாய் தந்தைக்கு தங்களை விட்டுப் பிரிந்த பிள்ளை திரும்பி வந்தாலும் சரி, குழந்தைகளை விட்டு தாய்தந்தை பிரிந்திருந்து திரும்பி வந்தாலும் சரி, அப்பொழுது பிள்ளைகளுக்கும், தாய்தந்தைக்குமுண்டாகும் சந்தோஷத்திற்கு அளவேகிடையாது. ஜார்ஜ்அரசரும், மேரிராணியார் தமது அரமனையில் குழந்தைகளுடன் சுகமாகயிருந்தார்கள். எட்டுநாள் சென்றபின் 7-வது எட்வர்ட் பிறந்தநாள் வந்தது. அன்றையதினம் காரன்வால்பிரபு (ஜார்ஜ் அரசர்) ப்ரின்ஸ் ஆப்வேல்ஸ் ஆனார். டிசம்பர்மாசம் 5உ சாயங்காலம் கில்ட் ஹாலுக்கும் போனார்கள். இங்கு லண்டன்நகரத்து ஜனங்கள் தங்களது சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள். அப்பொழுது ஜார்ஜ்அரசர் "இங்கிலாந்து! எழுந்திரு" என்ற விஷயத்தைப்பற்றிப் பேசினார். இப்பேச்சை ஒவ்வொருவரும் கொண்டாடினார்கள். பிரின்ஸ்ஆப்வேல்ஸ் ஆனபடியால் ஜார்ஜ்அரசர் தமது தகப்பனார் இப்பட்டத்தை அடைந்து அவர் செய்துவந்தமாதிரி இரக்கமுள்ளவராயும் சாமர்த்தியமுள்ளவராயுமிருந்து தமக்குள்ள காரியங்களைச் செய்துவந்தார். மேலும்அரசசக்ரவர்த்தியாயிருந்த7வது எட்வர்டுக்கு பெரும் உதவியாயிருந்தார். இப்படி இவ

யிருந்தமையால் இவர்களிருவரும் சேர்ந்திருப்பதைப் பார்க்க ஜனங்களுக்கு சந்தோஷமாயிருந்தது.

ஒரு சமயத்தில் அவசரமாக வெளியிற் போய்வர வண்டிவருமளவும் தமது பேரப்பிள்ளைகளுடன் பேசி விட்டு வண்டி வந்தவுடன் தமதுபேரப் பிள்ளைகளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு நான் வெளியிற் போய் வருகிறேன் என்று சொல்லி புறப்பட்டு விட்டாராம். இப்படி தமது குழந்தைகளிடத்தில் பிரியத்தைக்காட்டி வந்தமாதிரி 7-வது எட்வர்ட் சக்கரவர்த்தி தமது பிரஜைகளிடத்திலும் பிரியமுடையவராயிருந்தார். அவ்விதமே நமது ஜார்ஜ் அரச சக்கரவர்த்தியுமிருக்கிறார். அதனால் தான் வெகு தூரத்திலுள்ள இங்கிலாண்டிலிருந்து டெலலிக்கு வருவதாக நமக்கு வாக்களித்தார்.

1902-ம் வருஷம் வசந்தகால முழுவதும் எட்வர்ட் சக்கரவர்த்தியின் பட்டாபிஷேகத்தைப் பற்றி ஆவலாயிருந்தார்கள். பட்டாபிஷேகத்திற்குமுன் எட்வர்ட்சக்கரவர்த்தி அசௌங்கியமாயிருக்கிறாரென்றும் இவருக்குண்டான பிளவை அறுக்கவேண்டியதவசியமென்றும் தெரிவிக்கப்பட்டவுடன் லண்டனில் மாத்திரமல்ல, இந்தியா முதலிய பல பிரிடிஷ் நாடுகளில் ஜனங்கள் கொண்ட விசனத்திற்கு கரையில்லை. இது மாத்திரமா? இதர அரசர்களிருக்கும் தேசத்தாரும் மிக விசனப்பட்டார்கள். ஏனெனில் இவர் எல்லாராலும் புகழப்பட்டு வந்தார்.

லண்டனில் தோரணம் கட்டிக்கொண்டிருப்பவர்களும், கோயிலில் வேலைசெய்து கொண்டிருப்பவர்க

ளும், இச்சங்கதியைக் கேட்டு திடுக்கிட்டார்கள். செய்துவரும் வேலையை அப்படியே விட்டு விட்டார்கள். இதரதேசத்து மன்னர்களும் தங்கள் தேசங்களுக்குத் திரும்பிப்போக ஏற்பாடு செய்தார்கள். எங்கும் துக்கமே மேலிட்டிருந்தது. ஜனங்கள் மிக்க வருந்தினர்கள். நமது சக்கரவர்த்தி வியாதியினின்று சீக்கிரம் சௌக்கியமடைய வேண்டுமென்று கடவுளை ஸ்தோத்திரம் செய்து வந்தார்கள்.

மனக்கவலை யிருந்தகாலத்தில் ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் அரமனையில் எல்லாரையும் தைரியப்படுத்திக் கொண்டு வந்தார். தமது தாயாரையும் சகோதரிகளையும் தேற்றி வந்தார். தமது தகப்பனர் காரியதை யெல்லாம் தம்மால் கூடியமட்டும் நடந்தேறும்படி செய்து வந்தார். பட்டாபிஷேக விருந்து சாப்பாட்டுக்கு இவர்களை வரவழைத்திருந்தார்கள். ஜார்ஜ் சக்கரவர்த்தி சில விருந்துகளுக்கு தமது தகப்பனரின் கட்டளைப்படி சென்றார். இவ்விதம் போகாமலிருந்தால் ஜனங்கள் அதிக விசனப்பட்டுக் கொண்டிருப்பார்களென்ற எண்ணத்துடன் எட்வர்ட் கட்டளையிட்டார். தெய்வச்செயலாய் நமது 7-வது எட்வர்ட் சக்கரவர்த்தி சௌக்கிய மடைந்தார். லண்டனைவிட்டு வேறு ஊருக்கு சிறிதுகாலம் தமது புத்திரருடன் எட்வர்ட் சக்கரவர்த்தி சென்றிருந்தார். அவ்விதம் செய்தது தேகஸ்திதியையும் பலத்தையும் இன்னும் விருத்திக்குக்கொண்டு வந்தது.

7-வது எட்வர்ட் முழு தேகசுகத்தையடைந்தவுடன் பட்டாபிஷேகம் வெகு விமரிசையாக நடந்தது.

சடங்கை ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் பார்த்துக்கொண்டிருக்கும்படி இவர் தகப்பனர் சொன்னர். ஏனெனில் தமக்குப்பின் தமது குமாரன் பட்டத்திற்கு வரும் பொழுது இச்சடங்கை செய்ய வேண்டுமல்லவா? கிரீடத்தையும் தரித்துக்கொள்ள வேண்டுமே! அதற்காக இப்பொழுது தமக்கு நடக்கும் சடங்கின் விவரங்களைக் கவனித்து வரும்படி சொல்லியிருக்கலாம்.

ராஜகுடும்பத்தை சேர்ந்தவர்களை வரவழைத்து விருந்து அளிப்பதில் வெகு சுறு சுறுப்பாய் ஜார்ஜ் அரசரிருந்தார். இவருக்கு விடுமுறை தினம் வந்ததும் லண்டனை விட்டுட்போய் துப்பாக்கியும் கையுமாயிருக்க விரும்பினர்.

1902-ம் வருஷம் டிசம்பர் மீ 20உ இன்னெரு ஆண்குழந்தை ஜார்ஜ் அரசருக்குப் பிறந்தது. தாயாரும் குழந்தையும் சௌக்ய மாயிருந்தார்கள். குழந்தைக்கு ஒரு மாசமானவுடன் ப்ரின்ஸ் ஜார்ஜ் எட்வர்ட் அலக்சாண்டர் எட்மண்ட் என்ற பேரையிட்டார்கள். ஜார்ஜ்அரசருடைய மற்றகுழந்தைகள் சௌக்யமாய் வளர்ந்து வந்தார்கள். இவர்கள் லண்டன் பார்க்குக்கு வண்டியில் அடிக்கடி போய் வருவார்கள். அடிக்கடி இவர்கள் அரமனையில் விருந்து நடந்து கொண்டிருக்கும். விருந்தாளிகளுடன் குழந்தைகள் சங்கோச மில்லாமல் பேசிக்கொண்டும் விளையாடிக் கொண்டு மிருப்பார்கள். இவர்கள் லண்டன் தெருக்களில் சவாரி செய்யும்பொழுது சோல்ஜர்கள் அல்லது உத்தியோகஸ்தர்கள் சலாம் செய்தால் இவர்க

ளும் அவர்களுக்கு உடனேசலாம் செய்யும்படி போதி க்கப்பட்டு வந்தார்கள்.

1904-ம் வருஷத்தில் நடந்த ருஷிய ஜப்பான்யுத் தம் நமது அரச சக்ரவர்த்திக்கு ஆழ்ந்த விருப்பத் தை யுண்டாக்கியது. யுத்தகப்பலில் பழகினவராகை யால் புதிய மாதிரியாய் யுத்தம் அவர்கள் செய்ததை இவர் கவனித்து வந்தார். இவர் பிறந்த நாள் முதல் ருஷியா சக்ரவர்த்திக்கும் இவருக்கும் சிநேகம் உண் டாய் பலப்பட்டு வந்தது. ஜப்பானிய தலைவர்களில் சிலருடன் அறிமுகம் செய்துகொண்டும் வந்தார்.

வோர்ஸஸ்டரிலுள்ள பிள்ளைகளுக்கு வெகுமதி யளி த்தபோது நமது ஜார்ஜ் அரசர் "ஒவ்வொரு வோர்ஸ ஸ்டர் பிள்ளையும் 18 மாதகாலம் வோர்ஸஸ்டரில் தள கர்த்தராக யிருந்து வேலை பழகி கீர்த்திபெற்ற அட் மிரல் டோகோவைப்பற்றி பெருமை பாராட்ட வே ண்டும்" என்று சொன்னர். டோகோ இங்கிலாந்தில் எல்லாரிடத்திலும் பிரிய முடையவராயிருந்தார். இவ ரை பட்டாபிஷேககாலத்தில் வரும்படி இவருக்கு ஜார்ஜ் அரசர் அழைப்பு கடிதம் அனுப்பினர்.

போர்ட் ஆர்தரை அட்மிரல் டோகோவும் ஜெ னரல் நோகியும் பிடித்துக் கொண்டார்கள். நமது அரசர் இவ்விருவர்களுடைய சாமர்த்தியத்தைக் கண்டு சந்தோஷமடைந்தார். மார்குய்ஸ் ஈடோ என்பவர் இங்கிலாந்துக்கு வந்தகாலத்தில் ஜார்ஜ் அரசரைக் கண்டு அறிமுகம் செய்துகொண்டார். அநேக தட வை ஜப்பானைப்பற்றி, பற்பல விஷயங்களைக் கேட்டு

அறிந்துகொண்டார். ஜார்ஜ் அரசரும் மேரிராணியும் ஜப்பான், சீனு முதலிய தேசங்களைப்பற்றி புஸ்தகங்களைப் படித்து தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

---

## இங்கிலாந்தில் சுற்றுப் பிரயாணம்.

### ஏழாவது அதிகாரம்.

1904-ம் வருஷ முழுவதும் ப்ரின்ஸஸ் வேல்ஸும் 7-வது எட்வர்ட் சக்ரவர்த்தியும் சமாதானமே முக்யமென்று எண்ணி அதை விரும்பிவந்தார்கள். இவ்விதம் இவர்கள் செய்துவந்தமையால் யாவரும் இவர்களை பக்தியுடன் விசுவாசித்து வந்தார்கள்.

எட்வர்ட் ஐரோப்பா கண்டத்திலுள்ள ராஜாக்களையெல்லாம் போய்ப் பார்த்து வந்தார். சக்ரவர்த்தி க்ரேட் ப்ரிடனை பலப்படுத்தவும், இதர ராஜாக்களோடு சிநேகமாயிருக்கவும் தம்மால் கூடிய மட்டும் முயன்று வந்தார். சண்டை சச்சரவு சிறிது மிருக்கக்கூடாதென முழுமனதுடன் விரும்பி "சமாதானம் செய்வோன்" என்ற பெயரைப் பெற்றார். தமது காலத்திற்குப்பின் தமது விஸ்தாரமான ராஜ்யம் தமது பிள்ளைக்குரியதாகும் காலத்தில் அது நல்ல ஸ்திதியிலிருக்க வேண்டுமென்று விரும்பினர். இதர ராஜாங்கத்தாருடன் நடந்து கொள்ளவேண்டிய மாதிரி முதலியவைகளைப்பற்றி தமது குமாரனிடத்தில் தர்க்கித்துவந்தார். பிரான்சுக்கும் இவர்களுக்கும் சிநேக முண்டானது. இது அதிக சந்தோஷத்தை எல்லாருக்கும் உண்டாக்கியது என்றே சொல்லலாம்.

எட்வர்ட் சக்ரவர்த்தி வெளி தேசங்களுக்குப் போய் பல மன்னர்களைக் கண்டார். அவர்களும் இவரை வந்து பார்த்தார்கள். இவ்விதம் எட்வர்ட் சக்ரவர்த்தி செய்து வந்தமையால் யாவரும் இவருடைய சிறந்த குணங்களைப் புகழ்ந்து வந்தார்கள். இவர் பிள்ளை 1904ம் வருஷம் மார்ச்சுமாசம் ப்ரிடிஷ் அண்டு பாரன் பைபில் சொஸைட்டியின் 100-வது வருஷோற்சவ சம்பந்தமாக சென்ட் பால் கெதீட்ரலில் நடந்த தேவாராதனைக்குப்போயிருந்தார். அப்பொழுது எட்வர்ட் சக்ரவர்த்தி சிறிது தேகஅசௌக்ய மாயிருந்தமையால் போக முடியவில்லை. அலக்சாண்டிரா ராணியாரும் மேரி ராணியாரும், ப்ரின்ஸஸ் வேல்ஸும் கோயிலுக்குப் போயிருந்தார்கள்.

சிலநாள் சென்றபின்பு 'எட்வர்ட் ஆஸ்பிடல் பண்டு சம்பந்தமாக' வருஷாந்தரக் கூட்டம் கூடிற்று. ஜார்ஜ் அரசர் சபைத்தலைமையை வகித்து ஒரு சிநேகிதர் இவ்வாஸ்பிடலுக்கு வருஷம் 14,000 பவுன் வரும்படி அளித்திருப்பதைத் தெரிவித்தார்.

இவ்வைத்தியசாலை பண்டு இவரது தகப்பனாரால் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு எட்வர்ட் சக்கரவர்த்தியின் பேரப்பிள்ளைகளெல்லாம் முதல் முதலில் பண உதவி செய்தார்கள்.

மார்ச்சு மாதம் 17-ந்தேதி கேம்பிரிட்ஜ் பிரபு இறந்துவிட்டார். இவரது மரணம் ஜார்ஜினுடைய பாலியப்பருவத்தில் விசனத்தை யுண்டாக்கியது. இப்பிரபு இவரது சகோதரியிடத்திலும், குழந்தைகளிடத்திலும்

மிக்க அன்புடனிருந்தார். நவம்பர் மாதத்தில் போர்த்துகல் அரசரும் அரசியும் இங்கிலாந்துக்கு வந்து எட்வர்ட் சக்கரவர்த்தியின் விருந்தாளியா யிருந்தார்கள். கில்ட் ஹாலில் நடந்தவிருந்துக்கு இவர்களுடன் ப்ரின்ஸஸ் வேல்ஸ் சென்றிருந்தார். விண்ட்சருக்கு இவர்கள் போனபோது ஒரு உருவப்படம் எடுக்கப்பட்டது. சிலகாலஞ் சென்றபின் போர்த்துகலில் பட்டத்துக்கு வரவேண்டிய அரசர் கொலை செய்யப்பட்டதும், அவரது தகப்பனாரும் தாயாரும் நீக்கப்பட்டதும் இங்கிலாந்தி லுள்ளவர்களுக்கு அதிகவிசனத்தை யுண்டாக்கியது.

1905-ம் வருஷ ஆரம்பத்தில் டப்ளின் காஸலில் இராஜவிருந்து நடந்தது. அதற்கு ஜார்ஜ் சக்ரவர்த்தி போயிருந்தார். இவரது சகோதரி ப்ரின்ஸஸ் விக்டோரியா அசௌச்கியமா யிருந்தாள். இது விசனத்தை யுண்டாக்கிய போதிலும் சீக்கிரத்தில் சௌக்கியமடைந்தது அரச குடும்பத்தாரனைவர்க்கும் மகிழ்ச்சியை யுண்டாக்கியது. பிப்ரவரியில் சிங்குவா போர்ட்ஸ்-களுக்கு வார்டராக நியமிக்கப்பட்டார். டப்ளின் காஸலை பார்வையிட்டார். இது வில்லிங்க்டன் பிரபு இருந்தவிடம். வில்லிங்க்டன் பிரபு கீர்த்திபெற்றவர். இவர்மீது அதிகப்பிரியம்.

அவுஸ் ஆப் காமன்சபையில் ஜார்ஜ் அரசர் இந்தியாவுக்குப்போய் வரும் விஷயத்தைப்பற்றி பேசினார்கள். அட்படி பிரயாணம்செய்வதற்காக 20,000 பவுன் செலவுக்கு கொடுக்க ஏற்பாடாயிற்று.

ஜார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி ராணியாரும் 10,00 பவுன் டப்ளினிலுள்ள விநோத சித்திரம் வரையும் சாலைக்கு இனுமாகக் கொடுத்தார்கள்.

"எம்பையர் டே" யன்று ஜார்ஜ் அரசர் தமது சிறு தாயாராகிய பிரின்ஸஸ்லூயி அவர்களால் வரையப்பட்ட ஒருபடத்தை சேன்ட் பால்ஸ் கோயிலில் தென் ஆபிரிக்கா சண்டையில் படிந்தவர்களின் ஞாபகார்த்தமாக வைத்தார். ஜூன்மாதத்தில ஜார்ஜ் தமது இரண்டு புத்திரர் ளுடன் தேம்ஸ் நதியில் நீராவிபடகுவிட்டு வெஸ்ட் மின்ஸ்டரிலிருந்து கிரீன்விச் வரையிலும் சென்று திரும்பிவந்தார்.

தங்கள் தகப்பனுருடன் இவ்விருராஜபுத்திரர்கள் விடுமுறைகாலத்தைச் செலவழித்ததைக்குறித்து சந்தோஷமடைந்தார்கள். அவர்கள் திரும்பிவருபொழுது ஜனங்கள் இவர்களைக் கண்டு களித்தார்களாம்.

ப்ரின்ஸ் எட்வர்ட் ஆப் வேல்ஸுக்கு ஜூன்மாசத்தில் 11-வது வயது நிறைந்தது. வருஷப்பிறப்பு கொண்டாடப்பட்டது. அன்றையதினம் ப்ராக்மோரில் க்ரிகட் பந்தய விளையாட்டு நடந்தது. ப்ரின்ஸ் எட்வர்டும் விளையாடினுன். ராஜ குடும்பத்தா ரெல்லாம் தங்கள் குழந்தைகள் தங்கள் சிநேகிதர்களோடு சேர்ந்து விளயாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வேல்ஸ் யூனிவர்ஸிடிக்கு சேன்ஸ்லராயிருந்தமையால், வேல்ஸிலும், மன்மௌத் ஷயரிலுமுள்ள யுனிவர்ஸிடி காலேஜ் கட்டடங்களுக்கு அஸ்திவாரக்

கல்லை வைத்தார். ஜார்ஜ் சக்ரவர்த்தி அச்சமயம் கார்டிப்பில் மார்க்யுஸ் ஆப் ப்யூட்டின் விருந்தினராகயிருந்தார்.

ஜுலை மாசம் 12௳ நமது ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு இன்னொரு பிள்ளை பிறந்தது. இக்குழந்தைக்கு ஜான் சார்லஸ் ப்ரான்ஸிஸ் என்ற பெயர் வைத்து சண்ட்ரிங் காமில் ஞானஸ்நானம் செய்வித்தார்கள்.

## இந்தியாவில் சுற்றுப் பிரயாணம்.

### எட்டாவது அதிகாரம்.

அக்டோபர் மாசம் 19௳ நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி சக்ரவர்த்தினி யாருடன் தமது தகப்பனர் தாயார் முதலியவர்களிடம் உத்திரவும் ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டு இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்குப் பிரயாணம் செய்தார்கள். அப்பொழுது அநேகர் திரளாக இவர்களை வழியனுப்ப வந்திருந்தார்கள். கப்பல் புறப்பட்டு விட்டது.

1905-ம் வருஷம் நவம்பர்மாசம் 9-ந்தேதி வியாழக்கிழமைகாலை 10-45 மணிக்கு பம்பாய் துறைமுகம் வந்து அன்றுசாயங்காலம் 4 மணிக்கு பட்டணத்திற்குள் நுழைந்தார்கள். பம்பாயில் இராஜ தம்பதிகள் வந்தவுடன் ஜனங்கள் வெகு குதூகலத்துடன் அவர்களை தக்க உபசரணை மரியாதைகளுடன் நல்வரவுகூறி ஏற்றுக்கொண்டார்கள். இளவரசியார் இங்குள்ள சீமாட்டிகள் அளிக்கும் நல்வரவுபத்திரம் ஏற்றுக்கொள்வதற்காக நகரசபா மண்டபஞ் சென்றூர். இப்படி இளவரசியார் சென்றது விசேஷம் தான். ஏனெனில்

பம்பாய் முன்காலத்தில் இங்கிலாந்துதேசத்து இராணி யாருக்கு சீதன மாகக்கொடுக்கப்பட்டது. ஆகையால் இளவரசியார் அழகுபொருந்திய பம்பாய்நகரம் தமது சொந்தநகரமென்றே கருதக்கூடும். பம்பாய்முனிசிபாலிடியார் தங்கள் உபசரணைக் கடிதத்தைப் படிக்கவும், கோமகன் பின்வருமாறு பதிலுரைத்தார்.

"இளவரசியார் வரவைப்பற்றி விசேஷமாக நீங்கள் மகிழ்ந்ததாகச் சொன்னது இளவரசியாருக்கும் எனக்கும் மிகுந்த களிப்பை யுண்டாக்கியது. இளவரசியாரும் தாம் இங்கு வந்ததைப்பற்றி மிகச் சந்தோஷப்படுகிறார். 30 வருஷங்களுக்கு முன் இந்தியாவிற்கு வந்து இதேயிடத்தில் எனது அருமையான தந்தையார் உங்கள் நகர விசாரணை சபையார் அளித்த நல்வரவை ஏற்றுக்கொண்டார். நாங்களும் அவ்விதமே செய்ய வேண்டுமென்று எண்ணி யிருந்தோம். அவ்விதமே இப்பொழுது முடிந்திருக்கிறது. நாங்கள் பல தேசங்களடங்கிய பெருங்கண்டம் போன்ற இந்தியாவின் ஒவ்வொரு யிடத்தையும் சுற்றிப்பார்க்கையில் இத்தேசத்தார் நல்லெண்ணமும் விசுவாசமும் எங்களுக்குக் கிடைக்குமென்று நம்புகிறோம். நாங்கள் இங்கு நேராய் வந்து போகும் சிலாக்கியத்திற்கும் செய்த பிரயாணத்திற்கும் எங்களுக்கு வந்த பலனும் இருக்கும்."

"பிரின்செஸ் வீதி" என்னும் பெயருடன் விளங்கும் புதுவீதி யொன்றைத் திறந்தார்கள். இவ்வீதியானது பம்பாய் நகரவிருத்தி சங்கத்தார் கட்டியது. பீபில்ஸ் சந்தையின் வேடிக்கைகளையும்பார்த்து சுதே

சிகள் வாழும் நகரப்பிரிவின் சில தெருக்கள் வழியே யும் சென்றனர். அவர்கள் ஊர்கோலவழி முழுவ தும் உற்சாகம் நிறைந்திருந்தது. ஊர் முழுவதும் ஒருங்குகூடி வந்ததுபோல் தெருக்களில் எள்ளும் போட இடமில்லை. எல்லாரும் அரசரின் மகனையும் அவர்மனைவியையும் காணவும் கோலத்தின் வேடிக்கை விநோதங்களைப் பார்க்கவும் சந்தோஷமும் சிரிப்பும் பெருகி பெருங்கூட்டமாய் நின்றுகொண்டிருந்தார்கள்.

அன்றிரவு வேல்ஸ் இளவரசர் சுதேச அரசர்களு க்கும் பிரபுக்களுக்கும் கனவான்களுக்கும் பேட்டி தரும் சடங்கிலிருந்தார். அந்தச்சமயத்தில் அவர் பெ ருமாட்டியும் கோஷா சீமாட்டிகளைக் கண்டுறவாடினர்.

11-ம் தேதி சனிக்கிழமையன்று வேல்ஸ் இளவர சர் பல பொருட்காட்சி சாலை (Prince of Wales Museum) என்னும் சட்டடத்தின் அஸ்திபாரக் கல்லை வைத்தார். இந்தக் கட்டடமானது பம்பாயில் இள வரசரின் வருகையைக் குறிக்கும். இக்கட்டடத்தை கட்டி பீரோ முதலிய சாமான்கள் வைப்பதற்கு மாத் திரம் 10 இலட்சம்ரூபாய் பிடிக்குமென்று மதிப்பிடப் பட்டது. இந்தத் தொகை முழுவதும் கையொப்பங் களால் ஏற்கெனவே கிடைத்து விட்டதென்று சொல்ல லாம். ஒரு மகமதிய கனவான் மாத்திரம் 3-லட்சம் ரூபாய் அளித்தார்.

இந்தியா மாதர்கள் நல்வரவை ஏற்றுக்கொள்வ தற்காக நகரசபா மண்டபத்திற்கு இளவரசரும் இள வரசியாரும் வந்தார்கள்.

அப்பொழுது ஒவ்வொரு மாதும் தங்கள் சாதி ஆசாரப்படி இளவரசியாருக்கு வந்தனோபசாரம் செய்தார்கள். பின்பு இந்தி, மகாராஷ்டிரம், முதலிய பாஷைகளில் உபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது.

இளவரசியார் பின்வருமாறு மறுமொழி சொன்னார்:—

"உங்களது இனிய உபசாரங்களின் பொருட்டு நான் உங்களுக்கு மனப்பூர்வமாக நன்றிசெலுத்துகின்றேன். ஷை பத்திரிகை படிக்குமாறு உங்களைத்தூண்டிய கருத்தின்னதென்பதை நானறிவேன். எனக்கு ஆரம்பத்திலேயே இந்திய மாதர்களைப்பற்றி மிக மேலான எண்ணம் உண்டாகும்படி நீங்கள் செய்துவிட்டீர்கள். எனது யாத்திரையின் முக்கிய கருத்துக்களிலே இந்திய மாதர்களுடன் நல்லபழக்கம் செய்துகொள்ளவேண்டு மென்பதொன்று. உங்களுடன் பழக்கமதிகப்பட அதிகப்பட உங்களது புகழ்மிக்க நற்குணங்களில் என்மதிப்பு அதிகப்படுமென நம்புகிறேன். எனக்கு இப்போதேற் பட்டிருக்கும் நல்லெண்ணம் இன்னும் இந்தியா முழுதிலும் செய்யப்போகிற யாத்திரையிலே ஸ்திரப்பட்டு விடுமாயின் நான் எனது தேசம் சென்ற பிறதும் உங்களைப்பற்றி என்றும் இனிய ஞாபகங்களிருக்கும். அதன்பேரில் நமக்குள்ளேயிருக்கும் பரஸ்பர மதிப்பும், நல்லெண்ணமும் மிகுதிப்படும்."

பின்பு இளவரசியார் தமது இருப்பிடம் சென்றனர்.

இங்கு இவர்கள் ஐந்துதின மிருந்தார்கள். 14-ந்தேதி பம்பாயிலிருந்து சுதேச சமஸ்தானமாகிய இந்தூருக்கு 15-ந்தேதி வந்து 17-ந்தேதி வரையிலும் தங்கியிருந்தபின் 18-ந்தேதி புறப்பட்டு உதயபுரி என்கிற சுதேச சமஸ்தானத்திற்கு 19-ந்தேதி வந்து சேர்ந்தார்கள். இவ்விடம் நீங்கி 21-ந்தேதி ஜெயப்பூர் வந்து சேர்ந்தார்கள். இங்கு 23-ந்தேதி வரையிலுமிருந்து பின்பு நவம்பர் மாதம் 24-ந்தேதி ஒரு பெரிய வனாந்தரத்திற்கு மத்தியிலிருக்கும்படியான பிக்கனீர் வந்து சேர்ந்தார்கள். இங்கு நாலுநாள் தங்கியிருந்து பின் 28-ந்தேதி பஞ்சாப் நாட்டுக்கு முக்கிய பட்டணமாகிய லாஹோர் வந்து சேர்ந்தார்கள். இந்த நாடு பிரிடிஷ் ஆதீனத்திலிருக்கிறது. இங்குள்ள பிரபுக்களும், சிற்றரசர்களும் இளவரசர் இளவரசியாரவர்களுக்கு மரியாதைசெய்ய கூட்டம் கூட்டமாய் வந்திருந்தார்கள். இங்கு நாலுநாளிருந்தபின் டிசம்பர் மாதம் 1-ந்தேதி புறப்பட்டு தமது பரிவாரத்தோடு 2-ந்தேதி காலை பேஷாவரைச் சேர்ந்தார்கள். எதிரிகள் இந்தியாவின் மேல் படையெடுத்து வராதபடிக்கு பேஷாவர் காவல் செய்கின்றமையால் இதற்கு படைக்காவலர் பட்டணம் என்று சொல்லப்படுகிறது. இளவரசரும் இளவரசியாரும் இங்குள்ள குன்றுகளையும், காடுகளையும் கண்டு களித்தார்கள். அநேக சிற்றரசர்களைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இவர்கள் 4-ந்தேதி இங்குள்ள விசேஷங்களையும் கைபர்கணவாய் முதலியவைகளையும் பார்த்தபின் 5-ந்தேதி பிரயாணமாகி ராவல்பிண்டி என்னும் நகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இங்கு நாலாபக்கத்திலும்

அமைத்துள்ள இராணுவச்சேனைகளைக் கண்டு களித்த பின் 9உ சுதேச சமஸ்தானமாகிய ஜம்ரு என்கிறகோட்டையுள்ள பட்டணத்திற்கு வந்து இங்கு இரண்டு தினமிருந்தபின் 11உ அமிர்தசாரம் என்னும்நகருக்குத் தமது பரிவாரங்களோடு வந்திறங்கினார்கள். பின்பு 12உ மாட்சிமை தங்கிய இளவரசரவர்களும் இளவரசியாரவர்களும் தங்கள் பரிவாரங்களுடன் டில்லிமாநகரை யடைந்தார்கள். இங்கு 15உ வரையிலுமிருந்து 16-ந்தேதி இங்கிருந்து புறப்பட்டு ஆக்ராபட்டணம் வந்து சேர்ந்தார்கள். 19உ யன்று பெருமானும் பெருமாட்டியும் ஜெயத்துக்குக் காரணமானபட்டணம் என்று சொல்லப்பட்ட பாடிபூர் சிக்ரியைப் போய்ப் பார்த்து வந்தார்கள். பின்பு 20உயன்று இளவரசரும் இளவரசியும் ஆக்ராவைவிட்டு குவாலியருக்குப் போனார்கள். இங்கும் 25உ வரையிலிருந்து 26உ யன்று புறப்பட்டு லக்னோவுக்குப் போனார்கள். இங்கு 4 நாளிருந்த பின் 28உ மத்தியானமே புறப்பட்டார்கள்.

29-ம் தேதி யன்று இளவசரரும் இளவரசியாரும் கல்கத்தா வந்து சேர்ந்தார்கள். இளவரசரும் இளவரசியாரும் வந்திறங்கினவுடன் வெடிகள் தீர்க்கப்பட்டன. லப்டினண்டு கவர்னர், சீப் ஜட்ஜி, லார்ட்பிஷப், நகரபரிபாலன சபையின் தலைவரும், இன்னும் மற்றகனவான்களும் வந்திருந்து இளவரசருக்கும், இளவரசியாருக்கும் மிக்க களிப்புடன் நல்வரவு கூறினார்கள். இராஜ தம்பதிகளை விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்திற்கு அழைத்துச்

சென்றவுடன் நகர பரிபாலன சபையாரால் நல்வரவு பத்திரமொன்று வாசிக்கப்பட்டது. உடனே இளவரசியாருக்கு வைரக்கல்லுகளும் முத்துக்களுமிழைத்த அட்டிகை ஒன்றை பரிசுகொடுத்தார்கள். இளவரசியார் மிக மகிழ்ந்து அதைத் தமது கண்டத்தில் அணிந்துகொண்டார்கள்.

பின்பு இளவரசர் "அங்குள்ளவர்களைத் தாம் நேராகக் கண்டதினால் தமக்கு மிகுந்த மனக்களிப்பையுண்டாக்குகிறதென்றும் இளவரசியாருக்கு நகரபரிபாலனசபையார் அளித்த ஆபரணத்தை ஞாபகக்குறியாக வைத்துக்கொள்வதுடன் இளவரசியாரும் மிகச் சந்தோஷப் படுகிறாரென்றும்" பதிலளித்தார். பின்பு இராஜதம்பதிகள் இராஜமாளிகைக்குச் சென்றார்கள்.

30-ம் தேதியன்று காலை இளவரசர் தமதுசொந்த லங்காஸ்டர் சேனைக்குப் புது உடைகளைக்கொடுத்து சில பிரியமான வார்த்தைகளைச்சொன்னார்.

இளவரசியார் டப்ரின் பெருமாட்டியால் கட்டப்பட்ட கோஷா ஆஸ்பத்திரியைப்போய்ப் பார்த்து வந்தார்கள்; இன்று சாயங்காலம் இராஜதம்பதிகள் கல்கத்தாவில்நடந்த பந்தயங்களுக்குச் சென்றார்கள்.

ஜனவரி மீ 1-ம் தேதியன்று மத்தியானம் பெல்வடியா என்னுமிடத்தில் அநேக பெரிய மனிதர்களுடைய மனைவிமார்கள் ஒரு கூட்டம்கூடி நமது இளவரசியாரை வரவழைத்து மரியாதை செய்தார்கள். இளவரசியார் மிகச் சந்தோஷத்துடன் சுதேச மாதர்

களுடன் கலந்து பேசிய பின் தமது யிருப்பிடத்திற்குச் சென்றார்.

2-ம் தேதி கல்கத்தா மைதானத்தில் இராஜ தம்பதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பந்தலில் இத்தேசத்து வழக்கப் பழக்கங்களை அறிவிக்கும்படியான வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். இன்றுகாலையில் டாஷிலாமா வென்பவர் பரிவாரங்களுடனும் டாங்சாபென்லாப் என்பவரும், சிக்கிம் மகாராஜாவும் இளவரசரைச் சந்தித்தார்கள். ஜனவரிமீ ம் 3-ம் தேதி இளவரசரும் அவர் பத்தினியும் பெங்கால தேசத்து சீப் ஜட்ஜ் ஸர் பிரான்ஸிஸ் மேக்லீனுடன் விருந்துண்டார். மத்தியானம் கவர்ன்மெண்ட் அவுஸ் சிங்காரவனத்தில் அநேகருடன் சிற்றுண்டி உண்டார்கள். இரவில் கோட்டையில் கமாண்டரின் சீப்போடு விருந்துண்டார்கள். அவர்கள் கோட்டைக்குச் சென்ற வழியெல்லாம் விளக்குகளினாலும் மற்றும் பலவிதமான அலங்காரங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

4-ம் தேதி மாட்சிமைபொருந்திய காலஞ்சென்ற மகாராணியவர்களின் ஞாபகார்த்தமாய் ஒரு கட்டடம்கட்ட ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இராஜப் பிரதிநிதியும் பெருமாட்டியும், இளவரசரும் அவர் பத்தினியும், லெப்டினன்ட் கவர்னரும் மற்றும் பிரபுக்களும் சென்றார்கள். அப்போது லெப்டினன்ட் கவர்னர் சொன்ன வார்த்தைகளின்பேரில் இளவரசர் இந்த பெரும் முயற்சிக்காக சந்தோஷித்து இதை கைக்கூடச் செய்த லார்ட் கர்ஸனையும் புகழ்ந்து, இது முற்றுபெற

லார்ட் மின்டோவும் மற்றவர்களுமிருப்பார்களென்று சொல்லி அஸ்திபாரக் கல்லை வைத்தார்.

இன்று இளவரசர் வைத்திய கலாசாலையைப் பார்வையிட்டு தாம் தர்பங்கா மகாராஜாவினல் பெற்ற இலட்சம் ரூபாயில் தொண்ணூறாயிரம் ரூபாயை இதின் விருத்திக்கென்று கொடுத்து, மீதி பதினயிரம் ரூபாயை அதே நகரத்திலிருக்கும் லேடி டப்ரிரன் ஆஸ்பத்திரியின் செலவுக்கென்று கொடுத்தார்.

5-ம் தேதி இளவரசர் டாஷிலாமா, டாங்சா பென்லாப், சிக்கிம் மகாராஜா முதலானவர்களுக்கு பதில் பேட்டிகொடுத்தார்.

7-ம் தேதி காலையில் கவர்னர் ஜெனரலும், லெப்டினன்ட் கவர்னராகிய ஸர் ஆன்ரூ பிரேசர் என்பவரும் கல்விச் சங்கத்தின் முக்கிய மெம்பர்களும் இன்னும் அநேக வித்வான்களும் கல்கத்தா வித்தியாசாலையில் கூடியிருந்தார்கள். இவர்களுக்கு இடையில் லார்ட் மின்டோவுடன் இளவரசர் புறப்பட்டுவந்தார். அங்கேநடந்த காரியங்களெல்லாம் விமரிசையாய் நடத்தப்பட்டன. சான்ஸலருக்குப் பிரதிநிதியாயிருந்தவர் இளவரசருக்குச் சாஸ்திரத்திலும் சட்டங்களிலும் பண்டிதர் என்னும் எல். எல். டி. பட்டத்தைச் சூட்டினர். இதற்குப் பிறகு இளரவசர் அந்த வித்தியா சங்கத்தின் பெல்லோக்களோடு கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தார். அதற்குப் பிற்பாடு கவர்ன்மென்ட் மாளிகைக்கு விஜயஞ்செய்தார்.

அன்று மத்தியானம் தம்பதிகள் இருவரும் பாரக்பூருக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

மாட்சிமைதங்கிய இளவரசரவர்களும் இளவரசியவர்களும் தங்கள் பரிவாரங்களோடு பாரக்பூரை இம்மாதம் 11௳ விட்டுப் பர்மாவுக்குத் தங்கள் புகைக்கப்பல் மார்க்கமாகச் சிந்தாயாத்திரை செய்து பர்மாவைச் சேர்ந்தனர்கள். முனிசிபல் கமிஷனர்களும் பிரபுக்களும் அதிகாரிகளும் கூடியிருந்து மிக மேளைமரியாதையோடும் முகமலர்ச்சியோடும் அவர்கள் வரவை பேற்றுக்கொண்டு முனிசிபல் கமிஷனர்கள் இளவரசரவர்கட்கு வந்தனோபசாரப் பத்திரமொன்று வாசித்துக் கொடுத்தார்கள். இதற்குப்பின் பர்மாதேசத்துச் சீமான்களும், சீமாட்டிகளும் குமாரத்திகளும் சிங்காரித்துக்கொண்டு கூடியிருந்த கூட்டத்திற்கு இளவரசரவர்களும் இளவரசியவர்களும் வந்தார்கள். அப்போது அங்குள்ள சீமாட்டிகளில் சிலரிடத்தில் சில நிமிஷம் சம்பாஷித்து அவர்களால் முகமன் கூறப்பட்டு இளவரசரவர்கள் தமது பரிவாரத்தோடு தங்கட்கு நியமிக்கப்பட்ட விடுதிக்கு மெய்க்காவலர்கள் புடைசூழச் சென்றனர்கள்.

12-ந்தேதி சாயங்காலம் இளவரசர் இளவரசியாருடன் சென்று விக்டோரியா மெமோரியல் சிங்காரத்தோட்டத்தைத்திறந்தார். இச்சடங்குமுடிந்தபின் இளவரசரும் இளவரசியாரும் பர்மா மாதர்களால் வெகு நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலுக்குச் சென்றார்கள். இங்கு பெண்கள் ஒரு பக்கம் வரிசையாக உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். இளவரசரும் இள

வரசியாரும் வந்தவுடன் பாடினர்கள். அவர்களுக்குப் புஷ்பமாலைகளைச் சூட்டி நல்வரவும் கூறினர்கள். இராஜதம்பதிகள் மிகமகிழ்ந்து தமது பரிவாரங்களுடன் இராஜமாளிகைக்குச் சென்றார்கள்

மறுநாள் பௌத்த ஆலயங்களையும் பௌத்தர்களுடைய விக்கிரகங்களையும் கண்டுகளித்தார்கள். தோட்டக்கச்சேரியும் பாணவேடிக்கைகளும் வெகு விமரிசையாக நடத்தப்பட்டன. இவைகளையெல்லாம் கண்ணாரப் பார்த்து மிகச் சந்தோஷப்பட்டார்கள். இராஜ தம்பதிகள் மண்டலே முதலிய விடங்களைப் பார்வையிட்டபின் சென்னைக்குப்புறப்பட்டார்கள்.

ஜனவரிமாதம் 24-ந்தேதி சாயங்காலம் சுமார் 4-மணிக்கு நமது மாட்சிமைதங்கிய இளவரசரும் இளவரசியாரும் சென்னைத் துறைமுகத்தில் வந்திறங்குவார்களென்ற சங்கதியை யறிந்த ஜனங்கள் வெகு பிரியத்துடன் நல்ல வஸ்திரங்களையணிந்து திரள் திரளாய் பீச் ரோட்டிலும் அதற்கடுத்த தெருக்களிலு மிருந்தார்கள்.

பாடசாலைப் பிள்ளைகள் கோட்டைக்கு மேற்கிலிருந்து சுமார் மவுண்ட்ரோட் வாராவதி வரையிலும் அமைக்கப்பட்ட காலரியில் தங்கள் உபாத்தியாயர்களுடன் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். இங்கு பெண்களும் அழகான உடைகளைத் தரித்துக்கொண்டும், நகைகளை அணிந்துகொண்டும் வந்திருந்தார்கள். இவர்கள் வாழ்த்துப் பாடல்களைப் பாடிக்கொண்டு மிருந்தார்கள். பிள்ளைகள் கொடிகளை பிடித்துக்கொண்டு

இளவரசரையும் இளவரசியாரையும் பார்க்க மிக ஆவ லுடனிருந்தார்கள். மவுண்ட்ரோட்டிலுள்ள ஷாப்பு கள் வெகு அலங்காரமாகத் தென்பட்டன. ஐகோர் ட்டிலும், கிரிஸ்டியன் காலேஜியிலும் பற்பல வர்ண முள்ள கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

துறைமுகத்தில் ஒரு அழகான பந்தல் போடப் பட்டிருந்தது. இவ்வித அழகுபொருந்திய விடத்திற்கு 2-மணி முதல் சென்னையிலுள்ள சீமான்களும், சீமாட் டிகளும் வந்துகொண்டிருந்தனர். இராஜாக்கள், ஜமீந் தார்கள், கவர்ன்மெண்ட் அதிகாரிகள்முதலிய பிரபுக் கள்வந்து சேர்ந்துவிட்டார்கள். சில இந்துராஜாக் களும் ஜமீந்தார்களும், புராதனமான சரிகை வேலைப் பாடுள்ளவும், விநோதமானவுமான உடுப்புகளை அணிந் துகொண்டு வந்திருந்தார்கள். இவர்கள் பார்ப்பதற்கு மிகச்சிறப்புடனே விளங்கினார்கள். ஐரோபிய மாதர் களும் உயர்ந்த ஆடைகளைத் தரித்துக்கொண்டு வந் திருந்தார்கள். பந்தலின் மத்தியில் உயரமான ஒரு பீடம் அமைக்கப்பட்டிருந்தது. இதன் மீது இரண்டு அழகுபொருந்திய நாற்காலிகளுமிருந்தன.

சுமார் மூன்றேமுக்கால் மணிக்கு கவர்னராகிய லார்ட் ஆம்ப்திலும் லேடி ஆம்ப்திலும் வந்து சேர்ந் தார்கள். இங்குள்ள ஜனங்கள் உடனே எழுந்து மரி யாதைசெய்தார்கள். கவர்னரவர்கள் கொச்சிராஜா வுடனும் ஜஸ்டிஸ் ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யரு டனும் இன்னும் மற்றவர்களுடனும் சிலநேரம் பேசிய பின்பு இளவரசருக்கும், இளவரசியாருக்கும் நல்வரவு

கூறும்பொருட்டு தோணியேறிச்சென்று இராஜதம்ப திகளை அழைத்துக்கொண்டு பந்தலுக்கு வந்தார்.

இராஜ தம்பதிகளிருவரும் ஹார்பரில் வந்தவுடன் 31 குண்டுகள் போடப்பட்டன. இக்குண்டுகளின் சப்தத்தைக்கேட்டு ஜனங்கள் நமது இளவரசரும் இளவரசியாரும் சென்னைக்கு வந்துவிட்டார்கள் என்று எண்ணி அவர்களைப் பார்க்க கண்கொட்டாமல் விழித்துக்கொண்டிருந்தார்கள். இளவரசரும் இளவரசியாரும்தரைக்கு வந்தார்கள். மறுபடியும் 31-குண்டுகள் போடப்பட்டன. இளவரசர் வெள்ளை உடுப்பு தரித்துக்கொண்டிருந்தார்; இளவரசியார் உயர்ந்த ஆடைகளைத் தரித்துக்கொண்டிருந்தார். இவர்கள் மிக முகமலர்ச்சியுடன் தங்கள் பிரஜைகளைப் பார்க்க ஆவலுடையவர்கள்போல் தென்பட்டார்கள். அவர்கள் கரைக்குவந்தவுடன் பாண்டு வாத்தியம் வாசிக்கப்பட்டது. ராஜரீகத்துவஜம் நிறுத்தப்பட்டது. இவர்களுக்கு அங்கிருந்த யாவரும் மிகக்களிப்புடன் நல்வரவு கூறினார்கள். பின்பு இராஜதம்பதிகள் பந்தலின் மத்தியில் அமைத்திருந்த நாற்காலிகளில் வந்து உட்கார்ந்தார்கள். இவர்களுக்கெதிரில் சென்னை நகர்பரிபாலன கர்த்தர்கள் பின்வருமாறு நல்வரவுப் பத்திரிகை படித்தார்கள்.

“மாட்சிமை தங்கிய ராஜ தம்பதிகளே!

சென்னை நகரத்தின் பொருட்டாகவும் கீழே கையெழுத்திட்ட முனிசிபல் கமிஷனர்களாகிய நாங்கள் உங்களிருவருக்கும் மனப்பூர்வமாகவும் மிக்கவிசுவாச



சென்னை முனிசிபல் சங்கத்தார் கொடுத்த பெட்டி.

த்துடனும் நல்வரவு அளிக்கின்றோம். 4 வருஷங்களு க்கு முன்பாக நீங்களிருவரும் பிரிடிஷ் இராச்சியத் தின் பல முக்கியமான இடங்களைப் பார்வையிட்டு வந்தகாலத்தில் இந்தியாவை மட்டிலும் நீக்கி வைத்த படியால் எங்களுக்கு வருத்தமுண்டாயிற்று. ஆனால் பின்னிட்டு இந்தியாவிற்கும் அவ்விதப் பேறு கிடைக் கலாமென்ற நம்பிக்கையின்பேரில் நாங்கள் ஆறுத லடைந்திருந்தோம். இன்றையதினம் எங்கள் நல்லதி ர்ஷ்டத்தால் அந்த நம்பிக்கை நிறைவேறிவிட்டது. மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியார் இத்தேசத்தின் மீது கொண்டிருக்கும் நல்லெண்ணத்திற்கு நீங்கள் வந்திரு ப்பதும் ஓர் நிதரிசனமானதைப்பற்றி ஆனந்தமடைகி றோம். பிரிடிஷ்சிங்காதனத்தில் எங்களுக்குள்ள பக் தியையும், ராஜகுடும்பத்தாரிடம் எங்களுக்குள்ள அன் பையும் எந்நாளும் மறத்தற்கரிய மகாராணியாரால் தொடங்கப் பெற்று எங்கள் சக்ரவர்த்தியாரால் செலு த்திவரப்படுகின்ற தரும ராஜாங்கத்தில் எங்களுக்கு ள்ள நன்றியறிவையும் தாம் சக்ரவர்த்தியிடம் தெரி விக்கும்படியாகவும், தாமும் ஏற்றுக்கொள்ளும்படியா கவும் கேட்டுக்கொள்ளுகிறோம்."

மிகவேலைப்பாடுள்ள அழகான வெள்ளிப் பெட்டி யில் பத்திரிகையை வைத்து இளவரசரிடம் கொடுக்க வே, அவர் சந்தோஷத்துடன் அப்பெட்டியைப் பெ ற்றுக்கொண்டு பின்வருமாறு பதிலுரைத்தார் :—

"இளவரசியாருக்கும் எனக்கும் நல்வரவு கூறி யதற்காக மிகவும் வந்தனமளிக்கின்றேன். பிரிடிஷ் இந்தியாவில் வெகு வருஷங்களுக்குமுன் எங்களுக்குக்

கிடைத்த இந்த நகருக்கு எப்பொழுது வருவோம் என்று எண்ணிக்கொண்டிருந்தோம். சென்னை வாசிகளும் நீங்களும் எங்கள் வரவுக்காக இவ்வளவு விமரிசையான ஏற்பாடுகள் செய்ததைப்பற்றி மிக மகிழ்கின்றோம். உங்களையும் இத்தேசத்து ஜனங்களையும், எனது நண்பராகிய லார்ட் ஆம்ப்தில்லையும் பார்க்க நேர்ந்ததைப்பற்றியும் சந்தோஷப்படுகிறோம். உங்கள் இராஜ பூர்ண விசுவாசத்தை நமது சக்ரவர்த்தியாருக்கு அவசியம் தெரிவிக்கிறேன். எனது பிரியமுள்ள தகப்பனார் சென்னைக்கு வந்து 30 வருஷங்களாயினும் அவர் உங்களையும், நீங்கள் அவருக்குச் செய்த மரியாதையையும் மறக்கவில்லை. கனவான்களே! நீங்கள் எங்களது நல்வரவைக் கோரியதற்காக மறுபடியும் வந்தனம் அளிக்கின்றோம்."

பிறகு இளவரசரும் இளவரசியாரும் வெளியில் வந்தார்கள். உடனே ஊர்கோலம் புறப்படத் தொடங்கிற்று. ஊர்கோல வரிசையோ மிக அழகாகவிருந்தது. குதிரைப்படைகளும், 30-வது லான்ஸர்பட்டாளமும், சகந்திரபாத் பட்டாளவரிசைகளும் தலைவரும், சென்னை வாலண்டியர்பட்டாளமும், சென்னை கவர்னரின் காவல்துருப்புகள் முதலில் வரிசைக்கிரமமாகச் சென்றார்கள். 4 குதிரை பூட்டிய அழகான ராஜாங்கரதத்தில் நமது இளவரசரும், இளவரசியாரும் வந்தார்கள். ராஜ பிருதுகளுமிருந்தன. அழகான சூத்திர சூஷாமரங்களு மிருந்தன. ஊர்கோலம் வரும்பொழுது வழிகளிலெல்லாம் தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. மேலும் தசாவதாரங்களை

டங்கிய சித்திரப்படங்களுள்ள நல்வரவு கூறும் வளைவு கள் பற்பலவிடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. ஊர் கோலவரிசையிலோ எல்லா சுதேச இராஜாக்களும் ஜமீன்தாரிகளும் ஆங்கில சுதேச உத்தியோகஸ்தர்க ளும், மாதர்களும் வரிசைக் கிரமமாகவந்ததும் ரமிய மாகவேயிருந்தது. கோட்டை வாராவதியைத்தாண் டியவுடன் பாடசாலைப் பிள்ளைகளும் மிக ஆரவாரத்து டன் நமது இளவரசரையும் இளவரசியாரையும் கண்டு களிப்புடன் கரகோஷம் செய்ததுடன் “இளவரசரும் இளவரசியாரும் வாழி வாழி” என்று சொன்னார்கள். மெதுவாக இவ்விடத்தில் ஊர்கோலம் சென்றது. பிள்ளைகள் நன்றாக ஊர்கோலம் முழுவதையும் கண்டு களித்தார்கள். இங்குபிள்ளைகளுக்கு கமலா, வாழை ப்பழம், சிற்றுண்டி கொடுக்கப்பட்டன.

மேலும் ஒவ்வொரு பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஈயத்தால் செய்யப்பட்ட ஒரு பதக்கமும் அளிக்கப் பட்டது. இதில் நமது மகாராஜா மகாராணியார் இவர்களின் உருவமிருந்தது. ஊர்கோல வேடிக்கை களைப் பிள்ளைகள் கண்கொட்டாமல் பார்த்துக்கொண் டே யிருந்தார்கள். பின்பு இளவரசரும் இளவரசி யாரும் பரிவாரங்களுடன் கவர்ன்மெண்டு மாளிகைக் குச் சென்றார்கள்.

பின்திரவு கவர்ன்மெண்ட் மாளிகையில் ராஜாங்க விருந்து நடந்தது. இங்கு சென்னையிலுள்ள பிரபுக் களெல்லாம் வந்திருந்தார்கள். விருந்து நடந்தவுடன்

* லெவி கச்சேரியும் நடந்தது. அச்சமயத்தில் வேல்ஸ் இளவரசருக்கு பலர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். வந்திருந்த பிரபுக்கள் நமது இளவரசரைக்கண்டு தலைவணங்கி மரியாதைசெய்தார்கள். இளவரசர் அவர்களுக்கு பதில் மரியாதை செய்தார். இவ்விதம் மரியாதை செலுத்தும் காட்சி ஒன்றரை மணி நேரம் நடந்தது. இம்மகோற்சவத்தைக் கொண்டாடும் பொருட்டு இன்று இந்நகர் முழுவதுமுள்ள ஏழைகட்கு அன்னமளிக்கப்பட்டது.

25உ வியாழக்கிழமை காலையில் இளவரசியார் திருவல்லிக்கேணியிலுள்ள விக்டோரியாகோஷா ஆசுபத்திரியைப் போய்ப் பார்த்தார்கள்.

இன்றிரவு ஐலண்ட் (தீவு) மைதானத்தில் சென்னைவாசிகள் இளவரசருக்கும் இளவரசியாருக்கும் நல்வரவுகூறி உபசரணை செய்தார்கள். அச்சமயத்தில் பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாம் திரளாய் வந்திருந்தார்கள். சுமார் 9½-மணிக்கு உபசரணைக் கமிட்டிக்குச் சபைத்தலைவராகிய கனம் ஜட்ஜி, ஸர் சுப்பிரமணிய ஐயரால் இளவரசருக்கும் இளவரசியாருக்கும் நல்வரவுப் பத்திரம் வாசித்து பெட்டியில் வைத்துக் கொடுக்கப்பட்டது. இளவரசர் பின்வருமாறு பதில் சொன்னார்.

"கனவான்களே! சென்னை மாகாணத்திற்கும், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை என்ற இராஜ

* லெவி என்றால் இராஜாமுதலிய பெரியோரைத் தரிசிக்குங் கூட்டம்.



ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு சென்னை இராஜதானிப் பொது ஜனங்கள் அளித்த பெட்டி.

ஜியங்களுக்கும் பிரதிநிதிகளான உங்களை இங்கே பார்க்கலாமென்று உங்களுடைய கவர்னராகிய லார்டு ஆம்ப்ட்ஹில் சொல்லினதைக்கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். இப்போது நீங்கள் வாசித்த ஆதரவுகொண்ட உபசரணைப்பத்திரிகை சம்பந்தமாக வேல்ஸ் இளவரசியின் பொருட்டாகவும், என்பொருட்டாகவும், உங்களுக்கு மனப்பூர்வமான நன்றி அறிவிக்கின்றேன். பிரிடிஷ் குடிகளின் நன்மையைப் பற்றிய எல்லா விஷயங்களிலும் நாங்களிருவரும் மிகுந்த சிரத்தையெடுத்து வருவதாக நீங்கள் கூறியது மெய்யே. பிரிடிஷ் ராச்சியத்தின் தூரமான இந்த ஸ்தலங்களையெல்லாம் பார்வையிடுவதன் பெருமையை நாங்கள் முற்றிலும் அறிந்தவர்களாக இருக்கின்றோம். தென் இந்தியா எங்களுக்கு நல்வரவு கூறியதன் பொருட்டு மிக நன்றி கொண்டிருக்கிறோம். இம்பாகாணத்தில் புகழ்பெற்ற நகரங்களிலே மற்றவற்றைப் பார்வையிடாமலும், இந்திய சமஸ்தானங்களில் சென்று தாமதியாமலும் நாங்கள் போக நேர்ந்தது பற்றி விசனமடைகின்றோம். திருச்சினுபள்ளி, தஞ்சாவூர், மதுரை என்ற இடங்களைப்பற்றியும், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களின் அழகுகளைப்பற்றியும் நாங்கள் படித்திருந்த போதிலும் அவைகளைக் கண்டு களிக்க முடியவில்லை. இந்தியாவில் அனேக நாள் இருக்க சாவகாசமில்லாதபடியால், உங்களையெல்லாம் இன்று மாலை பார்த்துக்கொண்டதன் பொருட்டு நாங்கள் மகிழ்ச்சியுறுகின்றோம். இப்பெருந்தேசத்தின் விஷயத்திலும், இதன் ஜனங்களின் விஷயத்திலும் நாங்கள்மிகுந்த அன்பும் ஆதரவும் கொண்டிருப்பதாக நீங்கள் தெரிவித்தது சிறிதேனும்

உபசார வசனமில்லை; மெய்தானென்று நாங்கள் உறுதிகூறுவதை உங்கள் ஊர்களிலுள்ள மித்திரர்களிடம் அறிவிப்பீர்களாயின் மிகுந்த நன்றிக்கிடமாவீர்கள்"

26உ வெள்ளிக்கிழமை காலை 11-மணிக்கு இளவரசரும் இளவரசியாரும் நமது கவர்னருடனும் அவர் மனைவியாருடனும் மியூசியத்திற்குச் சென்று அங்குள்ளவைகளையும் செவ்வனே பார்த்தார்கள். பின்னர் கானிமாரா புஸ்தகசாலைக்குச்சென்று அங்குள்ள புஸ்தகங்களையும் கண்டு மகிழ்ந்தபின் தங்களது மாளிகைக்குச் சென்றார்கள். பிற்பகல் 1-30 மணிக்கு சக்கிரவர்த்தி குமாரர் தமது பரிவாரங்களுடன் கொச்சி ராஜாவைப் பார்க்கச் சென்றார். கொச்சி ராஜா இளவரசருக்கும் மற்றவர்களுக்கும் நல்வரவுகூறி மாலையிட்டு மரியாதை செய்தார். இளவரசர் ராஜாவுடன் விடைபெற்றுக்கொண்டு தமது பரிவாரங்களுடன் மாளிகைக்கு வந்தனர்.

பின்பு இளவரசர் ஜஸ்டிஸ் ஸர். சுப்பிரமணிய ஐயருக்குப், ஸர். வி. பாஷியம் ஐயங்காருக்கும், பங்கனப்பள்ளி நவாப்புக்குப், சாண்டூர் ராஜாவுக்கும், ஆற்காட் பிரின்சுக்கும், பொப்பிலி மகாராஜாவுக்கும், ராஜா ஸர். சவலை ராமசுவாமி முதலியாருக்கும் பேட்டி கொடுத்தார். சாயங்காலம் 5-மணிக்கு பாந்தியன் ரோட்டில் மாரல்பரோ ஹவுஸ் என்று வழங்கிவருமிடத்திற்கு இளவரசரும் இளவரசியாரும் தங்களது பரிவாரங்களுடன் விக்டோரியா ஞாபகச்சின்ன மாளிகையின் அஸ்திவாரக்கல்லை வைப்பதற்காகச் சென்றார்கள். இங்கு வரும்பொழுது வழியில் ஜனங்கள் கூட்

டமாகவே யிருந்தார்கள். இங்கு வந்தவுடன் சங்கத் தலைவர் வேல்ஸ் இளவரசரைப் பார்த்து "தாங்கள் தயைசெய்து விக்டோரியா மெமோரியல் கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்ட வேண்டும்" எனக்கேட்க, இளவரசரும் அவ்விதஞ் செய்வதற்குமுன் பின் வருமாறு சிறிய உபந்நியாசம் செய்தார் :—

"இதற்கு அஸ்திவாரம் நாட்டுவதில் சம்பந்தப்படுவது இளவரசிக்கும் எனக்கும் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்குகிறது. ஏனெனில், இனிமேல் இது சென்னை வாசியாருக்கு காலஞ்சென்றுவிட்ட விக்டோரியா மகாராணியாரிடமுள்ள பற்றுக்கு சிறந்ததோர் அறிகுறியா யிருக்கப்போகிறது. நீங்கள் விக்டோரியா மகாராணியாரை ஞாபகப்படுத்தி வெகு உருக்கமாய்ப் பேசுவது எங்களுக்கு மன உருக்கத்தை உண்டாக்குகிறது.

இப்போது இம்மாகாணத்திலுள்ள சித்திர வேலைக்காரர்கள், சாதாரணத் தொழிலாளிகள் இவர்களுடைய புத்தி நுட்பத்தையும், தற்கால நிலைமையையும் விருத்தியாக்க வேண்டுமென்பது, விக்டோரியா ஞாபகச்சின்னத் தொழிற்சங்கத்தாரின் நோக்கமாய் இருக்கிறதல்லவா ?

அந்தநோக்கம் விக்டோரியா மகாராணியின் மனதுக்கு இசைந்ததா யிருந்திருக்குமென்று நான் நம்பிக்கையாய்ச் சொல்ல மாட்டுவேன் : ஏனெனில், அந்தப்பெருமாட்டி எப்போதும் இந்திய ஜனங்கள் மேன்மேலும் க்ஷேமத்தையடைய வேண்டுமென்ற நோக்கத்

தோடுசெய்யப்பட்ட முயற்சிகளை கவனிப்பதும் அவைகளில் அக்கரை காட்டுவதும் உண்டு. இந்த உத்தமமான முயற்சி என்னுடைய அனுதாப உணர்ச்சியையும் இளவரசியரது அனுதாப உணர்ச்சியையும் பெற்றிருப்பதுபோல எனது தந்தையார் எட்வர்ட் சக்கிரவர்த்தியின் அங்கீகாரத்தைப் பெறுமென்று நீங்கள் உறுதியாய் நம்பியிருக்கலாம்.

1887-ம் வருஷத்தில் மகாராணியின் ஜூபிலியின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட முயற்சியொன்று அப்பெருமாட்டியின் புகழ்படைத்து நீண்டதோர் ஆட்சிக்கு ஞாபகச்சின்னமாய் ஓர் கட்டடம் கட்டப்படுவதில் முடிவைக் கண்டிருப்பதாகத் தெரியவருவது யாருக்கும் இன்பம் தரத்தக்கதேயாகும்.

உங்களுடைய கவர்னர் லார்ட் ஆம்ப்தில் உங்களுக்கு இவ்விஷய சம்பந்தமாய் தாராளமாய் உதவிசெய்திருப்பது மன்றி உங்களோடு ஒத்துழைத் திருக்கிறாரென்று நீங்கள் இப்போது வாசித்துக்கொடுத்த உங்களுடைய வந்தனோப சாரப்பத்திரத்தால் தெரியவர நான் சந்தோஷப்படுகிறேன்.

இந்தக் கட்டிடத்துக்கு வேண்டிய நிலமும் கட்டிடம் கட்டுவதற்கு வேண்டி யிருக்கக்கூடிய நிதிக்கு விசேஷ பொருளுதவியும் உங்களுக்கு சென்னைக் கவர்ன்மெண்டாரிடம் கிடைத்ததென்று தெரிந்து நான் திருப்தியடைகிறேன். இத்தொழிற் சங்கத்தின் நிருவாகசபையில் சங்கம் தோன்றிய நாள்முதல் பிரயோசனத்தை எதிர்பாராமல் கௌரவத்துக்காகச் சில

கனவான்கள் வேலைசெய்யும் படியான பெருமையை நீங்கள் பெற்றதற்கு நான் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன்.

இந்த விக்டோரியா ஞாபகச்சின்னத் தொழிற்சாலை சகலவிதங்களிலும் அதனை ஸ்தாபிப்பதற்கு மூலகாரணஸ்தர்களா யிருந்தவர்களது உத்தேசம் நிறைவேறும்படியான நிலையையடையுமென்றும், அப்படிப்பட்ட நிலையை யடைந்து இம்மாகாண ஜனங்களின் க்ஷேமத்துக்கும் விருத்திக்கும் இனிமேல் ஏதுவாயிருக்குமென்றும் இளவரசியும் நானும் நம்புகிறோம்" என்று மெச்சி அஸ்திவாரக்கல்லை மிகப் பிரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வைத்தார்.

நமது கவர்னரவர்கள் இளவரசருக்கும், இளவரசியாருக்கும் வந்தனம் கூறிய பின்பு யாவர்களும் கரகோஷம் செய்தார்கள்.

இளவரசரும் இளவரசியாரும் தங்களது பரிவாரங்களுடன் மதராஸ் கிளப்பு, பைகிராப்ட்ஸ்ரோட் முதலியவைகளின் வழியாய் சமுத்திரக்கரை சென்று சேப்பாக்கம் வழியாய் அரமனைக்குச் சென்றனர்கள்.

27-உ சனிக்கிழமை பிற்பகலில் இளவரசரும் இளவரசியாரும் கவர்னருடனும் பரிவாரங்களுடனும் சரித்திரசம்பந்தமான பழையகாலத்து கோட்டையைப்பார்த்தார்கள். இங்குள்ள சேண்ட்மேரி ஆலயத்தையும் பார்த்தபின் காரன்வால் பிரதிமைவழியாக கவர்ன்மெண்டு கௌன்சில் மண்டபத்திற்கு வந்தார்க

இங்கு கால்மணிநேரம் தங்கியிருந்து பின்னர் தங்களது இருப்பிடத்திற்குச் சென்றார்கள். மாளிகையில் ம-ா-ா-ஸ்ரீ V. C. தேசிகாசாரியாரவர்களுக்கும் மிஸ்டர் H. C. கிங் அவர்களுக்கும் ஐகோர்ட் ஜட்ஜ் கனம் பென்ஸன் அவர்களுக்கும் ஸர் பட்டம் அளிக்கப்பட்டது.

கோஷா ஸ்திரீகள் சிலர் பாங்வெட்டிங் ஹாலில் வந்து கூடினார்கள். அவர்கள் எல்லோரும் லேடி ஆம்திலால் வேல்ஸிளவரசியாருக்குக் குறிப்பிடப்பட்டபோது சலாம் செய்தது சந்தோஷத்துக் கிடமாகி யாவருக்கும் பூமாலைகள் போடப்பட்டன. மிஸஸ்பர்த், மிஸஸ் சுப்பிரமணியம், மிஸஸ் சத்தியநாதம், எம். ஏ, மிஸஸ்ஹென்ஸ்மன் முதலியவர்கள்மற்ற மாதர்களுக்காகப் பேசினார்கள்.

இவர்கள் மிகச் சந்தோஷத்துடன் இளவரசியாரைக்கண்டு மகிழ்ந்து வார்த்தையாடி குதூஹலித்துச் சென்றார்கள்.

கவர்ண்மெண்ட் மாளிகையின் தோட்டத்தில் தோட்டக்கச்சேரி நடந்தது. அச்சமயத்தில் இளவரசரும் இளவரசியாரும் 5-மணிக்கு வந்தார்கள். கோஷாஸ்திரீகளும், ஐரோப்பிய கனவான்களும், மாதர்களும், ராஜாக்களு ,ஜமீன்தார்களும் வந்திருந்தார்கள். அநேகர் இளவரசருக்கும் இளவரசியாருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள்.

இரவு 9-மணிக்கு ஹார்பரில் ராஜக்கப்பல் பாணவேடிக்கை மிக அதிசயமாயிருந்தது. 28-உ ஞாயிற

றுக்கிழமை இளவரசரும் இளவரசியாரும், கவர்னரும் மற்ற பரிவாரங்களுடன் கோட்டையிலுள்ள ஸேண்ட் மேரி கோயிலுக்குச்சென்றார்கள். ஆலயத்தில் ஆனரெபில் ஆர்ச்டீக்கனும் இன்னும் இங்கிலீஷ் ஆலயங்களைச் சேர்ந்த எல்லாபாஸ்டர்களும் வந்திருந்தார்கள். இங்கு கடவுள் தியானம் செய்தபின் மாளிகைக்குச் சென்றார்கள்.

இளவரசர், இளவரசியார் இவர்களுடையவும், நமது கவர்னர், அவர்மனைவியார், அவர்கள் குழந்தைகளுடையவும் உருவப்படங்கள் அநேகம் எடுக்கப்பட்டன. இன்று சாயங்காலம் $4\frac{1}{2}$ மணிக்கு இளவரசரும் இளவரசியாரும் கவர்னருடனும் அவர் மனைவியாருடனும் மற்றப் பரிவாரங்களுடனும் கிண்டியிலிருக்கும்படியான கவர்ன்மெண்ட் மாளிகைக்குச் சென்று தேத்தண்ணீர் அருந்தினார்கள். மவுண்ட்ரோட்டில் அச்சமயத்தில் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள்.

வேல்ஸ் இளவரசர் புறப்படுமுன்னதாகச் சென்னைக் கவர்னருக்குப் பின்வருமாறு ஒரு கடிதமனுப்பினார்.

இன்று இரவு $9\frac{1}{2}$ மணிக்கு ரயிலில் ராஜதம்பதியர்கள் பெங்களூருக்குப் புறப்பட்டபோது லார்டு லேடி ஆம்ப்தில் இருவரும் வந்தனோபசாரங்கூறி யனுப்பினார்கள். அப்போது ஸெண்டிரல் ஸ்டேஷனில் வெகு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஸ்டேஷனுக்கு வெளியே வெகு ஜனங்கள் வேடிக்கைப் பார்க்க வந்திருந்தார்கள்.

"எனது அன்புள்ள லார்டு ஆம்ப்ட்ஹிலுக்கு,

சென்னைக்கு வந்திருந்ததில் வேல்ஸ் இளவரசியும் நானும் மிகவும் திருப்தியடைந்தோம்.

நாங்கள் இங்கே வந்ததினத்தன்றும், அதற்கப்பால் நாங்கள் ஜனங்களினிடையே காணப்பட்ட சமயங்களிலும், ஜனங்கள் எங்களுக்கு ஆசையுடன் நல்வரவு கூறியதைபற்றி மிகவும் நன்றி பாராட்டுகிறோமெனபதை தாம்ஜனங்களிடம் அறிவிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

எங்களை வரவேற்றல், உபசரித்தல், என்ற விஷயங்களின் பொருட்டுச் சென்னைவாசிகள் மிகவும் ஆலோசனையுடனும் சிரத்தையுடனும் ஏற்பாடுகள் செய்துவைத்திருந்ததும் எங்களுக்கு மகிழ்ச்சி யுண்டாக்கியது என்பதையும் தாம் அவர்களுக்குக் கூறவேண்டும்.

தெனளுந்தியாவில் இந்திய ஜனத்தலைவர்களை நான் கண்டுபேசும்படியான சௌகரியம் எனக்கு ஏற்படுத்தியதன் பொருட்டுத் தமக்கும் நன்றிசெலுத்துகிறேன். நாங்கள் சென்னையையும் அதன் ஜனங்களையும் பற்றிச்சிறந்த ஞாபகம் வைத்திருப்போம்."

பங்களூருக்குவரவே, மகாராணி காலேஜியைச் சேர்ந்தசிலசீமாட்டிகளும் பிரமுகர்களும் இளவரசரையும் இளவரசியாரையும் கண்டு ஒருபத்திரம் வாசித்தார்கள். "நாங்கள் இக்காலேஜ் நன்றாக நடத்தப்பட்டு வருகிறதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படு

கிறோம். இதைவந்து பார்க்க எங்களுக்கு அவகாச மில்லாததைப்பற்றி மிகவிசனப்படுகிறோம். உங்களது விடாமுயற்சி இந்தபரோபகாரமான காரியத்தில் நிறை வேறுமென்று கோருகிறோம்" என்று பதிளளித்து, மைசூருக்குச் சென்றார்கள். இந்த சிவசமுத்திரம் காவேரிநீர்வீழ்ச்சி முதலியவைகளைப் பார்த்த பின் ஐதராபாத் காசியையும் பார்த்து விட்டு இங்கிலாந்து க்குப் புறப்பட்டார்கள்.

அநேகமாதகாலம் இந்தியாவில் சுற்றுப் பிரயா ணம் டரின்ஸ் ஆப் வேல்ஸும் ப்ரின்ஸஸ் ஆப் வேல் ஸும், செய்தபின் இங்கிலாந்திலுள்ள போர்ட்ஸ் மத் துக்கு மேமீ 7வ வந்துசேர்ந்தார்கள். அஸ்தமிக்கும் முன் 8 யுத்த கப்பல்கள் ஒரே வரிசையாக ஸ்பிட்ஹெ ட்டுக்குப் போய் இவர்களுக்கு நல்வரவு மரியாதைக் காக பீரங்கி வெடிகள் தீர்ந்தன, இவர்களுடைய நான்கு குழந்தைகளும் இவர்களைச் சந்திக்கப்படகில் சென்று தங்கள் தாய் தந்தையர்களைக்கண்டு களித் தார்கள்.

லண்டன் தெருக்களின் வழியிலுள்ள வீடுகளில் தோரணங்களொன்றும் கட்டப்படா விடினும் கொடி, புஷ்பங்கள் முதலியவைகள் ஒவ்வொரு வீட்டிலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. எல்லா ஜாதியாரும் இவ ர்கள் வரவைக்கண்டு களிக்க வந்திருந்தார்கள். ரயில் ஸ்டேஷனில் இவர்களுடைய சிநேகிதர்களும் உத்தி யோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். அவர்களில் மிஸ் டர் ஜான் மோர்லி (Mr. John Morley), (Lord Roberts) லார்ட் ராபர்ட்ஸ் முதலியகனவான்கள்.

ராஜ குடும்பத்தாரும், எட்வர்ட் சக்ரவர்த்தியும் தங்கள் புத்திரனைப் பார்க்க ஆவலுடன் வந்தார்கள். எட்வர் சக்ரவர்த்தி யாதொரு ஆடம்பர மின்றி வந்தார். பக்கிங்ஹாம் அரமனையிலிருந்து எல்லா பந்துக்களும் வந்து தங்கள் சந்தோஷத்தை இவர்களுக்குத் தெரிவித்தார்கள். ரயில்வண்டி வந்ததும் எட்வர்ட் தம்குழந்தைகளைக்கான வண்டியின் சமீபத்திற்கு வந்ததும் மரியாதை குண்டுகள் போடப்பட்டன. வண்டியிலிருந்து கிழே ஜார்ஜ் இளவரசர் இறங்கி மிஸ்டர் ஜான் மோர்லி, லார்ட் ராபர்ட்ஸ் இவர்களுடன் சிறிதுநேரம் பேசிவிட்டு தங்கள் அரமனைக்குப்பரிவாரங்களுடன் சென்றார்கள். கூட்டம் கூடியிருந்த ஜனங்கள் இவர்களைப் பார்க்கவேண்டு மென்றே வந்திருந்தார்கள். இவர்கள் வரவைக்கண்டு கரகோஷம் செய்தார்கள். தெருக்களிலும் இவ்விதமே ஜனங்கள் செய்து வந்தார்களாம்.

இவர்கள் கடைசியாக அரமனைக்கு வந்து தங்கள் தாய்தந்தை முதலியவர்களுடன் தங்கள் செய்த பிரயாணத்தைப்பற்றி விவரித்துச் சொன்னார்கள்.

---

## கில்ட் ஹாலில் இளவரசர் பேச்சு.

### 9- வது அதிகாரம்.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியார் போய்ச் சேர்ந்தவுடன் கில்ட் ஹாலில் இவருக்கு நல்வரவு கூறும் பொருட்டு ஒரு விருந்து நடந்தது. அப்பொழுது பின்வருமாறு பேசினார்: —

" பிரபுக்களே, சீமாட்டிகளே ! நாங்கள் இந்தியாவுக்குப்போய் க்ஷேமமாய் திரும்பிவந்ததற்காக நீங்கள் என்னை வரவழைத்து இவ்விருந்து செய்வித்ததற்காக மிகவும் மனப் பூர்வமாய் சந்தோஷப் படுகிறேன். லண்டனுக்கு வந்ததும் அங்குள்ள பிரஜைகள் எங்களைப்பிரியத்துடன் வரவழைத்து எங்களைக்கண்டு களித்தார்கள். இந்த ஏழுமாதகாலமாக நாங்கள் செய்த பிரயாணத்தால் அநேக விஷயங்களை யறிந்துகொண்டதுமன்றி எங்களுக்கு அதிக சந்தோஷமு முண்டானது. ஆபினும் எங்களது ஜன்மபூமிக்கு நாங்கள் சௌக்யமாகத் திரும்பிவந்த தற்காக கடவுளை வணங்குகிறோம். எங்களது குழந்தைகளையும், பந்துக்கள் முதலியவர்களையும் பார்த்து அவர்களுடன் குதூகலமாயிருந்து வருவதும் அவரது கருணையால் தான்.

ஐந்து வருஷங்களுச்கு முன்கனடா முதலிய தேசங்களுக்குப் போய் திரும்பிவந்த பொழுதும் இவ்விதமே நீங்கள் எங்களைச் சந்தோஷப்படுத்தி எங்களுக்கு ஆசி கூறினீர்கள். இப்பொழுதும் அவ்விதமே செய்கிறீர்கள். அரச சக்ரவர்த்தியின் உத்திரவு பிரகாரம் நாங்கள் இப்படி பிரயாணம் செய்து வந்திருக்

கிறோம். பிரிடிஷ் ராஜ்பத்தின் ஒவ்வொரு பாகத்தையும் நாங்கள் பார்க்கும்படி நேர்ந்தது எங்களது பாக்கியமே. இந்தியா கவர்ன்மெண்டார் நாங்கள் ரயிலில் பிரயாணம் செய்தபொழுது செய்திருந்த ஏற்பாடுகளெல்லாம் வெகு திருப்தி கரமாயிருந்தன. அவர்களுக்கு எங்கள் வந்தனத்தை யளிக்கின்றோம். இந்தியாவில் கால்வைத்ததினம் முதற்கொண்டு அதைவிட்டு வருமளவும் இந்தியர்கள் செய்துவந்த உபசரணை மிகச்சிறந்தது. அது எங்கள் ஞாபகத்திலேயேயிருக்கிறது. இது எங்கள் மனதைவிட்டு அகலாது. திரளாக ஜனங்கள் தெருக்களில் கரகோஷம் செய்தார்கள். தெருக்களில் தோரணங்கள், கொடி முதலியவைகளைக்கட்டி வைத்திருந்தார்கள். நாங்கள் வெகு உல்லாசமாக ஊர்வலம் செய்து வந்தபோதிலும், குவாலியரில் பஞ்சத்தால் அவதிப்படும் ஜனங்களை மறக்கவில்லை. அவர்களைக்கண்டு பரிதபித்தோம். 6000 தொகைக்கு மேலுள்ள, குழந்தைகள், ஸ்திரீகள் புருஷர்கள், போஷிக்கப்பட்டு வந்தார்கள். சக்தியுள்ளவர்கள் வேலை செய்து ஜீவித்து வந்தார்கள்.

மேலும் நாங்கள் அநேக சுதேச அரசர்களுடைய ராஜ்யங்களையும் பார்த்து சந்தோஷ மடைந்தோம். அவர்களும், ஜனங்களும் எங்களுக்கு நல்வரவு கூறி தங்களது சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் காப்புசேனை வைத்திருக்கிறார்கள். இதிலுள்ளவர்கள் யுத்தப்பயிற்சிபெற்று யுத்த சமயத்தில் நமக்கு உதவிபுரிய தயாராயிருக்கிறார்கள். இவர்களை இவ்விதம் பிரிடிஷ் ராணுவ உத்தியோகஸ்தர் பழக்கி வருகி

றார். ராஜாக்கள் ராஜவிசுவாசமுள்ளவர்கள். தர்மம் செய்து வருகிறார்கள். பெருந்தன்மையும், தைரியமும் பொருந்தியவர்கள். இவர்களுடன் நான் கூடிக் கலந்துபேசி மிகவும் மகிழ்ந்தேன். நான் 143,000 துருப்புகளைப் பார்வையிட்டேன். இவைகளிலுள்ளவர்கள் நன்றாய் யுத்தப்பயிற்சி யடைந்திருக்கிறார்கள்.

அநேக காலேஜிகளையும், பாடசாலைகளையும் பார்வையிட்டோம். எல்லா சாதியாரும் படித்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அலிகாரிலுள்ள மகமதிய காலேஜூம் ஸ்கூலும் செவ்வனே நடத்தப்பட்டு வருகின்றன. மாணாக்கர்கள் இங்கேயேபுசித்தும், படித்தும் வருகிறார்கள். தேகப் பயிற்சியையும் கவனித்து வருகிறார்கள். க்ரிகட் புட்பால் முதலிய ஆட்டங்களைச் சிரத்தையுடனும், இஷ்டத்துடனும் ஆடி வருகிறார்கள். இவ்வித பாடசாலைகளில்படிக்கும் மாணாக்கர்களுக்கு நற்குணங்களுண்டாகு மென்பதற்குத் தடையில்லை.

30 கோடி ஜனங்களுள்ள இந்தியாவை ஒரு தேசமாக எண்ணக்கூடாது. இது ஒரு பெரிய கண்டத்தைப் போலிருக்கிறது. பற்பல மதஸ்தர் பற்பல பாஷைகளை வழங்கி வருகிறார்கள். நாகரீகம் அந்தந்த அந்தஸ்துக்குத் தகுந்தாற் போலிருக்கிறது. வடக்கேயுள்ள ஹிமயகிரிப்பர்வதத்தின் அழகையும், எல்லையில்லாத வனாந்தரங்களையும், பெரிய நதிகளையும், பர்வதங்களையும், பூர்வீக கட்டடங்களையும், அவைகளுக்குரிய சரித்திர சம்பந்தங்களையும் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

இந்தியர்களுடைய சாந்தகுணம், நல்ல நடவடிக்கை, ராஜ விசுவாசம், மதவைராக்யம் முதலியவைகளையறிந்துகொண்டேன். நமது நியாயமான அரசாட்சியில் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கையும் எனக்குத் தெரியும். நான் பார்த்தவைகளிலிருந்தும், கேட்டதிலிருந்தும் இந்தியர்களின்மீது அநுதாபம் இன்னும் அதிகமாகக்காட்டிவந்தால் இந்தியாவை ஆண்டு வருவது இன்னும் சுலபமாகயிருக்குமென்பதைத்தெரிந்துகொண்டேன். ஒவ்வொருவகுப்பாருடையக்ஷேமத்தை விருத்திசெய்வதில் நமது விருப்பத்திலும், காரியங்களிலும் இன்னுமதிக நம்பிக்கை யுடையவர்களாயிருக்க வேண்டுமென்று நாம் எண்ண வேண்டாமா?

கல்கத்தாவில் புதியவருஷப் பிறப்பின் போதிருந்தோம். விக்டோரியா மகாராணியாரின் மெமோரியல் ஹாலின் அஸ்திபாரக்கல்லை வைப்பதில் மிக்க திருப்தியடைந்தேன். மகாராணியார் நீதி வழுவாமல் ஆண்டுவந்ததை எல்லாரும் சிலாகித்து வருகிறார்கள். 4 அல்லது ஐந்து மாதகாலத்தில் இந்தியாவைச் சுற்றிவந்து அதன் விசேஷங்களைச் செவ்வனே அறிந்து கொள்வது கஷ்டம் தான். ஆனால் இங்கிருந்து இந்தியாவுக்குப் போகும் கனவான்கள் அநுதாபத்தைக் காட்டி, சகோதரத்வத்தை விருத்தி செய்து வரலாம். அப்படிச் செய்தால் இருதேசமும் ஐக்யத்துடன் பலமூன்றி யிருக்கும்; அவ்விதமிருக்குமாறு ஈசன் அருள் புரிவாராக."

---

வைஸிராய் "இளவரசரும் இளவரசியாரும் ங்குவந்தது அன்புவாய்ந்த பிரஜைகளுக்கு அளவு

கடந்த சந்தோஷத்தை உண்டாக்கியது. அவர்கள் நீடுழிவாழும்படி பிரார்த்திக்கின்றார்கள்." என சக்ரவர்த்தியாருக்குத் தந்தி மூலமாய் தெரிவித்தார்.

எட்வர்ட் சக்ரவர்த்தியார் "எனது குமாரனும், மருமகளும் இந்தியாவைச்சுற்றிப் பிரயாணம் செய்கையில் தாங்களும், அன்புள்ள எனது பிரஜைகளும் காட்டிய விசுவாசத்திற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன். அவர்களுக்கு இச்செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன்" என்று தந்திமூலமாகத் தெரிவித்தார்கள்.

1907-ம் வருஷம் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி இங்கிலாந்தில் சிற்சில இடங்களுக்குத்தான் சென்றார்கள். க்ளாஸ்கோவுக்குப் போய் தரும வைத்தியசாலைக்கு அஸ்திவாரக்கல்லை வைத்தார். இவரது மூத்தமகனை கப்பல் சேனையில் யுத்தம் செய்ய கற்றுக்கொள்ள அனுப்பினார். இன்னும் அநேக புதிய கட்டங்களைக்கட்ட அஸ்திவாரக்கல்லை வைத்து சிறந்த பிரசங்கம் செய்தார்.

85700

1908-ம் வருஷம் சர் ஹென்றி பேனர்மென் தேகஅசௌக்யத்தால் தமது ப்ரிமியர் வேலையைவிட்டு சிறிது காலஞ்சென்ற பின் இவர் இறந்துவிடவே, ஜார்ஜ் தாம் மிகுந்த துக்கப்பட்டதாக அனுதாபமான கடிதமொன்று எழுதியனுப்பினார்.

மே மாசத்தில் ஷேப்பேர்ட் புஷில் ஒரு பொருட்காட்சியைத் திறந்தார். பின்னிட்டு கேனடாவுக்குப் போனார். இவருடையவும் ராணியாருடையவும் உரு

வம் ஒவ்வொரு ஸ்டாம்பிலுமிருக்கும்படி கேனடா ராஜாங்கத்தார் அச்சடித்தார்கள். இவ்விதஞ் செய்த தற்காக நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியை வரவழைத்து அத்தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். அவ்வூர் ஜனங்கள் தங்களது ராஜ விசுவாசத்தைக்காண்பித்து நமது சக்ரவர்த்தியை வரவழைத்து நல்வரவும் கூறினார்கள். பின்னிட்டு இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தார்கள்.

1909-ம் வருஷத்தில் அத்தியக்ஷ குரு விசாரணை ஸ்தானத்தின் ஆயிரவருஷ கொண்டாட்டத்திற்குப் போயிருந்தார்கள்.

வட துருவத்திற்குக மேண்டர் பியரி சென்று வந்ததைக் குறித்து தீரவிசாரிக்க விரும்பினார்கள்.

## சிம்மாசனம் ஏறியது.

## 10-வது அதிகாரம்.

---

7-வது எட்வர்ட் சக்ரவர்த்தியார் தேக அசௌக்யமடைந்தார். வரவர மிக்க பலம் குறைந்தவராகக் காணப்பட்டார். ராஜ குடும்பத்தார்களும் பிரஜைகளும் சக்ரவர்த்தி அசௌக்யமடைந்து வருவதைக் கண்டு மிகவும் விசனமடைந்தார்கள். சௌக்யமடையவேண்டுமென்று கடவுளைத் துதிசெய்து வந்தார்கள். லண்டன் நகருக்கு சக்ரவர்த்தி வந்ததும் வியாதி அதிகரித்தது. டாக்டர்கள் வந்து தங்களாலியன்ற மட்டும் வேண்டிய சிகிச்சையைச் செய்து வந்தார்கள். அலெக்சாண்டிரா ராணியார் தமது கணவர் சௌக்யமாயிருக்கையில் கிரீஸுக்கு அரசராயுள்ள தமது

35700
1028



௭-வது எட்வர்ட், சக்ரவர்த்தி.

சகோதரரைப் பார்த்துவர சென்றிருந்தார்கள். இவ் விசன சமாச்சாரத்தைக்கேட்டு உடனே திருப்பி லண்டனுக்கு வந்து விட்டார்கள். ஜார்ஜ் அரசர் ரயில் ஸ்டேஷனுக்குச் சென்று தமது தாயாரை இட்டுக் கொண்டு பக்கிங்ஹாம் அரமனைக்கு வந்தார்கள்.

மே மாசம் 5௳ எல்லாதேசத்து அரசர்களுக்கும் திலகம்போல் விளங்கிக்கொண்டிருந்த நமது எட்வர்ட் சக்ரவர்த்தியார் வியாதியால் மிகவும் வருந்தியது உலகத்திலுள்ளோர் மனதைப் புண்படுத்தி விசனத்தை உண்டாக்கி வந்தது. கடைசியாக 6௳ நடுஇரவில் 11-50ல் நமது சக்ரவர்த்தியார் பரலோகப் பிராப்தியடைந்தார். இவர் சமீபத்தில் அலெக்சாண்டிரா ராணியாரும்,ஜார்ஜும், மேரிராணியும் ப்ரின்ஸஸ்ராயல் ப்ரின்ஸஸ் விக்டோரியா, ப்ரின்ஸஸ் லூயி முதலியவர்களு மிருந்தார்கள். இவர்கள் கொண்ட விசனத்திற்கும் பிரஜைகள் கொண்ட துக்கத்திற்கும் அளவு கிடையாது. ஜார்ஜ் அரசரும், மேரி ராணியாரும், அலெக்சாண்டிரா ராணியாருடைய துக்கத்தை ஆற்றிவர முயன்று வந்தார்கள்.

சக்ரவர்த்தியாரின் உத்தரக்கிரியையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. சிலநாள் யாவரும் சக்ரவர்த்தியாரைப் பார்த்துப்போக வெஸ்ட் மின்ஸ்டர் ஹாலில் சவத்தை வைத்திருக்கும்படி ஜார்ஜ் சக்ரவர்த்தி உத்திரவளித்தார்.

பூர்வகால வழக்கப்படி செண்ட் ஜேம்ஸ் அரமனையில்ஜார்ஜ், அரசசக்ரவரத்தி என்று அறிக்கைப்பத்திரம்

வாசிக்கப்பட்டது. அப்பொழுது ஜார்ஜ் சக்ரவர்த்தியுடன் அவரது இரு குமாரர்களிருந்தார்கள். இவர்களுக்கு அருகில் லாட் ரோஸ்பரி யிருந்தார்.

ஜார்ஜ் தமது துக்க சமாச்சாரத்தை உலகத்தாருக்கும், கப்பற்படை, காலாட்படை முதலியவர்களுக்கும் பின் வருமாறு தெரிவித்தார்கள்.

---

## ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தியருக்கு அனுப்பிய செய்தி.

---

லார்டு மார்லி சக்கிரவர்த்தியின் ஆக்கினைப்படி கவர்னர் ஜெனரலுக்குப் பின்வருமாறு இந்தச் செய்தியைத் தந்தி மூலமாய் அனுப்பியிருக்கிறார்.

"என் பிதா, மகா ராஜா சக்கிரவர்த்தியின் மரணத்தால் நேர்ந்த துக்கத்தை இந்திய ஜனங்கள் அனைவரும் அந்தஸ்து மதம் முதலிய பேதங்களின்றிப் பாராட்டி, அனுதாபமும் விசுவாசமும் காட்டினதை உங்கள் கவர்னர் அனுப்பின செய்தி மூலமாய்த் தெரிந்துகொண்டு ஆழ்ந்த திருப்தியை அடைந்தேன்.

அவருடைய மரணத்தைக்குறித்து எங்கும் ஒரே மாதிரியாய்த் துக்கம் காட்டப்பட்டதை நினைக்க என் மனம் நெகிழ்கின்றது. அவர் இந்தியாவைப் போய்ப் பார்த்து வந்ததை எப்போதும் அன்புடன் ஞாபகத்தில் வைத்திருந்தார். அதன் க்ஷேமம் எப்போதும் அவர் நினைப்பில் குடிகொண்டிருந்தது.

இந்திய மன்னரும் ஜனங்களும் எனது சிம்மாசனத்தில் வைத்திருக்கும் ஆழ்ந்த விசுவாசத்தை நான் அனுபோகத்தில் அறிந்தவன். அவர்கள், நான் சிம்மாசனம் ஏறினதில் எனக்குச்சேவை புரிந்ததை மனதிற் கொண்டேனென்று அவர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

என்னுடைய இந்திய ஏகாதிபத்தியத்தின் க்ஷேமமும் சந்தோஷமும் காலஞ்சென்ற சக்கிரவர்த்திக்கும் அவருக்கு முன்னால் மகாராணியாராயிருந்த சக்கிரவர்த்தினிக்கும் எப்படி அக்கரையும் கவலையுமா யிருந்தனவோ அப்படியே எனக்கும் இருக்கும்."

கப்பற்படைக்கு "30 வருஷகாலமாக நான் உங்களது கப்பற்படையில் ஊழியஞ் செய்துவர பாக்கியஞ் செய்திருந்தேன். அப்படிச்செய்து வந்தமையால் உங்களிடத்திலிருக்கும் ராஜவிசுவாசமும், உங்களது கடமையைச் செய்யவேண்டு மென்ற திடபக்தியும் எனக்கு நன்றாகத் தெரியும். கீர்த்தியுள்ள கப்பற் படையினால் இவைகள் உண்டானவைகள். இவைகள் எப்பொழுதுமிருந்து வருமென்று நம்பி யிருக்கிறேன்" என்று தந்தியனுப்பினார்.

---

## அலக்சாண்டிரா ராணியார் அனுப்பிய செய்தி.

" கதியின்றிச் சிதைந்து கிடக்கும் எனது இருதயத்தின் அடியினின்று எமது பிரஜைகளுக்கு என் உண்மையான நன்றியை அறிவிக்கின்றேன். எமது பிரஜைகளிடத்தில் நாம்வைத்திருக்கும் அன்புக்கு அளவில்லை-

அவர்கள் எவ்வகுப்பாராயினும், உயர்ந்த வகுப்பாரும் தாழ்ந்த வகுப்பாரும், என்னைத் துக்கம் கவர்ந்து கொண்டு சொல்லொணாத வேதனை பிடிக்கும் இந்தச் சமயத்தில் அநுதாபம் காட்டி வருகின்றனர்.

என் கணவர் திடீரெனப் பரலோகம் சென்றதால் என்னுடையதை யெல்லாம் நான் இழந்ததுமன்றி ஜனங்கள் தங்களுடைய ஆப்த நண்பரையும், பிதாவையும், அரசனையும் இழந்துபோயினர். எங்களுக்கு இந்தப் பேரிடி நேரிட்டது அவருடைய திருவுள்ளம். அவருடைய திருவருளால் நாங்கள் அனைவரும் இதைச் சகிக்க அவருடைய துணையைப் பெறுவோமாக. அவர் திருவுளப்படி நடக்கட்டும்.

இனி எனக்கு இக்குள்ள சில காலம்வரை எனக்குத் தேறுதலும் பொறுமையும் உண்டாகுமாறு நீங்கள் தெய்வத்தைப் பிரார்த்திக்கும்போது என்னையும் நினையுங்கள்.

என் அரும்புதல்வன் அவனது பிதாவின் நெறியிலேயே செல்வான். அவனை உங்கள் வசம் ஒப்புவிக்கிறேன். அவனை நீங்கள் போற்றி அவன் பிதாவுக்கு நீங்கள் காட்டி வந்த நிஷ்டையை அவனிடத்திலும் காட்டும்படி வேண்டுகிறேன். எனது அருமை மைந்தனும் மருமகளும் இந்த நிஷ்டைக்குப் பாத்திரர்களாய் அதை இழக்காமலிருக்க இயன்றதைச் செய்வார்களென்று அறிவேன்."

ஜெர்மனி தேசத்து சக்ரவர்த்தி வந்து ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு ஆறுதல் சொன்னார்கள். சவத்தை



அலக்சாண்ட்ரா ராணியார்.

வைத்திருந்த வெஸ்ட் மின்ஸ்டர் ஹாலுக்கு ஜார்ஜ சக்ரவர்த்தியுடன் சென்றார்கள். இம்மண்டபத்திற்குச் சவத்தை எடுத்துக்கொண்டு போகும்பொழுது தமது புத்திரனுடன் கால் நடையாக நடந்து சென்றார்கள். உத்திரக்கிரியை வெகு பயபக்தியுடன் கோயிலில் நடந்தது. அப்பொழுது அம்மண்டபம் நிச்சப்தமாயிருந்தது. சிலகாலம் இராஜ குடும்பத்தார்கள் துக்கம் கொண்டாடினார்கள்.

பால்மோரலுக்கு சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும்விசனத்தை ஆற்றிக்கொள்ள சென்றார்கள். இங்கு அலெக்சாண்டிரா ராணியாரும் தமது புத்திரர்களுடன் வசித்து வந்தார்கள். துக்கம் அடிக்கடி உண்டான போதிலும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு இவர்கள் சவாரி போய் வருவார்கள். இங்குள்ள குடித்தனக்காரர்களை அடிக்கடி மேரிராணியார் போய்ப்பார்த்து அவர்களது க்ஷேம சமாச்சாரங்களை அன்புடன் விசாரித்து வருவார்கள். முன் தமது தகப்பனார், பிரஜைகளிடத்தில் எவ்விதமிருந்தாரோ அவ்விதம் தாமுமிருந்து வருவதே தமது விருப்பம் என்பதை அங்குள்ள ஜனங்களிடத்தில் சொன்னார்கள். இது அல்லவோ சக்ரவர்த்தியிடத்திலுள்ள குணங்களில் சிறந்தது? இப்படியே நடந்து வருகிறார் நமது சக்ரவர்த்தி.

கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது அநேக நற்காரியங்கள் செய்துவரும் சொசைட்டிகளுக்குப் பண உதவி செய்தார். அப்பண்டிகை தினத்தில் கோயிலுக்குத் தமது குழந்தைகளுடன்சென்று தெய்வ ஆராதனை செய்தார்கள்.

1911-ப் வருஷத்தில் ட்யூக் ஆப் காஞட்டை கனடாவுக்கு கவர்னர் ஜெனரலாக நியமித்தார். இவர்கள் தென் ஆபிரிக்காவுக்குச் சென்று அத்தேசத்து பார்லிமெண்டைத் திறந்துவிட்டு இப்பொழுது தான் திரும்பி வந்தார்கள். சக்ரவர்த்தியார் சிம்மாசனதிபதியானபடியால் அங்கு போக முடியாவிடினும் தாம் இன்னொரு சமயம் அத்தேசத்திற்குவர தமக்கு எண்ணமிருக்கிறதென்பதைத் தெரிவித்தபொழுது அத்தேசத்திலுள்ள ப்ரிடிஷ் பிரஜைகளும், போவர்களும் மிகுந்த சந்தோஷங் கொண்டார்களாம்.

பிப்ரவரி மாசத்தில் தமது முதல்லெஜி நடந்தேறியபோது அநேகரை வரவழைத்தார். பின்பு ஜூன் மாதம் 22-ந்தேதியில் பட்டாபிஷேகம் ஜார்ஜ் சக்ரவர்த்தியாருக்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. அச்சமயத்தில் நமது காருண்ய சீலராகிய ஜார்ஜ் சக்ரவர்த்தியாருக்கு இந்தியாவிற்கு பட்டாபிஷேகமான பின் வரவேண்டும் என்ற எண்ணம் உண்டானது. இவ்வெண்ணம் உண்டானதும் இங்கு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இங்கிலாந்திலிருந்து சக்ரவர்த்தி இந்தியாவிற்கு வருவது முதற் தடவையென்று சொல்லலாம். இவருக்கு இந்தியர்களின்மேல் மிகுந்த பிரியமும் அனுதாபமுமிருப்பதால் தான் இவ்விதம் வருகிருர்.

---

# பட்டாபிஷேகம்.

## 11-வது அதிகாரம்.

---

வெஸ்ட் மின்ஸ்டர் கோயிலுக்கு வெளியில்:—லண்டன் மாநகரத்திலுள்ளவர்கள் 1911௵ ஜுன் ௴ 22உ அதிகாலையிலேயே திரள்திரளாக வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலண்டைபோனார்கள். டிக்கட்பெற்றவர்கள் தங்கள். ஸ்தானத்திற்குப்போய் உட்கார்ந்துகொண்டார்கள் தெருக்களில் வெகு ஜனங்கள் கும்பலாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். அநேகர் முந்தியநாள் இரவிலேயே புறப்பட்டு எப்படியாவது நமது அரச சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் பட்டாபிஷேக உடுப்புகளுடன் கண்டுகளிக்க வேண்டுமென்று தக்க பார்வையுள்ளயிடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்களாம்.

பக்கிங்ஹாம் அரமனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் அரமனைக்கு சக்ரவர்த்தி புறப்பட்டதும் அதிர்வெடி சப்தம் முழங்கிற்று. அலங்காரம் செய்யப்பட்டுள்ள தெருக்களெல்லாம் வெகு ரமணீயமாக தென்பட்டதும் தவிர ஜனங்களும் ஆநந்த சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள்.

நமது சக்ரவர்த்தியின் பொன்முலாம் பூசியவண்டி 8 அழகு பொருந்திய குதிரைகளால் பூட்டப்பட்டிருந்தது. குதிரைகளின் அலங்காரம் வெகு நேர்த்தியாயிருந்தது. தேவலோகத்திலிருந்து தேவதைகள் தான் இங்குவந்து இவ்வண்டியில் உட்கார்ந்திருக்கிற

ர்களோவென எண்ணும்படியாயிருந்தது. ஊர்கோலக் காட்சி. வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலுக்குப் போகும்வரையில் லண்டன்மாநகரத்து ஜனங்கள்-புருடர்கள், ஸ்திரீகள், குழந்தைகள்-திரளாகவந்து கொண்டிருந்தார்கள். லண்டன்மாநகரத்து அதிகாரி தமது விலையுயர்ந்த வண்டியிலும், அநேக ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தங்கள் வண்டிகளிலும், சென்றார்கள். இதரதேசத்து மன்னர்களும், பிரபுக்களும் சென்றார்கள். கோயிலுக்குச் சமீபத்தில் சக்ரவர்த்தி வந்தபொழுது ஜனங்கள் சந்தோஷத்தால் கரகோஷம் செய்தார்கள்.

கோயிலுக்குள் காலையில் ஆறு அரை மணிமுதல் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் வரும்வரையில் அதாவது 11-மணிவரையில் 7,000 ஜனங்கள் வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலுக்குள் வந்துகொண்டிருந்தார்கள். 5-மணி தேசகாலம் ஜனங்கள் காத்திருந்தபோதிலும் காலஞ் சென்றதும் தெரியவில்லையாம். அவர்களுக்கு அலுப்புமுண்டாகவில்லையாம். கீழ்போட்டிருந்த இரத்ன கம்பளத்தின் பற்பலவர்ணங்கள் கண்ணுக்கு ஒருவித சந்தோஷத்தை யுண்டாக்கின.

குருமார்கள் அணிந்திருந்த உடுப்புகளும், அரசர்கள் தங்கள் உடுப்புகளோடு யிருந்ததும் வெகுரமணீயமாயிருந்தன. ராஜவம்சத்தார்கள் அணிந்திருந்தஉடுப்புகளும் பார்க்க வெகு அழகாயிருந்தன.

காத்துக்கொண்டிருந்தவர்கள் காலதாமதத்தைச் சிறிதும் மனதில் கருதாமல் அங்குள்ள விசித்ரகாட்சி

யைக் கண்டுகளித்துக்கொண்டிருந்தார்கள். இக்கோயில் பூர்வகாலகட்டடம். இதன் பழைபசுவர்களும், இதன்சிற்பசாஸ்திர அழகும், ஒருபக்கத்தில் ஜனங்களின் மனதைக் கவர்ந்துகொண்டிருந்தபோதிலும், மகுடாபிஷேகச்சடங்கின் விசேஷங்களும் அவைகள் மத சம்பந்தமாயிருப்பதும் இவர்களது ஆத்மார்த்த ஞானத்தை விருத்திசெய்வதுபோலும் தோன்றின.

இவ்விடத்தில்தான் நமது சக்ரவர்த்தி தாம் வகிக்கப்போகும் அபாரவேலையின் அதிகாரத்தை அடைந்தார். "கடவுள் முன்பாக தாம் தமது பிரஜைகளைச் சரியாக ஆளக்கடவேன். அரசர்களுக்கெல்லாம் அரசராக கடவுள் கையிலிருந்து எனது கடமையைப்பெற்றேன்" என்றார். ஏனெனில், ஒருவருஷகாலமாக சக்ரவர்த்தி சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசுபுரிந்துவருகிறாரல்லவா? இவரது செங்கோல் இவரது அருமையான தகப்பனார் காலஞ்சென்ற முதல் தழைத்து ஓங்கி வளர்ந்துவருகிறது. ஆனால் மகுடாபிஷேகச் சடங்கு அப்பொழுது நடக்கவில்லை. இச்சடங்கு கடவுள் முன்பாக ஜனங்களுக்கும் சக்கரவர்த்திக்குமுள்ள ஐக்யத்தைக் குறிக்கிறது. இச்சடங்கின் விஷயங்களெல்லாம் மேற்சொன்ன ஐக்யத்தை உறுதி படுத்துகின்றன.

முன்காலத்துக்கும் இக்காலத்துக்குமுள்ளபேதம்:— முன் காலத்து சடங்குக்கும் இப்பொழுது நடந்துவரும் சடங்குக்கும் வித்யாசம் உண்டாம். முன்காலத்தில் பட்டாபிஷேகத்திற்கு முதல்நாள் இராத்திரி புதிய சக்ரவர்த்தி (London Tower) லண்டன்மா நகரத்திலுள்ள கோபுரத்தைப் பாதுகார்த்து வருவது வழக்கமாம். இங்கிருந்து பட்

டாபிஷேகதினம் காலையில் புறப்பட்டு ராஜபிருதுடன் ஊர் வலம் வருவார். அப்பொழுது யாதொரு கெடுதலும் சம்பவிக்கா வண்ணம் குறிக்கப்பட்ட முக்யமான தெருக்களின் வழியே ஊர்கோலம் செல்லுமாம். வெஸ்ட் மின்ஸ்டர் ஆபீக் கோயிலில் ராஜவிருந்து நடக்குமாம். அச்சமயத்தில் அரசனுடைய வீரன் குதிரையின்மீது ஏறிக்கொண்டு பட்டத்துக்குவரும் அரசன் தகுதியானவனல்லவென்று சொல்பனுடன் யுத்தம்புரிவது வழக்கம். முன்காலத்திலும் பட்டாபிஷேகத்துக்குரியது மதசம்பந்தமானவைகள் தான் முக்கியமானது. இது இப்பொழுதும் அநுசரிக்கப்பட்டுவருகிறது. சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றனவாம். லேடின் பாஷையை முன் வழங்கி வந்தார்களாம். இப்பொழுது இங்கிலீஷ் பாஷையை வழங்கிவருகிறார்கள்.

இந்தியாவில் முன்காலத்தில் பட்டாபிஷேகம் நடந்த மாதிரியும் இப்பொழுது இங்கிலாந்தில் வழங்கிவரும் விதமும் ஆச்சரியமல்லவென்று அநேகர் அபிப்பிராயம். ஏனெனில், முடிசூட்டு, எண்ணெயிடுவது, முத்திரை மோதிரம் தரித்துக்கொள்வது, கடைசியாக சிம்மாசனத்தில் வீற்றிருப்பது முதலியவைகள் டார்சிக இந்தியா முதலிய தேசங்களில் நடந்துவரும் வழக்கமென எரல் ஆப் பூசாம் ஒரு புஸ்தகத்தில் வரைந்திருக்கிறார்.

5 வது ஜார்ஜ் அரசசக்ரவர்த்தி:—நமது அரசசக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் கோயிலுக்குள் போனபோது முக்கிய குருமார் தமது பரிவாரங்களுடன் கிழக்கு, தெற்கு. மேற்கு, வடக்கு முதலிய எல்லா திக்குகளை நோக்கி, "ஐயா, உங்களுடைய அரசராகிய 5-வது ஜார்ஜைப் பாருங்கள். இவர் உங்கள் அரசுக்கு இராஜன் என்பதில் ஐயமேயில்லை. இங்கு அரசரை வழிபடுவதற்கு வந்திருக்கிற நீங்களெல்லாரும் அவருக்கு வழிப்பாடு செய்ய உங்களுக்கிஷ்டமாவென

கேட்டவுடன், அங்குள்ள யாவரும் மிகச் சந்தோஷத்துடன் கெட்டியாய் " ஜார்ஜ் மகாராஜா வாழ்க! ஜார்ஜ் மகாராஜன் வாழ்க" என சொன்னார்கள்.

உடனே குருமார் தெய்வ ஸ்துதி செய்து, நமது அரச சக்ரவர்த்திக்கெதிரில் நின்றுகொண்டு " ஐயா, தங்கள் கனத்துக்கு சத்தியம் செய்துகொடுக்க இஷ்டமாவென்று கேட்டார். " எனக்கு இஷ்டந்தான் என்று மகாராஜா அவர்கள் பதிலுரைத்து சட்டத்தையும், வழக்கத்தையும் அநுசரித்து நியாயமாயும், சட்டப்பிரகாரம் அரசுபுரிவேன்" என்று சத்யம் செய்தார்கள்.

**எண்ணெயிடுதல்:**—பிரதான குருமார் அரசருக்குத் தலையிலும், மார்பிலும், உள்ளங்கைகளிலும் பூர்வகாலத்து விரோதமான கரண்டியில் எண்ணெயெடுத்து சிலுவையைப்போன்ற அடையாளம் செய்து, " அநேக இராஜாக்கள் ஆண்டுவந்ததுபோலவே தாங்களும் ஆண்டுவரும்படி கடவுள் தங்களுக்கு இப்பதவியை அளித்திருக்கிறார். அவருடைய கிருபாகடாட்சத்தால் உமது பிரஜைகளைக் காப்பாற்றியும் உமது அகண்ட இராஜ்யத்தை விவேகத்துடனும், நியாயத்துடனும் மதசம்ப்ரதாயத்துடனும் ஆண்டுவருவீராக" வென ஆசீர்வதித்தார்கள்.

**நியாயம் போருந்திய கத்தி** அரச சக்ரவர்த்தியின் வலதுகையில் கொடுப்பதற்கு முன் நியாயம் பொருந்திய கத்தியை பலிபீடத்தின்மீது வைத்து, பின்பு அதை எடுத்து சக்ரவர்த்தியைப் பார்த்து " இந்த நியாயம் பொருந்திய கத்தியை வகித்து தேவாலயத்தைக் காப்பாற்றும், விதந்துகளுக்கும், அனாதைகளுக்கும் உதவி புரியுங்கள், அழிந்தவைகளைச் சேர்படுத்தி சரியாய் வைத்துக்கொள்ளுங்கள். தப்பிதங்களைக் கண்டித்து சீர்திருத்துங்கள், சரியாயிருப்பதை அவ்விதமேயிருக்கச் செய்யுங்கள்; இவ்விதம் செய்வதால் எல்லா தர்மகாரியங்

களிலும் கீர்த்தியடைவீராக. ஏசுகிறிஸ்துநாதரை விசுவாசத்துடன் பணிந்து இராஜ்யத்தை ஆளும்'' என ஸ்தோத்திரம் செய்து குரு அளித்தார். மாகூமிமை தங்கிய நமது அரச சக்ரவர்த்தி பலிபீடத்தில் கடவுளிடம் பெற்ற கத்தியை வைத்தார். பின்பு இக்கத்தி உரையின்றி சடங்கு முடிகிறவரையிலும் சக்ரவர்த்திக்கு முன் பிடிக்கப்பட்டது. பின்பு அரச சக்ரவர்த்திக்கு இராஜ உடுப்பு தரிக்கப்பட்டது. "கடவுள் தங்களுக்கு ஞானத்தை அளிப்பாராக. அவர் இரக்கத்தால் உம்மை அணைத்துக்கொண்டிருக்கட்டும். நற்காரியம் என்ற உடுப்பை உமக்கு தரிக்கட்டும்'' என்று ஸ்தோத்திரம் முழங்கிற்று. சக்கரவர்த்திகையில் பலிபீடத்திலிருந்து சிலுவையையும், சக்கரம் போன்றுள்ள பரிசுத்தமான ஆர்ப் என்றதையும் எடுத்துக் கொடுத்தார்கள்.

**மோதிரமணிந்து கொள்ளல்:**—பிரதான குரு அவர்கள் இராஜாக்கள் பட்டாபிஷேக காலத்தி லணியும் முத்திரை மோதிரத்தை நமது சக்ரவர்த்தியினுடைய வலது கையில் சிறுவிரலில் போட்டார்கள். கடவுள் ஸ்தோத்திரம் செய்யப்பட்டது.

**இராஜதண்டம்:**—சிலுவை வடிவ மமைத்த இராஜதண்டத்தை வலதுகையிலும், புறாவடிவ மமைத்த இராஜதண்டத்தை இடதுகையிலும் வைத்துக் கொண்டார். வலது கையிலுள்ள தண்டத்தில் துலினன் வைரக்கல் பதிக்கப்பட்டிருக்கிறது. இது அரசருக்குரிய சக்தியையும், நியாயத்தையும் குறிக்கும். இடது கையிலுள்ளது புறாவடிவம் அமைத்தது. இது 'சமம், நீதி முதலியவைகளைக் குறிக்கும். இதன் கட்டளை பின்வருமாறு:—"சமம், நீதி, இவைகளைக் குறிக்கும் இராஜ தண்டத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கடவுள் உமக்கு அளித்திருக்கிற சக்தியைக்கொண்டு இராஜ்யத்தை ஆளும், அவர் உமக்கு உதவிபுரிவார். அதிக அசட்டையாயிராமல் இரக்கமாயிருப்பீராக. இரக்கத்தை மனதில்

பதிய வைத்துக்கொண்டு நியாயத்தை நிறைவேற்றுவீராக துஷ்டர்களைத் தண்டித்து, நல்லவர்களைக் காப்பாற்றும். உமது பிரஜைகள் எந்தவழியில் நடக்கவேண்டுமோ அந்த வழியில் நடக்கும்படி செய்யும்."

**கிரீடம் தரித்தல்:**—இது சுவர்ணத்தால் வட்டமாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஓரத்தில் நல்லவிலையுயர்ந்த முத்துகளும், இரத்தினங்களும் இழைக்கப்பட்டிருக்கின்றன. இது இன்னும் பலவகைச் சித்திர வேலைப்பாடுள்ளதாயும் ஆங்கிலேயர் மிகவும் விரும்புகிற "லிலி" என்ற புஷ்பத்தைப்போன்றசித்திர வேலைகளுள்ளதாயும், முத்து, ரத்தினம், வைடூரியம் முதலியவைகளால் இழைக்கப்பட்டதாயுமிருக்கின்றது. இது நாகரீகத்திற்குத் தகுந்ததாயுமிருக்கிறது.

இது முதலில் பலிபீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. பின்பு பிரதானகுரு அவர்கள் இதை எடுத்து நமது சக்ரவர்த்திக்கு தரித்தார். உடனே இராஜ வம்சத்தவர்களும் தங்கள் தங்கள் கிரீடங்களைத் தரித்துக் கொண்டார்கள். குரு "கடவுள் நியாயமும், கீர்த்தியும் பொருந்திய கிரீடத்தையளிப்பாராக. எங்களது இவ்வித ஆசீர்வாதத்தால் உங்களது செங்கோல் செழித்து ஓங்குக" வென சொன்னார். ஜனங்கள் "நமது சக்ரவர்த்தியைக் கடவுள் காப்பாற்றுக" வென கரகோஷத்துடன் சொன்னார்கள். மேளதாளங்கள் கோஷித்தன. பட்டாபிஷேகச சடங்குமுழுவதும் முடிந்தது என்று யாவருக்கும் தெரியுமாறு பீரங்கிகளின் சப்தம் கேட்டது.

உடனே பைபில் சக்ரவர்த்திக்கு இனமாகஅளித்தபின், அடியில் வருமாறு பிரதமகுரு ஆசீர்வாதம் செய்தார் :—

**ஆசீர்வாதம்:**—"மாக்ஷிமை தங்கிய மகாராஜாவே! இப் புஸ்தகத்தை தங்களுக்கு இனமாக யளிக்கின்றோம். இது இவ்வுலகத்திலுள்ளவைகளில் அதிக விலையுயர்ந்தது. ஞானம் இதிலிருக்கிறது. கடவுள் தங்களை ஆசீர்வதித்து ரக்ஷிப்பா

ராக. ஜனங்களுக்கெல்லாம் தங்களை அரசராக செய்திருக்கிற படியால், தாங்கள் சௌக்யமாய் ஜீவித்திருக்கும்படி தீர்க்காயுளை அளிப்பாராக."

**சிம்மாசனம்:**—700 வருஷங்களுக்கு முன்செய்த அழகான நாற்காலியில் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி உட்கார்ந்து இச்சடங்கைச் செய்து கொண்டார்கள்.

**ராணியாருக்குப் பட்டாபிஷேகம்:**—ஆசீர்வாத மானவுடன் அரச சக்ரவர்த்தி அவர்கள் சிம்மாசனத்தில் பிரதான குரு முதலியவர்களால் உட்கார வைக்கப்பட்டார். மேரி ராணியார் அவர்களுக்கு பட்டாபிஷேகம் பிரதான குருவால் செய்யப்பட்டது. ஆனால் சடங்கு சக்ரவர்த்திக்கு செய்யப்பட்ட மாதிரியல்ல. ராணியாருக்கும் எண்ணெயிடப்பட்டது. ராணியார் வலதுகையில் நாலாவது விரலில் ஒரு மோதிரம் தரிக்கப்பட்டது. இராஜதண்டமும், புறாவடிவமமைந்த தந்தத்தால் செய்யப்பட்ட தண்டமும் கொடுக்கப்பட்டன. இவைகளை யெல்லாம் ராணியார் பெற்று அரச சக்ரவர்த்திக்கு முன்சென்று தலை வணங்கிவிட்டு, தமது சிம்மாசனத்தில் அமர்ந்தார்கள்.

**சக்ரவர்த்தியை வணங்குதல்:**—Archbishop of Canterbnry) பிரதம குருதான் முதலில் நமது அரச சக்ரவர்த்தியை முழங்காலிட்டு வணங்கி சத்யம் செய்தார்கள். மற்ற குருமார்களும் முழங்காலிட்டு வணங்கினார்கள்.

இளம் பிராயமுள்ள இளவரசர் (Prince of Wales) ராஜவுடையைத் தரித்துக் கொண்டு பூர்வமத சம்பிரதாயப்படி சக்ரவர்த்தியை வணங்கினார். சக்ரவர்த்தியோ தகப்பனுர்க்குரிய அன்போடு தமது புத்திரனை ஆலிங்கனம் செய்து கொண்டு அவனை ஆசீர்வதித்தார். ஒன்பது வருஷங்களுக்குமுன் தமது தகப்பனார்—விக்டோரியா மஹாராணியார் காலஞ்சென்ற பிறகு—பட்டத்துக்கு வந்தபொழுது தம்மை



சிம்மாசனம்.

அவர் அன்புடன் ஆலிங்கனம் செய்தது மறந்து போகுமா? பின்பு மற்ற இராஜ வம்சத்தார்கள் அரச சக்ரவர்த்தியை வணங்கி சத்யம் செய்தார்கள்.

**காணிக்கை:**—கடைசியில் அரச சக்ரவர்த்தியும் ராணியாரும் பலிபீட மிருக்கு மிடத்துக்குப்போய், தங்கள் கிரீடங்களையும், இராஜ தண்டங்களையும் ஓரிடத்தில் வைத்துவிட்டு சுவர்ணம், வஸ்திரம் முதலியவைகளைத் தாணிக்கையாக யளித்து பரிசுத்த நற்கருணையைப் பெற்றார்கள்.

**வாழ்த்து:**—உடனே பாண்டு வாத்தியம் "நமது இறைவன் வாழ்க" வென்று முழங்கிற்று.

கோயிலில் மகுடாபிஷேகச் சடங்கு முடிந்ததும் சக்ரவர்த்தி பட்டாபிஷேக காலத்தில் தரிக்கவேண்டிய உடுப்புகளைத் தரித்துக்கொண்டது மன்றி கிரீடத்தையும் சிரசில் வகித்துக்கொண்டு தமது மனைவியாகிய மேரி ராணியுடன் கோயிலிலிருந்து ஊர்கோலம் புறப்பட சித்தமாயிருந்தார்கள். சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் பலிபீடத்தைவிட்டு மேற்குதிக்கிலுள்ள கதவண்டை வந்ததும் வராததும் ஊர்கோலம் ஆரமபமானதென்றே சொல்லலாம். ஆலயத்தில் ஜனங்களின் ஊக்கமும் சந்தோஷமும் அச்சிறந்த தெய்வீக ஸ்தலத்தால் கட்டுப்பட்டிருந்தபோதிலும், இனி அவைகள் வெளிக்கிளம்பாமல் அமிழ்ந்திருக்க முடியவில்லை. சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் கடவுளிடமிருந்து சத்யம் என்றதைக்குறிக்கும் அடையாளத்தைப்பெற்றுக்கொண்டு குதூகலமாயிருக்கும் ஜனங்களுடன் ஊர்கோலம் சென்றார்கள். உடனே வெளியில் காத்துக்கொண்டிருந்த ஜனங்கள் சந்தோஷத்தால்கை

கொட்டினார்கள். ராஜன் வாழ்க என்று சொன்னார்கள். லண்டன்மாநகரத்தைச் சுற்றிப்போனார்கள். எங்கு பார்த்தாலும் ஜனங்கள் திரளாக கண்கொட்டாமல் நமது சக்ரவர்த்தியை பட்டாபிஷேக உடுப்புடன் பார்க்க ஆவலாயிருந்து, இவர்கள் வரும்பொழுது இவர்களைக் கண்டு நல்வரவு கூறுப பாவனையாக கரகோஷம் செய்தார்கள். "நமது ராஜன் வாழ்க" என்று சங்கீதம்பாடினார்கள். இந்திய துருப்புக்கள் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு எதிரிலிருந்தார்கள். இங்கு நமது சக்ரவர்த்தி வந்தவுடன் இந்திய துருப்புக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கரகோஷம் செய்தார்கள். நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் அரமனையின் மெத்தையில் நின்று எல்லா ஜனங்களையும் கண்டு மரியாதையாக தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள்.

பக்கிங்ஹாம் அரண்மனையில் விருந்து:— பக்கிங்ஹாம் அரண்மனையில் தங்கியிருக்கும் ராஜகுடும்பத்தார்களுடன் ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும், முடிதரித்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தவுடண் விருந்துண்டார்கள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை சக்ரவர்த்தியையும், சக்ரவர்த்தினியையும் கண்டு களிக்க ஆவலுடன் தெருக்களிலிருந்த தமது பிரஜைகளையெல்லாம் பார்ப்பதற்காகவே ஊர்கோலம் சென்றார்கள். ஊர்கோலம் சென்றமார்க்கம் சுமார் 8 மைலுக்கு மேலிருக்கும். அரமனையிலிருந்து ஊர்கோலம் புறப்பட்டு லண்டன்மாநகரில் சென்றது. லண்டன் நகரத்து பாலத்தைத் தாண்டியபின் இன்னொரு பக்கமாக ஊர்கோலம் செ

ன்றது. இங்குள்ளவர்கள் தினம் வேலைசெய்து ஜீவிப்பவர்கள். உடுக்க விலையுயர்ந்த வஸ்திரமின்றி சாதாரண உடுப்புடனும் மனக்களிப்புடனும் அரசசக்ரவர்த்தியைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தார்கள். இவர்களது ஊக்கமும் உற்சாகமும் அந்நகரத்தில் மேற்கு திசையிலுள்ள தனவந்தர்களுக்குக் கூட அவ்வளவில்லையாம். குறுகலாயுள்ள தெருக்களில் மின்சார விளக்குகளில்லையாம். ஆனால் சிற்சில விடங்களில் மினிமினிக்கொண்டு மெழுகுவர்த்தி விளக்கும், சாதாரண விளக்கும், கொடிகளுமிருந்ததாம். மேலும் மகரதோரணங்களும், பூபந்தல்களும் வெகு அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தன. ஜனங்கள் வெகு உற்சாகத்துடன் சக்ரவர்த்தியை வாழ்த்தி கரகோஷமும் செய்தார்கள்.

பட்டாபிஷேகத் தினத்தில் ஜனங்கள் எவ்வளவு குதூகலமாயிருந்தார்களோ அதைவிட ஆயிரம் மடங்கு அதிக சந்தோஷத்துடனிருந்தார்களாம். யுத்த கப்பலைச் சேர்ந்தவர்கள் தங்கள் சந்தோஷக்குறியைக் காண்பித்தார்கள். பீரங்கிகளை 8 மைல் தூரம் இழுத்துக்கொண்டு வந்தவர்கள் கிளைத்துப்போனதாக காட்டிக்கொள்ளவில்லை. காலாட்படைகள், குதிரைப்படைகள், முதலியவர்களும் ஆநந்த சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். பூலோகத்திலுள்ள பற்பல தேசங்களிலிருந்தும் சைனியங்கள் மரியாதை செய்யவும் இக்காட்சியைக் கண்டுகளிக்கவும் வந்திருந்தார்கள். இரண்டு தினங்களிலும் இந்திய துருப்புக்களிருந்தன. இவர்களின் சாமர்த்தியத்தைக் கண்டு சக்ரவர்த்தி அவர்கள் புகழ்ந்து பேசினார்கள்.

இந்த ஊர்கோலத்தில் இன்னொரு விசேஷம் என்னவெனில் இந்தியமன்னர்களும் பிரபுக்களும், தங்கள் சுதேச இராஜாங்க உடுப்புகளுடன் வந்திருந்ததே. இந்தியர்களை எங்கு அங்குள்ள ஜனங்கள் கண்டபோதிலும் முகமலர்ச்சியுடன் அவர்களுக்கு மரியாதை செய்துவந்தார்கள். முதல் வண்டியில் பரோடா மகாராஜாயிருந்தார். கடைசி வண்டியில் கொண்டால் தாகூர் சாயபு அவர்கள் தமது மனைவி புத்திரிகளுடனிருந்தார்கள். நமது இந்திய மன்னர்களை அங்குள்ளவர்கள் வெகு ஆவலுடன் பார்த்தார்கள். இவர்களைக் கண்டு வணங்கினார்கள் சிலர். சிலர் இந்திய மன்னர்களும் இந்தியர்களும் வந்திருப்பது நமக்கு மிகுந்த ஆநந்தத்தை யுண்டாக்குகிறதென்றார்கள்.

இவ்விதம் வெகு தூரம் ஊர்கோலம் சென்றபோதிலும் அச்சமயத்தில் ஜனங்கள் காண்பித்த சந்தோஷ அறிகுறியானது நமது சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் மிகுந்த திருப்தியை யுண்டாக்கியதாம். இவர்கள் தங்களது அரமனைக்குச் சென்றவுடன் பட்டாபிஷேக உடுப்புடன் மெத்தையில் நின்றுகொண்டு தெருக்களில் கும்பல் கும்பலாய் நின்று நமது சக்ரவர்த்தியைக் காணவேண்டுமென்ற ஆவலுடனிருந்த ஜனங்களைத் தாமும் புன்சிரிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலநேரம் சென்றபின் ஜனங்கள் தங்களிருப்பிடப்போக ஆரம்பித்தார்கள்.

லண்டன்மாநகரப் பிரவேசம்:—"மகுடாபிஷேக தினத்தன்று லண்டன் நகரத்துக் காட்சியையும், அது கொண்ட கோலத்தையும் எடுத்துரைப்பது அசாத்தி

120A



லண்டன் நகரம்.

வம். அநேக வாரங்களாக அந்நகரத்து ஜனங்கள் மகுடாபிஷேக மகோற்சவத்தின் பொருட்டுத்தத்தம் வீடுகளையும் தெருக்களையும் அலங்கரிப்பதே தொழிலாய்க் கொண்டனர். வீதிகள் யாவும் அதிஅழகாய்ச் செப்பனிடப்பட்டன. மகர தோரணங்களும், பச்சிலைகளும், புஷ்பமாலைகளும் பற்பல வர்ணத்துணிகளும் கொடிகளும், மாடமாளிகை, கூடகோபுரம், சாதாரண வீடு குடிசை, மரம், செடி, என்னும் பேதமின்றி எங்கும் தொங்கி இளந்தென்றற் காற்றில் இன்பமாய் அசைந்துகொண்டிருந்தன. பலவர்ணந் தீட்டிய கொடிகளும், புஷ்ப ஆரங்களும் ஆகாயத்தில் அசைந்துகொண்டிருப்பது காருண்யசீலராம் எமது அரசர்மகுடாபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டு களிகூர 'வாருங்கள்! வாருங்கள்!!' என்று அனைவரையும் அழைப்பதுபோலிருந்தது. விநோதமாயமைத்த வீதிகளின் இருபுறத்தும் பாதசாரிபாய்ச் செல்வோர்க்கென்று இயற்றப்பட்டுள்ள ஒற்றடிப் பாதைகளினழகும் உட்கார்ந்து அரசன் பவனிபோவதைப் பார்ப்பதற்கென்று ஏற்படுத்திய சிங்காரமேடைகளின் சொகுசும், மிக்கவிசித்திரமாயியற்றிய தீபங்களைத் தாங்கி நிற்கும் கணக்கில்லாத தீபஸ்தம்பங்களின் சிறப்பும், அத்தீபங்கள் ஆகாயத்தினின்றும் படிகமாலைகள் அணிபணியாய்த் தொங்குவதுபோலவும், வானத்திலுள்ளயாவும் அங்கு இறங்கி வந்தாற்போலவும், கோடி சூரியர் ஒருங்கே பிரகாசித்தாற்போலவும் பிரகாசித்து இரவைப்பகலாக்கும் சிறப்பும் மகுடாபிஷேகத்திற்கென்று செய்யப்பட்டு ஆங்காங்கு விளங்கும் அதியனேக அலங்காரங்களைப் பார்க்கும்பொருட்டு ஜனங்கள் கும்புகும்பாய்ச்செல்லும் சிற

ப்பும், பளீர்பளீர் என்றொளி விட்டெறியும் வாளும் ஈட்டியும் தரித்துக் குதிரையின்மீது அங்குமிங்கும் விரைந்துசெல்லும் யுத்தவீரரின் சிறப்பும், ஜனங்களுக்கு இடையூறொன்றும் நேரிடா வண்ணம் ஆங்காங்கு நின்றுதங்கடமையைச் செலுத்தும் நகர காவலரின் தொகுப்பும், பார்க்கப் பார்க்கப் பரமானந்தத்தை விளைத்தன. எங்குசென்றாலும் எப்பக்கம் பார்த்தாலும் லண்டன் நகரம் முழுவதும் கொடி ஸ்தம்பங்களடர்ந்த ஓர் காடுபோலவும், புஷ்பங்களும் பச்சிலைகளும் நிறைந்த ஓர் நந்தவனம்போலவும், மன்னர் மன்னனின் மகுடாபிஷேக உற்சவத்தைக் கொண்டாடும்படி அந்நகரத்தார் இயற்றிய ஓர் அலங்கார மண்டபம் போலவும் காணப்பட்டது.

லண்டன் நகரமோ இயல்பாகவே மிக்க அழகு வாய்ந்தது. அவ்வாறாகிய இயற்கை யழகோடு மேற்கூறிய செயற்கையழகும் சேர்ந்த அந்நகரம் மண்டலாதிபதியும் ராஜாதி ராஜனும் எமமனைவரையும் அன்புடன் ஆண்டுவரும் சற்குண சீலருமாகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடைய பட்டாபிஷேக வைபவத்தை மிக்க அவாவுடன் எதிர்பார்த்திருந்து " அவர்களை தமது நகரத்திற்குள் பிரவேசிக்கும்படி அந்நகரவாசிகள் வேண்டிக்கொண்டனர். செண்ட்பால் கோயிலில் கடவுள் ஸ்தோத்திரம் முடிந்தபின் லண்டன் மாநகரத்து அதிபதி (Lord Mayor) நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் உபசாரத்துடன் லண்டன் மாநகரத்திற்குள் பிரவேசிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அவ்விதமே பிரவேசித்து கில்ட்

ஹாலில் அறுசுவையோடு விருந்துண்டார்கள். இச்சமயத்தில் அநேக மன்னர்களும், பட்டவர்த்தனர்களும், பிரபுக்களும், சீமாட்டிகளும் வந்திருந்தார்கள். நமது சக்ரவர்த்தியார் இந்நகரவாசிகள் செய்த மரியாதையைக் கண்டுகளித்தார்கள். ஜனங்களும் தங்கள் விருப்பம் நிறைவேறியதைக்குறித்து அளவற்ற சந்தோஷமடைந்தார்கள்.

## யுத்தகப்பலைப் பார்வையிடல்.

ஜூன்மீ 24உ ஸ்பிட்ஹேட் என்றயிடத்தில் யுத்தகப்பல்களை நமது அரச சக்ரவர்த்தி முதலானவர்கள் பார்வையிட்டார்கள். மங்கோலியா என்ற யுத்தகப்பலில் இந்தியா செக்ரிடெரி, லேடிக்ரூவும் இந்தியாதேசத்து மன்னர்களும் தங்கள் இராஜ்ய கவலையின்றி பாடசாலைப் பிள்ளைகள் தமாஷாக ஒரு முக்ய ஸ்தலத்திற்குச்சென்றால் எவ்விதமிருப்பார்களோ அவ்விதமிருந்தார்கள். மேலும் இராணிகளும் இராஜகுமாரத்திகளுமிருந்தார்கள். பரோடாமகாராணியார், இந்திரா ராஜபுத்திரி, கொண்டால் ராணியும் அவரது இரண்டு இராஜ புத்திரர்களும், பிக்கனீர் ராணி, ஈடர்ராணி, போபால்பீகம், முதலியவர்களிருந்தார்கள். ராணுவ உத்தியோகஸ்தர்கள் ராணுவ உடுப்புகளைத் தரித்துக்கொண்டிருந்தார்கள். இவைகள் ராஜகுமாரத்திகளது உடுப்புகளுக்குச் சமமாக விளங்கிற்று. இந்திய துருப்புக்கள் வேறொரு கப்பலில் தங்கியிருந்தார்கள்.

மங்கோலியாவில் மேலும் இந்தியாவிலுள்ள சிவில் உத்தியோகஸ்தர்களும், சில ஜட்ஜிகளும், எல்லா பாகங்களிலுமுள்ள கௌன்சிலர்களுமிருந்தார்கள். நமது

சக்கரவர்த்தியும் இங்கு வந்தவுடன் பீரங்கிகள் வெடி தீர்ந்தன. 167-பிரிடிஷ் கப்பல்களிலும், 18-இதர தேசத்துக் கப்பல்களிலும் நெருப்பு மஞ்சள் நிறத்துடன் பளீரென்று மின்னிக்கொண்டும், வெண்மை நிறமான புகை மேல்கிளம்பிக்கொண்டும், பீரங்கி சப்தமும், நமது அரச சக்கரவர்த்தி வந்துவிட்டா ரென்பதைத் தெரிவித்தன. இவைகள் மாத்திரமா? ஜனங்கள் சந்தோஷத்துடன் நமது அரசரைக் கண்டவுடன் ஒரு வருக்கொருவர் பேசும் சப்தமும் கேட்டது. நமது அரச சக்ரவர்த்தியும் இவர்கள் நல்வரவு கூறியவுடன் சும்மாயிருக்கவில்லை. இவரது கப்பலிலிருந்து "நல்வரவை அங்கீகரித்து அதிக சந்தோஷமடைந்தோம்" என்பதைக்குறிக்க பீரங்கிவெடிகள் தீர்ந்தன. நமது அரச சக்ரவர்த்தி சாதாரண கல்விமாத்திரமடைந்தவரல்ல. யுத்தகப்பலில் 16 வருஷகாலம் அதிக கஷ்டப்பட்டு உழைத்து எல்லாத் தொழில்களையும் செம்மையாய் அறிந்துகொண்டிருக்கிறார்.

இவ்விதம் எல்லா கப்பல்களையும் பார்வையிட்டு மகிழ்ந்து தமது அரமனைக்குப் புறப்பட்டார்கள். நமது சக்ரவர்த்தியின் முடிசூட்டுக்காக இதர தேசத்து இராஜாக்கள் சிநேக பான்மையாய் தங்கள் விசுவாசத்தையும், விருப்பத்தையும் காண்பிக்கவே தங்கள் கப்பல்களை அனுப்பியிருந்தார்கள். இவைகளில் ஜப்பான் யுத்தகப்பல் முதன்மையான தென்று சொல்லலாம். எல்லாதேசத்து மன்னர்கள் இவ்விதப்செய்தது நமது சக்ரவர்த்தியின் செங்கோலின் நீதிமுறைமையைக்காண்பிக்கின்றதல்லவா? மேலும் இவர்கள் நமது சக்ர

வர்த்திக்க இவ்விதம் மரியாதை செய்தது நமக்கு கௌரவமே. நமது "ஜார்ஜ் மன்னரும் மேரி அரசியும் நீழே வழ்க" என்று ஆசிகூறுவோம்.

## முடிசூட்டு வைபவமும் சக்ரவர்த்தியின் செய்தியும்.

"என்னுடைய பிரஜைகளுக்கு, முடிசூட்டு வைபவமும் அதைச் சார்ந்த விசேஷாதிகளும் இப்போது முடிவுக்கு வந்து விட்டன. அவை நடைபெற்றபோதெல்லாம் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் உள்ள பிரஜைகளின் இருதயம் என்னுடனிருந்த தென்பதை நான் பூரணமாய் உணர்ந்து அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைச் செலுத்த விரும்புகிறேன்.

ஆலயத்தில் நடந்த விசேஷங்களுள் இந்த முடிசூட்டு வைபவமே மிக வசீகரமானதும் ஆழ்ந்து பதியக்கூடியதுமான விசேஷம் என்பதை நான் உணர்கிறேன். என்னை ஜனங்கள் தங்களுடைய அரசனென்று மனமாற உவந்து ஏற்றுக்கொண்ட இந்த விசேஷமே என்னுடைய வாழ்நாளில் ஏற்பட்டுள்ள அனுபவங்களுள் ஆத்மார்த்த அனுபவமென்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

வெஸ்ட்மின்ஸ்டரிலும், லண்டனைச் சேர்ந்த பல பாகங்களிலும் காட்டப்பட்ட விசுவாசத்தினால் மட்டும் நான் இவ்விதம் சொல்லவில்லை; ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலுமிருந்து வந்திருக்கும் நற்செய்திகளாலும் உணர்ந்து சொல்லுகிறேன். இத்தகைய

இராஜபக்தி என்மனத்தில் நன்ருய் ஊன்றி எனக்குப் புதிய ஊக்கத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து வருகிறது. ராணிக்கும் எனக்கும் ஜனங்கள் முழு மனத்துடன் காட்டிய உதாரமானவும் வெளிப்படையு மான அனுதாபம் எங்கள் பலத்துக்கு உண்மையான மூலாதாரமென்று நம்பி காலை முன்வைக்க நம்பிக்கை யுடன் தைரியமுண்டாகிறது.

எனக்கும் என்னுடைய பிரஜைகளுக்கும் இடை யில் எத்தகைய கஷ்ட நிஷ்டூரங்கள் ஏற்பட்டபோதி லும் என் பிரஜைகளுடன் ஒன்றுசேர்ந்து தீரமாயும், சாவதானமாயும், பொதுநல நோக்கமாயும் கடவுளு டைய அருளைக்கொண்டு அவைகளை எதிர்த்துப் போ ராட முடியுமென்று நான் நம்புகிறேன்."

பக்கிங்ஹாம் அரமனை,
1911ஆ ஜூன்மீ 29உ } ஜார்ஜ் R. I.

---

## நமது சக்ரவர்த்தி இந்தியாவுக்கு அனுப்பிய செய்தி.

"ராணி சக்ரவர்த்தினியும், நானும் இந்திய கவர்ன் மெண்டிலிருந்தும், இந்திய பிரஜைகளினிடமிருந்தும் தா ங்கள்அனுப்பிய தந்தியில் அடங்கியுள்ள சந்தோஷசெய் தியை உற்சாகத்துடன் பெற்றுக்கொண்டோம். நீங்கள் எங்களது மனப்பூர்வமான வந்தனங்களை அவர்களுக்கு அளிப்பதுடன் அவர்களது இராஜ விசுவாசத்தைக்கண்டு மனமகிழ்ந்ததாகவும் அவர்களுக்கு உறுதியாகச் சோல்வீ ரேன்று நம்புகிறோம்."



நமது சக்ரவர்த்தியாரின் குழந்தைகள்.

# குழந்தைகளும் அவர்களது படிப்பு முதலியவைகள்.

## 12-வது அதிகாரம்.

நமது சக்ரவர்த்தியாரும் சக்ரவர்த்தினியும் தங்கள் குழந்தைகளை வெகு ஜாக்கிரதையாய் வளர்த்து வந்தார்கள். அவர்களுடைய படிப்பு, நற்சகவாசம், குணம் முதலியவைகளையும் கவனித்து வந்தார்கள். இந்த அதிகாரத்தில் அவர்கள் குழந்தைகளைப்பற்றிய சிறு கதைகளில் சில முக்கியமானவைகளை மாத்திரம் எழுதுகிறோம்.

ப்ரின்ஸ் எட்வர்ட்:—நமது சக்ரவர்த்தியின் மூத்த குமாரர். பட்டத்திற்குரியவர். இவருக்கு 1910-ம் வருஷம் ஜூன்மீ 23௳ இளவரசுபட்டம் சூட்டப் பட்டது. இவருக்கு வயது 17. கப்பற் தொழில் பழகிவரும் காலத்தில் ஒரு சமயம் அசௌக்யமாயிருந்தார். அப்பொழுது மற்ற பிள்ளைகளுக்குக் கொடுக்கும் ஆகாரத்தை கொடுக்காமல் இவர் வாய்க்கு உருசியுள்ளதைக் கொடுத்தபொழுது "நான் அவைகளைப் புசிக்கமாட்டேன், நான் எல்லா பிள்ளைகளும் புசிக்கும் ஆகாரத்தைச்சாப்பிட்டு வரும்படி என் தகப்பனர் சொல்லியிருக்கிறார். அவரிஷ்டப்படி தான் நடப்பேன்" என்றாராம்.

இவருக்குப் படிக்க மிக்க விருப்பம். கடல் சம்பந்தமாக எழுதியுள்ள புஸ்தகங்களைப் படிப்பதில் இவருக்கு ஆசை அதிகம். இவருடைய பிறந்தநாள் வந்த காலத்தில் "உனக்கு என்ன வெகுமதி வேண்டு

மென்று" கேட்டபொழுது, "எனக்கு திமிங்கிலம் பிடிப்பதைப்பற்றிய கதைகளைச் சொல்லுங்கள்" என்றாராம்.

இவர் விக்டோரியா மகாராணியாரின் சரித்திரத்தையும், இராஜ்பத்தை ஆண்டு வந்ததையும் பற்றி செவ்வனே கேட்டிருக்கிறார். ராணியாரிடத்தில் மிகுந்த பக்தி விசுவாசமுண்டு. எட்வர்ட் சக்ரவர்த்திக்கு அன்புள்ள பேரன். எட்வர்ட் சக்ரவர்த்தி சென்றவிடங்களுக்கெல்லாம் ப்ரின்ஸ் எட்வர்ட் போவார். தமது பாட்டனார் பிரசங்கம் செய்தாலும் சரி, அல்லது ஏதாவது புதிய கட்டடத்தைத் திறந்தாலும் சரி அவைகளைக்கண்டு களிப்பார். அலெக்சாண்டிரா ராணியார் தாம் எவ்விதம் வியாதியால் கஷ்டப்படுபவர்களுக்குத்தமது பச்சாத்தாபத்தையும், அனுதாபத்தையும் காட்டிவருகிறார்களோ அம்மாதிரி தமது பேரப்பிள்ளையின் மனதில் இவ்வித நல்லகுணம் பதிந்திருக்கும்படி செய்திருக்கிறார்கள்.

பிராணிகளின்மீது ப்ரின்ஸ் எட்வர்டுக்கு பிரியமுண்டு. ஒரு சமயத்தில் "நான் எப்பொழுதாவது அரசனானால் நாய்களின் வால்களை அறுக்கக்கூடாதென ஒரு சட்டம் செய்வேன்" என்றாராம். இவ்விதமே, இவருடைய சகோதரர்களும் பிராணிகளிடத்தில் மிக்கப் பிரியமுடையவர்களாயிருக்கிறார்கள்

இவருக்கு கீர்த்திபெற்ற மனிதர்களைப்பற்றிய சரித்திரங்களைப் படிக்கவும், கேட்கவும் ஆவல் அதிகமுண்டு. இவர் ஒரு புஸ்தகத்தில் அவ்வித மனிதர்களின் உருவப்படங்களை அவரவர்கள் யோக்கியதை,

அந்தஸ்து முதலியவைகளுக்குத் தக்கவாறு வைத்துக் கொண்டிருந்தார். இவ்விதம் நமது தேசத்திலும் பிள்ளைகள் அவ்வித உருவப்படங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டிருப்பது மிகவும் நல்லது. ஒருநாள் அப்படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அமெரிக்காவுக்கு பிரசிடென்டாயிருந்த மிஸ்டர் ரோஸ்வெல்டின் (Mr. Roosevelt) படத்தைப்பார்த்து "தாதா! மிஸ்டர் ரோஸ்வெல்ட் நல்லவர்தானே?" என்று கேட்டார். பிரசிடெண்ட் ரோஸ்வெல்ட் மிகவும் கெட்டிக்கார மனிதன் என்று எட்வாட் சகரவர்த்தி பதில்சொன்னார். இதைக்கேட்டபின் அப்புஸ்தகத்தில் கெட்டிக்காரமனிதர்களின் படங்களிருக்குமிடத்தில் இதை வைத்துவிட்டு, தாதா, நான் அப்படத்தை முன்னிருந்த இடத்திலிருந்து எடுத்து, கெட்டிக்கார மனிதர்களின் படமிருக்குமிடத்தில் வைத்து விட்டேன் என்றாரும். தமது அருமைப்பேரன் இவ்விதம் செய்ததைக் குறித்து சிரித்துவிட்டு, "அப்பா, பேரக்குழந்தாய்! அப்படி செய்யாதே, அது இருந்தவிடத்திலேயே வைத்துவிடு" என்றாராம்.

இவருக்கு அடிக்கடி உருவப்படம் எடுத்துக் கொள்ள சிறிது மிஷ்டமில்லையாம். ஆனால் இவரது பாட்டனார் தகப்பனார் இவருடைய உருவப்படத்தை எடுத்து வைத்துக்கொள்ள விரும்பின சமயங்களில் அவர்களுடன் உட்கார்ந்து உருவப்படம் சந்தோஷத்துடன் எடுத்துக் கொண்டாராம்.

கம்பியில்லாமற் தந்திகொடுக்கும் விஷயத்தைச் செவ்வனே அறிந்து கொண்டார். இது அற்புதமாய்

சமாச்சாரங்களைத்தெரிவிக்கும் மாதிரியைக்கண்டு பிடிக்கப்பட்டதைக் கொண்டு பரிசைக்ஷ செய்தும் வந்தார். கப்பலோட்டும் விஷயங்களைக்கற்றுக் கொண்ட விஷயம் யாவருக்கும் தெரியுமல்லவா ?

தச்சவேலையும், தோட்ட வேலையும் இவருக்கு நன்றாகத்தெரியும். இவருடைய சகோதரர்களும், சகோதரியும் தோட்ட வேலையைத் திறமையாகச் செய்து வந்தார்கள். எட்வர்ட் சக்ரவர்த்திக்கு தோட்டங்களில் செடிகளை வைத்து வளர்ப்பது மிகப்பிரியம். தமது பேரன் மார்கள் தோட்டத்தில் வைத்து சாப்பாற்றி வரும் செடி கொடிகளைக் கண்டு களித்துவந்தார்.

ப்ரின்ஸஸ் மேரி க்ரிகட் பந்து விளையாட்டு ஆடமாட்டாள். ஆனால் சந்தோஷத்தையுண்டு பண்ணும் மற்ற சுலபமான ஆட்டங்களை ஆடிவருவாள். மேரி அரச குமாரத்தி அழகு பொருந்தியவள். படிப்பில் ஊக்கமும் விவேகமுமுண்டு. இப்பெண்ணரசிக்கு பிரன்சு, ஜெர்மன் பாஷைகளில் பேசத்தெரியும். இப்பெண் மணிக்கு நாய்களிடத்தில் மிகப் பிரியமுண்டு. அநேக நாய்களை அன்புடன் வளர்த்திவந்தாள். தையல்வேலை, பூப்போடுதல், பின்னல் முதலிய சித்திரவேலைகளையும் பழகிவந்தார்கள். தானே செய்த சித்திரவேலையுள்ள சாமான்களை தர்மபரிபாலன சபைகளுக்குக்கொடுத்து உதவி புரிந்து வந்தாள். சங்கீதம் கற்று தேர்ந்திருக்கிறாள். பியானுவாத்தியத்தில் நன்றாக வாசிக்கத்தெரியும். உருவப்படங்கள் எடுக்கவும் கற்றுக்கொண்டாளாம். இவ்வித மல்லவோ உயர்குலத்திலுதித்த பெண் மணிகளிருக்க வேண்டும்? பற்பலவேலைகளைத் தங்கள்

பெண்களுக்கு கற்றுக் கொடுக்க தாய்மார்கள் முன் வரவேண்டும்?

ப்ரின்ஸ் ஆல்பர்ட் ப்ரின்ஸ் எட்வர்டுக்கு இளைய சகோதரர். இவர் கப்பல் தொழிலில் பழகிவருகிறார். வெகு சுறு சுறுப்புள்ளவர். தனது பந்துக்களையும் சிநேகிதர்களையும் ஒரு நொடியில் சிரிக்கச் செய்வார். ஒருதினம் எட்வர்ட் சக்ரவர்த்தி பேரப்பிள்ளைகளுடன் புசித்துக் கொண்டிருக்கும்பொழுது, அடிக்கடி தமது பாட்டனருடன் பேசிக்கொண்டிருந்தார் "எட்வர்ட் சக்ரவர்த்தி "குழந்தாய்! நாம் சாப்பாட்டைமுடிக்கிற வரையிலும் பேசாதே" என்று சொன்னர். இவர் மரிதையாகப் பேசாமலிருந்துபோசனமுண்டார். எல்லாரும் போஜனமுண்டபின் அப்பா! குழந்தாய்! நீ என்னிடத்தில் என்னமோ சொல்ல விரும்பினயே! அது என்ன? இப்பொழுது சொல்" என்று சக்ரவர்த்திகேட்டார். ப்ரின்ஸ் ஆல்பர்ட் விசனமுகத்துடன் "இப்பொழுது காலதாமதமாய் விட்டதே! சொல்லிஎன்னபிரயோசனம்? அப்பொழுது நீர் புசித்த ஆகாரத்தில் ஒரு பூச்சியிருக்கிறதென்று சொல்லவந்தேன். நீங்கள் என்னைப் பேசவேண்டாம் என்று சொன்னீர்கள். இப்பொழுதோ நீங்கள் அதைப்புசித்து விட்டீர்களே!" என்றார்.

ப்ரின்ஸ் ஹென்ரி ப்ரின்ஸ் ஆல்பர்டுக்கு இளையசகோதரர். மெல்லிய தேகமுடையவர். படிக்க பாடசாலைக்குச்சென்று அங்கு ஒருவர் வீட்டில் புசித்துவந்தார். இவர்களுடைய பெற்றோர்கள் "இப்படி நமது பிள்ளை வேறிடத்தில் புசித்துவருவது நல

மல்லவென்று கருதி, தலைமை உபாத்தியாயர் கைவசம் இவரை ஒப்பிவித்து பாடசாலையிலேயே புசித்து வர ஏற்பாடு" செய்தார்கள். ப்ரின்ஸ் ஹென்றி சந்தோஷத்துடன் பாடசாலையில் படித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும், புசித்துக் கொண்டுமிருக்கிறார். வாரத்திற் கொருமுறை தமது பெற்றோர்களுக்கு கடிதம் எழுதி வருகிறார். அவர்களும் இவருக்குச் சொந்த செலவுக்கு சொற்பத் தொகையைக் கொடுத்து வருகிறார்கள். நமது தேசத்தில் சிற்சில விடங்களில் பாடசாலைகளில் படிக்கவும், புசித்து வரவும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது சந்தோஷகரமாயிருக்கிறது. இப்படி நமது பிள்ளைகளும் பாடசாலைகளிலேயேயிருந்து வந்தால் எவ்வளவோ நன்மை பயக்கும். நற்குணங்களும் உண்டாகும்.

ப்ரின்ஸ் ஜார்ஜ் தனது இளையசகோதரன் ப்ரின்ஸ் ஜானுடன் வீட்டிலிருந்து வருகிறார். இவர்களிருவரும் சிறு குழந்தைகள். இவர்களுக்கு ஒரு தாதியிருந்தாள். இவள் இவர்களுடனிருப்பாள். இவர்களுக்கு பட்சி, மிருகம், செடிகொடி புஷ்பம், முதலியவைகளையும், ரயில், ட்ராம்வண்டி முதலியவைகளையும் காண்பித்து அவைகளின் உபயோகங்களைச் சொல்லி வந்தார்கள். சிறு வேடிக்கைக் கதைகளையும், நீதிக்கதைகளையும் சொல்லி வந்தார்கள். இவர்கள் சவாரிபோகும் பொழுது எவரையாவது வழியில் கண்டால் அவருக்கும் மரியாதை செய்யவும் பழக்கப்பட்டு வந்தார்கள்.

மேற்கூறிய எல்லா இராஜ குழந்தைகளுக்கும் நீதி விஷயமும், தெய்வபக்தி, கடவுளின் மகிமை, அவ

ரதி அன்பு, அவரை வணங்கும் முறைமை முதலிய விஷயங்களைப்பற்றி தாயாரும் தந்தையும் போதித்து வந்தார்கள். விக்டோரியா ராணியாரும் கதை ரூபமாக தமக்கு ஒழிந்த நேரத்தில் சொல்லி வந்தார்களாம். தர்மம் சரியானவழியில் செய்ய வேண்டுமென்பதையும் அருகராயுள்ள வர்களுக்கே அது உரியதென்பதையும், பணத்தின் அருமை, பெருமை முதலியவைகளையும் அப்போதைக்கப் போது போதித்தும் வந்தார்கள்.

---

## நமது அரச சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஒவ்வொருநாளும் செய்கிறவேலை.

### 13-வது அதிகாரம்.

---

நமது சக்ரவர்த்தியார் தினம் காலையில் எழுந்திருக்கும் வழக்கமுடையவர். 8-மணிக்கு சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் காலைப்போசனம் சாப்பிடுவார்கள். காலையில் பிரசுரமாகும் பத்திரிகைகளைப் படித்துவிட்டு, அத்தினத்தில் செய்யவேண்டிய வேலை இன்னதென்பதை ராணியாருடன் கலந்துபேசி ஏற்படுத்திக் கொள்வார்.

இவருடைய ப்ரைவேட் சேக்ரிடேரி இவருக்கு வந்திருக்கும் கடிதங்களை எடுத்து முக்கியமானவைகளை முதலிலும், அவசரமில்லாதவைகளை அடியிலும் எடுத்துச் சரியாக வைப்பார். இவர் அவைகளைப் பார்த்து பதில் எழுத வேண்டியவைகளுக்கு அப்போ

டைக்கட்போது பதில் எழுதி விடுவார். தினம் தர்மத்திற்காக கடிதங்கள் வந்துகொண்டே யிருக்கும். இவைகளில் சில கடிதங்கள் அவ்வித தர்மத்திற்கு ஏற்றதாயிராதாம். உதவி செய்யுமுன் ஒவ்வொன்றையும் தீரவிசாரித்து தர்மம்செய்து வருகிறார். பட்டணத்திற்கோ, நகரத்திற்கோ போகவேண்டியதா யிருக்கும்; அவ்வித பிரயாணத்தின் முழுவிவரத்தை முன்னதாகவே எழுதி வைத்துக்கொள்வார்.

காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாருக்கும், 7-வது எட்வர்ட் சக்ரவர்த்திக்கும் கடிதங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கும். அவைகளுக்கெல்லாம் அவர்கள் பதில் எழுதி வந்தார்கள். ஆனால் இப்பொழுது டெலிபூனும், டெலகிராபு மிருக்கின்றமையால் இவைகளின் மூலமாகச் சங்கதிகளையறிந்து உடனுக்குடனே பதில் அனுப்பிவிடுகிறார். இவைகளின் உதவியிருக்கும்பொழுது கடிதம் எழுதுவது அனாவசியமல்லவா? நமது சக்ரவர்த்திக்கு கடிதம்எழுதுவதில் அதிக பிரியமேகிடையாது. ஆயினும் சிலமுக்கிய கடிதங்களை எழுதிவருவார். இவரது தினசரி வேலையோயாவரும் மெச்சுபபடி செய்யப்பட்டு வருகிறது. (Lord Knollys) லார்ட் நோலிஸ் இவருக்கு செக்ரிடெரி. இவர் கடுதாசிகளையும், மனுக்களையும சக்ரவர்த்திக்குக் கொடுத்தவுடன், அவர் இவைகளைப் படித்து தக்க பதில் எழுதும்படி சொல்வார். மற்ற உத்தியோகஸ்தர்கள் அவைகளுக்கு வேண்டிய பதில் எழுதிவிடுவார்கள். சுறுசுறுப்பாயிருந்து ஒவ்வொருநாள் வேலையை அன்றைக்கே செய்து முடிப்பார். நாளைக்குச்

செய்வோம் என்றிருக்க மாட்டார். இவ்விதம் தமது உத்தியோகஸ்தர்களின் உதவியால் அன்றாடவேலை முடிந்து விடுகிறது. இப்படியில்லாவிட்டால் வேலை சக்ரவர்த்திக்குச் சுமந்து விடும்.

காலையில் இவ்விதம் அவசரக் கடிதங்களைப் பார்த்தபின், தம்மைப்பார்க்க வந்தவர்களுடன் சிறிதுநேரம் பேசுவார். பிரிட்டிஷ் ராஜ்யத்திலுள்ள பல இடங்களுக்கு அடிக்கடி புதிய கவர்னர்கள் நியமிக்கப்படுகிறார்களல்லவா? அவர்கள் புறப்படும்பொழுது நமது அரச சக்ரவர்த்தியாரைப் பார்த்து விடைபெற்று வருவது வழக்கம். அவர்களுடன் சிறிதுநேரம் பேசுவார். பின்னிட்டு ஏதாவது தர்ம பரிபாலன சபைகளைச் சேர்ந்தவர்கள் வந்து சக்ரவர்த்தியைக் கண்டு உதவி பெறுவார்கள். இதரதேசத்து மன்னர்களோ, பிரபுக்களோ இங்கிலாந்திற்குவந்து தங்கியிருக்கையில் இவரைப் பார்ப்பார்கள். அவர்களுடன் சரசமாய் பேசுவார். சிற்சில சமயங்களில் லேவியும் நடக்கும். அப்பொழுது தமக்குத் தெரியாதவர்களுடன் அறிமுகம் செய்துகொண்டு அவசரப்படாமல் பேசுவார்.

மத்தியானம் அதாவது $1\frac{1}{2}$ மணிமுதல் 2 மணி வரையிலும் நமது சக்ரவர்த்தி தமது உறவினர்களுடனும், புத்திரர்களுடனும் சிற்றுண்டி புசிப்பார். புசித்தபின் காலையில குதிரைச்சவாரி செய்ய சாவகாசமில்லாமலிருந்தால் குதிரைச்சவாரி செய்வார். மேரிராணியார் திறந்தவண்டியில் சவாரி போய்வருவார்கள்.

பிற்பகலில் தமது பிள்ளைகள் வீட்டிலேயே யிருந்தால் அவர்களுடன் ஏதாவது ஆட்டம் ஆடுவார்.

புதியதபால் தலைகளை அவர்களுக்குக் காண்பிப்பார். அல்லது இவருக்கு கிடைத்த அபூர்வவஸ்துக்களைக் காண்பிப்பார். தமது குழந்தைகளை பற்பல வஸ்துக்களைச் சேகரித்து வரும்படி செய்திருக்கிறார். இப்படி இவர் செய்தமையால் இரண்டுபுத்திரர்கள் அநேக அபூர்வமான வஸ்துக்களைச்சேர்த்து வைத்திருக்கிறார்களாம். இப்பொழுது சென்னை இராஜதானியில் ஒவ்வொருபாடசாலையிலும் மியூசியம் வைக்கப்பட்டு வருகிறது. இதில் பிள்ளைகளாலும் உபாத்தியாயர்களாலும் சேகரிக்கப்பட்ட வஸ்துக்கள் வைக்கப்படுகின்றன. இவ்விதமே பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை தங்கள் வீட்டிலும் பற்பல விநோதப் பொருள்களைச் சேகரித்து வைக்கும்படி உற்சாகப்படுத்தி வந்தால் அவர்களுக்கு வயதாகஆக இது பெருத்த நன்மையை யுண்டாக்கும்.

நமது சக்ரவர்த்தியாருக்குப் பாடுவதிலும், பியானு, வீணைவாசிப்பதிலும் அதிகப்பிரியமில்லை. ஆனால் மேரிராணியாருக்கு அலச்சாண்டிரா ராணியாரைப்போல் இன்பமாய்ப்பாடுவதிலும் வாத்தியங்களில் வாசிப்பதிலும் அதிக விருப்பமுண்டு. அடிக்கடி சாயங்கலவேளையில் சங்கீதவித்வான்களை வரவழைத்து அவர்கள் பாடும் பாடல்களைக் கேட்டிருக்கிறார்கள்.

சாயங்காலவேளையில் ராணியாரும் சக்ரவர்த்தியாரும் தினம்படிக்கிறார்கள். சில புதிய புஸ்தகமாயிருந்தால் அதிலுள்ள விஷயங்களைக் கெட்டியாய்ப் படிப்பார்கள்.

தங்கள் குழந்தைகளைப் பழக்கிவரும்முறை, அவர்களது படிப்பு, முதலிய விஷயங்களையும், கணக்கில்லாதவிருந்துகளுக்குப் போகவேண்டியதையும், குறித்து அஸ்தமிக்கும்வேளையில் தினந்தினம் பேசுவார்கள். நமது எட்வர்ட் சக்ரவர்த்தி காலத்தில் இரவு போஜனத்திற்கு இராத்திரியில் வெகுநேரம்பிடிக்குமாம்; ஆனல் நமது சக்ரவர்த்தியோ இப்படிக்கின்றி இரவுபோசனம் 8 அல்லது 8½ மணிக்கு ஆரம்பிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது இரவில் வெகுநேரம் பிடிக்காது. நாடகசாலைக்கு அல்லது சங்கீதசாலைக்குப் போகவேண்டியிருந்தால் 8 மணிக்குப் போசனமுண்டு சரியானகாலத்தில் அவ்விடங்களுக்குப் போவார்கள். கெட்டநாடகம் முதலியவைகளுக்குப் போகவே மாட்டார்கள்.

தினம் ராஜாங்கத்துக்குரிய வேலைகளைக் கவனித்து வருகிறார். தாமேதினம் அநேக கடிதாசிகளைப் படித்து கையெழுத்தை எழுதுகிறார். மற்ற இராஜ்யங்களில்நடந்துவரும் காரியங்களைத் தெரிந்துகொள்ளுகிறார். சமயம் வரும்பொழுது அவர்களுக்கும் பதில் எழுதிவருகிறார். ஒரு பேர் பெற்ற பிரபு அல்லது கனவான் இறந்தாலும் சரி, அவர்களது பிறந்த வருஷோற்சவம், ஏழை ஜனங்களுக்கு பெரிய ஆபத்துநேரிட்டாலும் சரி, அவ்வித துக்க சமாசாரங்கள் இவருக்குத்தெரிவிக்கப்பட்டவுடன், அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் அநுதாபக் கடிதம் எழுதிவருகிறார்.

அநேக சபைகளுக்கும், வைத்தியசாலை முதலியவைகளுக்கும் சபைத்தலைமையை வகிக்கக் கூப்பிட்டால், போய்ப் பிரசங்கமும் செய்யவார். மந்திரிகள் விசேஷகாரியங்கள் நடக்கப் போகிறதையும், நடந்ததையும் சொல்லுவார்கள். இராஜ்யத்துக்குரிய விஷயங்களையெல்லாம் தெரிந்து கொண்டு வருகிறார்.

வீரச்செய்கை செய்தவர்களுக்குத் தமது சந்தோஷத்தைத் தெரிவித்து மெடல்களைப் பரிசாக அனுப்புவார். நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும், அநேக நற்காரியங்கள் செய்பவர்களுக்கும் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்து கடிதம் எழுதுவார்கள். எரிநதிப்ரவாகத்தால் அடித்துக் கொண்டு போகப்பட்ட வீடு வாசலில்லாத ஜனங்களுக்கு உதவிபுரியும் பொது சபைகளுக்கும் அநுதாபக் கடிதம் எழுதுவார்கள். நமது சக்ரவர்த்தினியார் ஒரு சமயம் "நீங்கள் வீடு வாசலில்லாமல கஷ்டப்படும் ஏழைகளுக்கு உதவிபுரிந்து வருவதைக்கண்டு மகிழ்ச்சி யடைகிறோம். அவர்களுக்கு என் அநுதாபத்தைத் தெரிவிக்கவும். அவர்கள் கஷ்டப்படுகையில் அவர்களுக்கு உதவியாயுள்ள காரியங்களைச் செய்து வருவதைக் குறித்தும் சந்தோஷப்படுகிறேன்" என்று எழுதியிருக்கிறார்கள்.

நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் அதிகாலையில் எழுந்திருப்பார்கள், இரவில் 11 மணி அல்லது 12 மணிக்கு நித்திரை செய்யப் போவார்கள். இராஜ்ய சம்பந்தமான பொது காரியங்கள் நடந்தால் இன்னும் நேரமாகும்.

ஞாயிற்றுக் கிழமையன்று கூடுமான வரையில் வேலை யொன்றும் செய்யமாட்டார்கள். இவர்கள் தங்கள் குழந்தைகளுடன் கோயிலுக்குப் போய் தெய்வ ஆராதனைசெய்வார்கள். ராணியாரவர்கள் தமது அரமனையிலுள்ள வர்களெல்லாம் கோயிலுக்குப் போய்வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அன்று சாயங்காலம் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் தங்கள் குழந்தைகளுடன் "ஞானப் பாட்டுக்களைப் பியானு வாத்தியம் வைத்துக்கொண்டு பாடுவார்கள். பக்திரசமுள்ள புஸ்தகங்களை ராணியார் படிப்பதுண்டு. அவ்விதம்படித்து அநேக பக்திமான்களின் சரித்திரங்களையும் செவ்வனே அறிந்திருக்கிறார்கள். ராணியார் ஏதாவது அவ்வித புஸ்தகங்களிலொன்றை விரும்பினுல், அநேக புஸ்தகங்களை விலைக்கு வாங்கி தமது சினேகிதர்களுக்கும் கொடுப்பார்கள்.

நமது சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் இராஜ்யத்தின் முக்கிய அஸ்திவாரம் "வீட்டில்தான்" என்பதை நம்பியிருக்கின்றார்கள். இவர்களும், இவர்களது குடும்பத்தாரும் கடவுளை ஸ்துதி செய்வதிலும் அவரை வணங்குவதிலும், அவருக்குப் பயந்து நடப்பதிலும் தங்கள் மனதைச்செலுத்தி வருகிறார்கள்.

ஐசுவரியம், பாக்கியம் முதலியவைகளை யுடையவர்களும், ஏழைகளும், கடவுளை தினம் ஸ்துதிசெய்து வரவேண்டும். மேலும் தங்கள் குழந்தைகளையும் அவ்விதமே பழக்கிவரவேண்டும. அரச சக்ரவர்த்தியாரைப்போல் மற்றவர்களும் இருந்துவர முயலுவதே நலமல்லவா ?

---

## குணாதிசயங்கள்,

### 14-வது அதிகாரம்.

நமது சக்ரவர்த்தியார் விக்டோரியா மகாராணியாராலும், அலெக்சாண்டிரா மகாராணியாராலும் கவனிக்கப்பட்டு வந்தமையால் அவர்களது நற்குணங்களைப்பூஷணமாக அணிந்திருக்கிறார்கள்.

இவருக்கு வேட்டையாடுவதில் அதிகப்பிரியம். ஆனால் தமாஷாகச்சிறிதுநேரம் வேட்டையாடிவிட்டு வருவது இவருக்குச் சரிப்படாது. பூராவாக வேட்டையாடுவார். எந்த துஷ்ட மிருகமாயிருந்தாலும் சரி, அதைக்கொன்று விட்டு தான் மறுகாரியம் செய்வார். வேட்டையாடும்பொழுது கஷ்டப்படும்படி வேட்டையாடவிரும்புகிறார். உடனே தேகத்திற்குச் சிரமமின்றி ஜயம் பெற்றுவர விரும்புவதில்லை.

புட்பால் விளையாட்டு இவருக்குப் பிரியம். இவருடைய குமாரர்களுக்கு க்ரிகெட் விளையாடுவதில் பிரியம்.

எவ்விதமான சூதாட்டம் முதலிய பந்தயம்வைத்து ஆடும் விளையாட்டை வெறுக்கிறார். இவ்விதமே ராணியாரும் செய்து வருகிறார்கள். இவர் குதிரைச் சவாரி செய்வதில் சமர்த்தர். தமது குமாரர்களையும் இவ்விதம் செய்வதில் பிரியப்படுகிறார்.

அதிகாலையில் இவருடன் இவரது புத்திரர்களும், புத்திரியும் குதிரை சவாரி செய்து கொண்டு போவார்கள்.

வீட்டுப் பழக்கத்தில் நமது சக்ரவர்த்திக்கும், சக்ரவர்த்தினிக்கும் அதிக பற்று உண்டு. தங்கள் குழ

ந்தைகள் தங்களுடனிருந்தாலொழிய சந்தோஷமாயிருக்க மாட்டார்கள். இவ்விதமே நமது தேசத்திலுள்ள தாய் தந்தைகள் செய்துவர முயலுவது நலமே.

குழந்தைகளை வளர்ப்பதில் மேரிராணியார் மிக்க கவனத்தைச் செலுத்தி வந்திருக்கிறார்கள். இதற்காக அநேக புஸ்தகங்களையும் படித்திருக்கிறார்கள்.

நமது அரச சக்ரவர்த்தி அதிகாலையில் எழுந்திருப்பாரல்லவா? அவ்விதமே தமது குழந்தைகளையும் பழக்கி வந்திருக்கிறார்கள். இவர்கள் ஒரு உபாத்தியாயரின் உதவியால் தினம் கசரத்து செய்து வந்தார்கள். தமது குழந்தைகளுடன் ஒழிவு நேரத்தில் வீட்டில் விளையாடுவார்.

நமது சக்ரவர்த்தி ஒரு ராஜாங்க கடிதத்தில் கையெழுத்து வைத்து தமது தீர்ப்பைத் தெரியப்படுத்த வேண்டிய சமயங்களில் தீர்க்காலோசித்து ஜாக்கிறதையாகச் செய்வாரேயொழிய அவசரப்பட்டு செய்ய மாட்டார். இவருக்குப் படிக்க ஆசை அதிகமுண்டு. இந்தியர்களிடத்தில் மிக்க அனுதாபமுண்டு. இவர் டாம்பீகமாக யிருக்க விரும்புவதே யில்லை. கடவுளிடத்தில் பூர்ண பக்தியுள்ளவர். தம் கடமையைச் சரியாய் கடவுளுக்கும், ஜனங்களுக்கும் செய்ய வேண்டுமென்பது இவரது முக்கிய எண்ணம். தர்மம் செய்வதில் பின்னடைகிறதேயில்லை. எவ்வளவோ தர்மம் சம்மாலியன்றவளை செய்து வருகிறார். இவ்விதமே மேரி ராணியாரும் செய்து வருகிறார்கள்.

இவ்வித நற்குணங்களமைந்த நமது சக்ரவர்த்தியின் ஆளுகை வெகுகாலம் நீடித்திருக்குமாறு கடவுளை நாம் தினம் துதிசெய்து வருவோமாக. இவருக்கும் சக்ரவர்த்தினியாருக்கும் ஈசன் பூர்ணஆயுளையும் தேக பலத்தையும் அளிப்பாராக.

முடிவு.

## 15-வது அதிகாரம்.

நாம் சக்ரவர்த்தியின் சரித்திரம் யாவருக்கும் தெரியவேண்டுமென்ற எண்ணத்துடன் பிரசுரித்திருக்கிறோம். ராஜவிசுவாசமே நமது குடும்பம், கிராமம், நகரம், நமது ஜென்மபூமிமுதலியவைகளின் விருத்திக்கும் முக்கியமானது. அதனால் ஒற்றுமை பலப்படும். மனிதர்களும் ஸ்திரீகளும் ஒற்றுமையுடன் வேலைசெய்துவரவும் மனிதர்கள் சிநேகத்துடனிருந்து வரவும் து உதவியாயிருக்கிறது. ராஜவிசுவாசமே உபாத்தியாயர்களிடத்திலும், பெரியோர்களிடத்திலும், வணக்கமாயும், மரியாதையாயு மிருக்கவும் உதவிபுரிகிறது.

மனிதசாதிக்கு நாம் செய்யவேண்டிய நன்மைகளேபல? ஜனசமூகத்திற் குரியவர்கள் தலைவர்கள் வேண்டும். இத்தலைவர்களை மற்றவர்கள் ராஜவிசுவாசத்துடன் பின்தொடர்ந்து வரவேண்டும். இப்படி செய்யாவிடில் ஜனசமூகம் விருத்தியடையாது.

ஒருகாலத்தில் ஒரு இராக்ஷதனும் அவன் குமாரத்தியுமிருந்தார்கள். அவன் குமார்த்தி ஒரு உழுது பயிர் செய்வோனைப்பிடித்து தனது கைக்குள்வைத்து மூடிக்கொண்டு தனது தகப்பனாரிடத்திற்கு வந்து "அப்பா! என்கைக்குள் ஒருபொருளிருக்கிறதென்று

சொல்லி, அதைக்காண்பிக்கவே, அவன் பெண்ணே! இவனைவிட்டுவிடு, இவன் இல்லாவிடின் நாம் எப்படி ஜீவித்திருப்பது? இவனால்தான் நமக்கு அரிசிமுதலிய வைகள் கிடைக்கின்றன." என்று சொன்னனும். இம் மாதிரி ஒவ்வொன்றும் அதன் ஸ்தானத்திலிருக்க வேண்டும், அதாவது ஜனத்தலைமை நடத்துவோன் தலைவனைகவும், இவன் சொற்படி மற்றவர்கள் கேட்டும் நடக்கவேண்டும். ஞானமுள்ளவர்களையும், தொழிலாளிகளையும் கண்டு ஆநந்தங் கொள்வோ மல்லவா? தொழிலாளி பொதுநன்மைக்கு உதவுகிறன்.

இதர்களுக்காக நம்மாலானமுட்டும் உழைத்து வரமுயலவேண்டும். சுயநயம் பாராட்டவே கூடாது. சீதை ஸ்ரீராமர் வனத்திற்குப் போகும் பொழுது தமது கணவருடன் வருவதாகச் சொன்னாள். ராமர் வரவேண்டாம், காட்டில் வசிப்பது உனக்கு கஷ்டமாகயிருக்கும் என்று சொன்னபொழுது, நான் சுகித்து பட்டணத்தில் வசித்துவரமாட்டேன். என்னகஷ்டங்களிருந்தபோதிலும்சரி, உங்களுடன் நான் வருவேன் என்று திடமாகச் சொல்லி, ஸ்ரீராமருடன் சென்றுவனத்தில் அலைந்து திரிந்து பலக்கஷ்டங்களை யனுபவித்ததும் யாவருக்கும் தெரியுமல்லவா? சீதாப்பிராட்டியாரைப் போல்யாவரு மிருக்கமுயல வேண்டும். இதுவே சிறந்த தர்மம்.

பிரிடிஷ் ராஜங்கத்தால் நமக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாயிருக்கின்றன. முன்காலத்தில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போக வேண்டுமானல் எவ்வளவோ கஷ்டங்களை ஜனங்கள் அநுபவி

த்து வந்தார்கள். இப்பொழுதோ எங்கு பார்த்தா லும் நல்ல ரோடுகளும், கால்வாய்களும், ரயில் பாதை களுமிருக்கின்றன. எவ்விடத்திற்குப் எப்பொழுதுவே ண்டுமானல் உடனே புறப்பட்டு யாதொரு தொந்திர வின்றி போகலாம். திருடர் பயமில்லவேயில்லை. இத ற்காக போலீஸார் செய்துவருகிற உதவியோ அளவற் றது. கொலைகளவு களையும் இவர்கள் செவ்வனே கவனித்து வருகிறார்கள்.

தபால் தந்தி ஆபீஸுகளால் நமக்கு பல நன் மைகள் உண்டாயிருக்கின்றன. இராமேஸுவரத்தி லிருப்பவன் காசிக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினுல் மூன்று தினத்தில் போய் சேர்ந்துவிடும். தந்தி கொடு த்தால் ஒருமணி நேரத்தில் சேர்ந்துவிடும். நமக்கு வேண்டிய விலைமதிப்புள்ள சாமான்களைத் தபால் மார்க்கமாக அனுப்பலாம், வரவழைத்துக்கொள்ள லாம். ஏழைகளுக்கு ஆங்காங்கு தரும ஆஸ்பத்திரி கைகளை ஏற்படுத்தி தக்க வைத்திய பரிக்ஷையிற்றேறி யவர்களைக் கொண்டு இனமாக மருந்து கொடுத்தும் சிகிச்சை செய்தும் வருவது எவ்வளவு பெருத்த நன் மை!

கோர்ட்டுகளில் நியாயம் பலவழக்குகளுக்குகி டைத்து வருகிறது நமது பாக்கிய மல்லவா? ஒவ் வொரு பட்டணத்திலும் சிவில் கிரிமினல் கோர்ட்டுக ளிருக்கின்றன. சென்னையில் ஹைக்கோர்ட்டு மிருக் கிறது. இவைகளால் ஜனங்களுக்கு பல உதவிகள் கிடைக்கின்றன. ஜட்ஜிகளோ தீர்ப்புகளை நியாயம் சிறிதும் தவருமல் அளிக்கின்றனர்கள். பக்ஷபாத

மென்பதே இவர்களிடத்திலில்லை. எச்சாதி யாரானு லும்சரி நியாயமான தீர்ப்பை ஜட்ஜிகள் அளிக்கின்றார் களே தவிர சத்தியம் தவறி நடப்பதேயில்லை. கல்வி யோ எல்லாருக்கும் போதிக்கப்பட்டு வருகிறது. நாம் இங்கிலாந்துக்குப் போய் திரும்பிவரவும் பற்பல சௌ கரியங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. நம்மவர் கள் இங்கிலாந்துக்குப் போய் கலெக்டர், பாரிஷ்டர், டாக்டர் முதலிய பரிக்ஷைகளுக்குப் படித்துவரலாம். அப்படிப்படித்து தேறுகிறவர்களுக்கு நல்ல உத்தி யோகமும் கொடுக்கப்பட்டு வருகிறது. சமாதானமே எங்கும், குடிகொண்டிருக்கிறது. இன்னும் எவ்வள வோ நன்மைகள் பிரிடிஷ் ஆளுகையால் நமக்கு கிடைத்திருக்கின்றன. இவைகளை எடுத்துரைப்பின் இடம் அதிகமாகுமாகையால் இத்துடன் நிறுத்து கிறேம்.

இவ்வித நன்மைகளையளித்து வருகிற பிரிடிஷ் இராஜாங்கத்துக்கு அரச சக்ரவர்த்தியாக நமது ஜார்ஜ் பட்டத்திற்கு வந்திருக்கிறார்.

இவருக்கும் சக்ரவர்த்தினிக்கும் நம்மவர்களின் மீது மிக அனுதாபமுண்டு. இது அவர்கள் பேசின பேச்சுகளால் நன்றாக விளங்கும்.

85700

இவர்கள் நீடூழிகாலம் செங்கோல் நீதிவழுவா மல் செலுத்தி சுகித்து நம்மை ஆண்டுவருமாறு ஜகதீ சன் இவர்களை ஆசீர்வதிக்கும்படி அவரை திருகரண சுத்தியோடு தினம் பிரார்த்தித்து வருவோம்.

நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் வாழ்க !

சுபம்.